விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

Registered as a Newspaper in Srilanka
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 29 செவ்வாய்க்கிழமை (12.05.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 144

## 17ஆம் திகதி பதவியேற்பு

(சென்னை)

சொத்து குவிப்பு வழக்கில் விடுதலையான ஜெயலலிதா மீண்டும் முதல் அமைச்சர் ஆகிறார். அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் அவர் ஒருமனதாக முதல் அமைச்சராக தேர்வு செய்யப்படுவார்.

அநேகமாக 17-ம் திகதி அவர் முதல்வராக பதவி ஏற்க கூடும் என்று தெரிகிறது. 23ஆம் பக்கம் பார்க்க....

## ஞானசார தேரரை கைது செய்ய உத்தரவு

(கொழும்பு)

பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை விமான நிலையத்தில் வைத்து கைது செய்யுமாறு கொழும்பு நீதவான் உத்தரவிட்டுள்ளார். 23ஆம் பக்கம் பார்க்க....


## 20 தொடர்பில் கலந்துரையாடல்

(கொழும்பு)

புதிய தேர்தல் முறை உள்ளிட்ட 20-வது அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த கலந்துரையாடல் இடம் பெற்றதாக தெரிவிக்கப 24ஆம் பக்கம் பார்க்க....

# ஜெயா விடுதலை



## கர்நாடக நீதிமன்றம் பரபரப்புத் தீர்ப்பு

(சென்னை)

சொத்துக்குவிப்பு வழக்கில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உட்பட நால்வரை விடுதலை செய்து கர்நாடக உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது. கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி சி.ஆர்.குமாரசாமி வெளியிட்டுள்ள நேற்றைய தீர்ப்பில், கீழ் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதனால் தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, அவரது நெருங்கிய தோழி சசிகலா மற்றும் சசிகலாவின் உறவினர்களான சுதாகரன், இளவரசி ஆகியோரும் விடுதலையாகியுள்ளார்கள். (24ஆம் பக்கம் பார்க்க)

## சஷீக்கு வைத்தியம் பார்த்த வைத்தியரும் சிக்கலில்!

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவின் மனைவியை விளக்கமறியலில் வைப்பதை தடுப்பதற்காக போலி மருத்துவ சான்றிதழ் வழங்கிய வைத்தியர் ஆனந்த சமரக்கோனுக்கு எதிராக இரகசிய பொலிஸ் பிரிவினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சஷீ வீரவன்சவை கைது செய்யாமல் தடுப்பதற்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் கொழும்பு வைத்தியசாலையின் சட்ட வைத்தியராக செயற்பட்ட 23ஆம் பக்கம் பார்க்க....

## நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிப்போம் - அஜித் பெரேரா

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்தாலும் அதை தோற்கடிப்போம். பாராளுமன்றத்தின் பெரும்பான்மை பலம் எம்மிடம் உள்ளது என வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டு வருவதில் சிலர் மும்முரமாக உள்ளனர். ஆனால் அது தொடர்பில் நாம் கவலை அடையமாட்டோம். பிரதமருக்கு எதிராக 23ஆம் பக்கம் பார்க்க....

# விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி!

## இலங்கைக்கு சாதகமாம்

(லண்டன்)

பிரித்தானிய நாடாளுமன்றத் தேர்தலில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் தோற்கடிக்கப்பட்டுள்ளமை, இலங்கைக்கு நல்ல செய்தியை வழங்கியுள்ளதாக இலங்கைக்கான கொன்சர்வேட்டிவ நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த அமால அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில், பிரித்தானிய நாடாளுமன்றத்தில் முன்பு அங்கம் வகித்த விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கொன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினர்களான லீ ஸ்கொட் மற்றும் நிக் டி பொய்ஸ் ஆகிய இருவரும் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர்.

இத்தேர்தலில் இவர்கள் இருவரும் தோல்வியடைந்தமை, பிரித்தானியாவில் விடுதலைப் புலிகளின் பரப்புரைக்கு ஏற்பட்ட பாரிய பின்னடைவு என்று அரசியல் அவதானிகள் 24ஆம் பக்கம் பார்க்க....

# பொதுத் தேர்தலை நடத்த வேண்டும்

## முன்னாள் அமைச்சர் பீரிஸ் வேண்டுகோள்



(கொழும்பு)

செயற்பாட்டு அரசியலுக்கு முன்னாள் ஜனாதிபதி வரவேண்டும் என்று மகிந்தவிற்கு ஆதரவான தரப்பினர் கோரிக்கை விடுத்து வருவதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் வெகு விரைவில் பொதுத் தேர்தலை நடத்த வேண்டுமென ஜனாதிபதிக்கு ஆதரவான முன்னாள் 24ஆம் பக்கம் பார்க்க....

## இளம் குடும்பப் பெண் கழுத்து வெட்டிக் கொலை




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மூளாய்ப் பகுதியில் இளம் குடும்பப் பெண்ணொருவர் கழுத்து வெட்டப்பட்டு பயங்கரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு மூளாய் கொத்தல்துறை பகுதியில் இடம் பெற்றுள்ளது. இச்சம்பவத்தினால் அங்கு அச்ச 24ஆம் பக்கம் பார்க்க....

## 16 கோடியில் கட்டப்பட்ட வீடுகளை வடக்கில் காணவில்லை

### லலித் வீரதுங்கவிடம் விசாரணை

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதாகக் கூறி 16 கோடியே இருபது லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. ஆனால் வடக்குக் கிழக்கில ஒரு வீடு கூட கட்டப்படவில்லை என்பது தற்பொழுது தெரியவந்துள்ளது.

இதனை அடுத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்கவிடம் எதிர்வரும் 13-ம் திகதி பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை நடத்த உள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும தெரிய வருவதாவது,

யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக வடக்கு கிழக்கில் வீடுகளை இழந்தவர்களுக்கு புதிய வீடுகளை அமைத்துக் கொடுப்பதாகக் கூறி 23ஆம் பக்கம் பார்க்க....

## வாகனச் சில்லு ஏறி இளைஞர் உயிரிழப்பு

(திருவையாறு)

பக்கப் வாகனத்தின் சில்லு தலை மீது ஏறியதால் இளைஞர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இத்துயரச் சம்பவம் நேற்றுக் காலை 9.00 மணியளவில் கிளிநொச்சி புதுக்காடு பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் வட்டக்கச்சி கல்மடுவைச் சேர்ந்த இராசேந்திரம் றெசாந்தன் (வயது 19) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மின்னிணைப்பு வேலைகளுக்காக நேற்றுக்காலை பிக்கப் வாகனத்தின் பின்பகுதியில் நின்றவாறு இளைஞர் சென்றுள்ளார். வீதியில் காணப்பட்ட பள்ளம் ஒன்றை திடீரென அவதானித்த வாகன சாரதி வாகனத்தை 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோத்தபாய மனுத்தாக்கல்

(கொழும்பு)

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவிற்கு எதிராக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

பொலிஸ் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு ஒன்றை அமைப்பதற்கு சட்டத்தில் இடமில்லை என அவர் சட்டத்தரணிகள் ஊடாக சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சரவை, ஜனாதிபதி செயலாளர், பொலிஸ் மா அதிபர், நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர், புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட ஆறு பேர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு சட்ட ரீதியானது என பிரதமர் அலுவலகம் அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.

பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 55-ம் சரத்தின் அடிப்படையில் அமைச்சரவையின் அனுமதியுடன், பொலிஸ் மா அதிபரின் முழுக கண்காணிப்பில் இயங்கி வருவதாகத் தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே இவ்வாறு பொலிஸ் திணைக்களத்தில் 64 பிரிவுகள் இயங்கி வருவதாகத் தெரிவித்துள்ளது. (எ-11)

# ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலிலும் தெரிவான ஜனாதிபதிகள் வாக்குறுதிகளை மாத்திரம் கொடுத்து, நாடாளுமன்றப் பெரும்பான்மையோடு அவர்கள் ஆட்சி செய்தபோதும், இறுதியில் அவர்கள் அளித்த வாக்குறுதிகளை புதிய ஜனாதிபதி மாற்றியமைத்திருக்கின்றார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரத்தை குறைப்பேன் என்று தேர்தலுக்கு முன்னர் கூறிய வாக்குறுதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்றியிருக்கின்றார்.

நாடாளுமன்றப் பெரும்பான்மை இல்லாத மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் ஒரு விசித்திரமான முறையிலே நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கின்றது.

இதற்கு முன்வந்தவர்கள் வாக்குறுதி கொடுத்து வென்றார்கள். இவர் வாக்குறுதி கொடுத்து வென்று அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றியும் காட்டியிருப்பதால் அவர் மீது நம்பிக்கை இருக்கின்றது என்று கூறுகின்றோம்.

நாட்டிலே சட்டத்தின் ஆட்சியும் ஜனநாயகமும் வீழ்ச்சியடையுமாக இருந்தால், முதலிலே மிக மோசமாகப் பாதிப்படைகின்றவர்கள் தமிழ் மக்கள்தான். இது நாம் அனுபவத்தில் கண்ட ஒரு உண்மை.

அடக்கு முறைகளிலிருந்து மீள் எழுவதற்காக நாங்கள் பல்வேறு விதங்களிலே எங்களுடைய போராட்டங்களை முன்னெடுத்து, அவற்றிலே தோல்வியடைந்தோம்.

சர்வதேசத்தின் துணையோடாவது மீண்டும் எமது சொந்த மண்ணிலே எழுந்து நிற்போம் என்று கடந்த ஐந்தாண்டுகளாக மகிந்த அரசோடு சமர் புரிந்து, விட்டுக்கொடுக்காமல் எங்களுடைய நகர்வுகளை மேற்கொண்டோம். அதேவேளை, மகிந்த தமிழ் மக்களுக்கு மட்டும் அநியாயம் செய்ததோடு நின்றுவிடவில்லை.

முஸ்லிம் மக்களுடைய உரிமைகளையும பறித்து அவர்களையும் பகைத்துக் கொண்டு, தன்னுடைய சொந்த சிங்கள மக்களின் ஜனநாயக உரிமைகளையும் பறித்துக் கொண்டு



கோலோச்சினார்.

அதனால்தான் நாட்டிலே இந்த புதிய நல்லாட்சிக்கான மாற்றம் ஏற்பட்டது. சரிந்து கிடந்த ஜனநாயகத்தை நிமிர்த்தி விடுவதிலே தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் பங்கெடுத்தோம். ஜனநாயக வழியிலே போராட எங்களுக்குச் சந்தர்ப்பம் கிட்டியிருக்கின்றது. நாட்டில் ஜனநாயகமே இல்லையென்றிருந்த சூழலிலே, எங்களுடைய போராட்டங்கள் எதனையும் முன்னெடுக்க முடியாது.

அதனால்தான் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவேன் என்று மைத்திரிபால சிறிசேன முன்வந்தபோது, வேறெந்த நிபந்தனைகளுமில்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவருக்கு ஆதரவளித்தது. பகிரங்கமாகக் கொடுத்த வாக்குறுதிகளிலே பலவற்றை அவர் நிறைவேற்றியிருக்கின்றார் என்றார். (எ-11)

# போலிப் பிரசாரம் செய்து சேறு பூச முயற்சிக்கின்றனர்

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை பல்வேறு நபர்களுக்கு அவசியமான விதத்தில் நடந்துகொள்வதற்கு இடமளிக்க வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த, ராஜபக்ஷ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கேட்டு கொண்டுள்ளார்.

விகாரை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளர்.

போலியான பிரசாரம் மேற்கொண்டு என் மீது சேறு பூச முயற்சிக்கிறவர்களை மேலே இருக்கும் கடவுள் பார்த்துக்கொள்வார் என அவர் கூறியுள்ளார்.

நான் எவ்வித பதவியும் கேட்கவில்லை, கேட்கவும் மாட்டேன், பதவிகள் மக்களிடம் கேட்கும் ஒன்றாகும்.

நான் நான்கு நாட்டு வங்கிகளில் 18 மில்லியன் பணம் வைப்பிலிட்டிருப்பதாக சிலர் கூறினார்கள்.

அப்பணத்தை தேடி கண்டு பிடித்து இத் தேவாலயத்திற்கு கட்டிடம் ஒன்றை அமைத்து கொடுக்குமாறு நான் மங்கள சமரவீரவிற்கு கூற விரும்புகிறேன்.

இவ்வாறு உண்மைக்கு புறம்பான கருத்துக்களை வெளியிட்டு பாவத்தை தேடிக் கொள்பவர்களை மேல் இருக்கும் கடவுள் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதை மறந்துவிடக்கூடாது.

நல்லாட்சியில் அடுத்தகட்டமாக சஜின் வாஸை கைது செய்வார்கள், இன்னும் ஒரு வாரத்தில் கோத்தபாயவை கைது செய்வார் கள்,

இப்படியே நல்லாட்சிக்கு எதிரான ஒவ்வொருவரையும் கைது செய்வார்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த அரசாங்கத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை கைது செய்யுமாறு முன்னாள் ஜனாதிபதியே இரகசியமாக தகவல் வழங்கி வருகின்றாரோ என அரசியல் ஆய்வாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அவர் அவ்வாறு செய்யாவிடில் நல்லாட்சி அரசாங்கம் அடுத்ததாக யார் யாரை கைது செய்யும் என்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிக்கு எவ்வாறு தெரியும் என அவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். (எ-11)

## தேர்த்திருவிழாவில் தங்கநகை திருட்டு

(புங்குடுதீவு)

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும் புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் ஆலய தேர்த்திருவிழாவான நேற்று சுமார் 10 பவுண் பெறுமதியான தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளன.

அதிகளவான பக்தர்களின் நடமாட்டத்தின் மத்தியில் இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இத்திருட்டுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் பெண் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சிறுமி ஒருவரின் தங்கச்சங்கிலியை அறுக்க முயற்சி செய்தபோது அச்சிறுமி தனது தாயாரிடம் முறையிட்ட நிலையில் பிரஸ்தாபப் பெண் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். மற்றொரு பெண் தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஏ)


### பணிநிலை வெற்றிடங்கள்

வெளிநாட்டு வானொலி நிறுவனத்திற்கு கீழ்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

அறிவிப்பாளர்
இணையத்தள செய்தி பதிவேற்றுனர்.
நாடக எழுத்தாளர்கள்
செய்தியாளர்கள்
Audio & Video editors

முழுநேரம்/பகுதிநேரம்

ஆர்வமுள்ளவர்கள் கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு உடனடியாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும். (455)

Jobctbc@gmail.com



துறைமுகம் விமான நிலையத்திற்கு 18-55 வயதிற்கு உட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் விரைவாக தேவை. தங்குமிடம்/உணவு வசதிகள் செய்து கொடுக்கப்படும். இவ்வேலையில் பயிற்சி இல்லாதவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படும். உயர்ந்த சம்பளத்துடன் உடை இலவசமாக கொடுக்கப்படும். (425)

தொடர்புகளுக்கு:-0716476000


# எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்க வாய்ப்பில்லை

## மின்சக்தி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட மாட்டாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்படாத அதே நேரம் எரிபொருளுக்கு தட்டுப்பாடும் ஏற்படாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

போலியான பிரசாரங்களை முன் வைத்து பொதுமக்கள் மற்றும் சந்தையில் அச்சத்தை ஏற்படுத்த சிலர் முயற்சித்து வருகின்றனர்.

அதனால் நான் பொறுப்புடன் இந்த விடயத்தை கூறுகின்றேன் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மைத்திரி ஆட்சியில் வழங்கிய எரிபொருள நிவாரணத்தை [illegible] நஷ்டம் ஏற்பட்டுள்ளமையின் காரணமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை விற்பனை செய்யவுள்ளதாக வெளியான தகவல்களும் போலியானவை.

பெற்றோலிய கூட்டுத்தாபனம் கடந்த 3 மாதங்களில் 17 பில்லியன் இலாபம் ஈட்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஊழல் நிறைந்தது என குறிப்பிடுவதை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும்,

கடந்த மூன்று மாதங்களாக நேர்மையான நிர்வாகம் நடைபெற்று வருகின்றது எனவும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)


### தவறிவிட்டது

பழைய மோட்டார் சைக்கிள் உடைய கறுப்பு கலர் battery பெட்டி மூடி பருத்தித்துறை-யாழ்ப்பாணம் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். (ஏ-952)

தொடர்பு கொள்ள:-0778700600



### அதிபர்சேவை தரம்-3

விசேட கருத்தரங்கு
பிரிவு-II புதன், வியாழன் பி.ப 5-7 மணிவரை
பிரிவு-I ஒவ்வொரு ஞாயிறும் 1-5 மணி வரை நடைபெறுகின்றது.
தொ.பே:-0766883394 (ஏ-953)

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)



### ஆசிரியர் தேவை

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தில் கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் போன்ற பயிற்சிநெறிகளைப் போதிப்பதற்கான தகைமையுள்ள ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.

(ஆர்வமுள்ளவர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை கீழ்க்காணும் முகவரிக்கு 20.05.2015 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்)

தலைவர் :
(458) கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் மன்றங்கள் தொடர்பில் புதன்கிழமை தீர்மானிக்கப்படும்

**கருஜெயசூரிய தெரிவிப்பு**

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் நாளை புதன்கிழமை தீர்மானிக்கப்பட உள்ளதாக உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பௌத்த சாசன அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பதவிக் காலம் முடிவடைந்த 234 உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் இதுவரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் நாளை புதன்கிழமை அமைச்சரவை கூடி ஆராயவுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைந்தது. அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை ஒரு மாதத்திற்கு நீடித்திருந்தது.

பதவிக் காலம் பூர்த்தியானதன் பின்னர் தேர்தல் நடத்துவதா அல்லது செயலாளர்களிடம் அதிகாரத்தை ஒப்படைப்பதா என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தொகுதிவாரி அடிப்படையில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு தொகுதிவாரி அடிப்படையில் நடத்த வேண்டுமாயின் மூன்று நான்கு மாத கால அவகாசம் தேவைப்படும்.

தொகுதி நிர்ணய அறிக்கையை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்புதல், வர்த்தமானியில் அறிவித்தல், நாடாளுமன்றில் சமர்ப்பித்தல், மக்களின் கருத்துக்களை கேட்டறிதல் போன்ற பணிகளுக்கு கால அவகாசம் தேவைப்படுகின்றது.

இந்த விடயங்கள் குறித்து ஆராய்ந்து அமைச்சரவை தேர்தல் நடத்துவது குறித்து தீர்மானிக்கும் என அமைச்சர் கரு ஜயசூரிய நேற்று முன்தினம் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-5)


வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

கைகொடுக்கும் நண்பர்கள்
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776

(C-478)


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
25.07.1933

இறப்பு
04.05.2013

**அமரர் திருமதி நாகரெத்தினாம்பாள் தியாகராசா**

திதி- அபரபக்க நவமி
12.05.2015

இரண்டு ஆண்டுகள் சென்றாலும்
வாழ வழி அமைத்த
உங்களை மறக்க முடியுமா
அன்புடனும் பாசத்துடனும்
பேரப்பிள்ளைகளை வளர்த்தீரே...
அவர்களின் ஒளிமயமான வாழ்விற்கு
எம்பெருமான் ஞான செல்வவிநாயகரின்
ஆசியும் அருளும் பெற்று
வெற்றி பெற்றுள்ளீர்...
ஓம் சாந்தி!

409)

25, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

கணவன், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைள்,
பூட்டப்பிள்ளைகள்.

# இராசி பலன்

12.05.2015
(சித்திரை 29, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
நவமி முன்னிரவு 10.55 மணிவரை
அவிட்டம் முற்பகல் 7.59 மணிவரை
இராகுகாலம் 2.54-4.24 மணிவரை
சுபநேரம் 10.24-11.54 மணிவரை
திருநாவுக்கரசர் குருபூசை

வளவன்

**மேடம்:** ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**இடபம்:** சொல்லை செயலாக்கி காட்ட முற்படுவீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், செய்தொழில் மேன்மையுண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**மிதுனம்:** ஆரோக்கியம் சீராகும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

**கடகம்:** நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், மருத்துவச் செலவுகள் கூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**சிம்மம்:** தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**கன்னி:** இனத்தார் பகை மாறி இன்பங்கள் கூடும் நாள், தொழில் வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியம் சீராகும், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**துலாம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** பணத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், உறவினர் வருகையுண்டு, புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**தனுசு:** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகம் அடையும் நாள், நீண்டநாளைய பிணக்குகளில் திருப்பங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்திதரும் வ்கையில் அமையும்.

**மகரம்:** அதிர்ஷ்டகரமான சம்பவங்கள் இடம்பெறலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், வருமானம் திருப்திதரும், பொது வாழ்வில் புகழ்கூடும்.

**கும்பம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சிந்தனை மிகுதியான நாள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மீனம்:** மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், எப்படி நடக்கலாமென நினைத்த காரியம் நல்லபடியாக நடைபெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 196

## பொறாமையிலிருந்து விடுதலை

...உங்களுடைய ஒப்பிடுதலில் தெளிவைக் கொண்டு வாருங்கள் என்றுதான் சொல்கிறேன். பொறாமையில் தெளிவைக் கொண்டு வாருங்கள். ஏன் ஓடிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதில் தெளிவாக இருங்கள். வேறு யாரோ ஒருவர் ஓடிக்கொண்டிருக்கிறார் என்பதற்காக ஓடாதீர்கள். அவ்வளவே.

மக்கள் என்னிடம் கேட்கிறார்கள், ஸ்வாமிஜி, ஒப்பிடாவிட்டால் நாம் எங்கு நின்றுகொண்டு இருக்கிறோம் என்று எவ்வாறு தெரிந்து கொள்வது?

பாருங்கள்.... ஒப்பிடுதலில் இரண்டு வகை இருக்கிறது; ஆக்கபூர்வமான- ஒப்பிடுதல்மற்றும் அழிவுப்பூர்வமான ஒப்பிடுதல்.

ஆக்கபூர்வமான ஒப்பிடுதலில், மற்றவர்களிடம் இருப்பதைப் பார்த்து நீங்கள் அறியாத விடயங்களைப் பற்றித் தெரிந்து கொள்கிறீர்கள். உங்களைச் சுற்றியிருக்கும் விடயங்களைப் பார்த்து உங்கள் அனுபவபூர்வமான அறிவை வளர்த்துக்கொள்கிறீர்கள். விடயங்களை எவ்வாறு இன்னும் நன்றாகச் செய்ய முடியும் என்பதைத் தெரிந்து கொள்கிறீர்கள்.

உண்மையில் இதை ஒப்பிடுதல் என்றுகூடச் சொல்ல முடியாது.



அறிவைச் சம்பாதிப்பது அல்லது அனுபவபூர்வமான அறிவை வளர்த்துக்கொள்வது என்று வேண்டுமானால் சொல்லலாம். மேலும் மற்றவர்களிடம் இருப்பதைப் பார்த்து நீங்கள் பொறாமையோ அல்லது வேறு ஏதாவது விரும்பத்தகாத எண்ணங்களையோ அடைவதில்லை. இதுதான் மிகவும் முக்கியமான விடயம்.

நாம் பேசிக்கொண்டிருக்கும் உண்மையான ஒப்பிடுதல் மற்றவர்களிடம் இருப்பதைப் பார்த்து அந்த உண்மையை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கும் அழிவுப்பூர்மான ஒப்பிடுதலைப் பற்றி.

அழகோ பணமோ அறிவோ அல்லது அந்தஸ்தோ மற்றவர்கள் அனுபவிப்பதை உங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அப்பொழுது தான் நீங்கள் அதை அடைய விரும்ப ஆரம்பித்து கடன் வாங்கப் பட்ட ஆசைகளின் சூழலில் விழுகிறீர்கள். இது பொறாமையை நோக்கி இட்டுச்செல்கிறது.

இந்த உலகத்தில் நீங்கள் எதைச் செய்யினும் அதை விட நன்றாகச் செய்பவர்கள் நிச்சயமாக இருப்பார்கள். நீங்கள் உலகத்தின் தலைசிறந்த பொறியாளராகவோ அல்லது வேகமாக ஓடக்கூடியவராகவோ அல்லது மிகவும் திறமை வாய்ந்த ஒரு ஓவியராகவோ இருப்பதற்கான சாத்தியக்கூறு 99.99 சதவிகிதம் இல்லை. (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி



# அதிசய உலகம்

### நைசாக திருட வந்த நபர்: வாலிபனாக மாறி துவம்சம் செய்த சூப்பர் தாத்தா

பிரித்தானியா மான்செஸ்டரில் தன்னிடம் திருட முயற்சி செய்த கொள்ளையனை 95 வயது தாத்தா துவைத்து எடுத்துள்ளார்.

பிரித்தானியாவில் வசித்து வரும் அர்தூர் கெம்ப்ரிஸ் (Arthur Kamberis ) என்ற 95 வயது தாத்தா இரண்டாம் உலகப் போரில் படைவீரராக பணி செய்தவர். இந்நிலையில் மருந்துக் கடை ஒன்றில் மாத்திரைகள் வாங்கி விட்டு வெளியே வந்துள்ளார்.

அப்போது அவர் கையில் வைத்திருந்த மணி பர்சை திருடன் ஒருவன் திருட முயற்சி செய்துள் ளார்.




ஆனால் தாத்தாவோ தன் கைத்தடியால் திருடனை அடித்து நொறுக்கியுள்ளார்,

இதனைத் தொடர்ந்து வலி தாங்க முடியாமல் திருடன் ஓடிப் போய்விட்டான்.

திருடனை சிசிடிவி காட்சிகளை வைத்து பொலிசார் தேடி வருகின்றனர்.

இது பற்றி அந்த தாத்தா கூறுகையில் "என் மணி பர்சில் கிரெடிட் கார்டு, ஓட்டுநர் உரிமம் மற்றும் என் பேரக் குழந்தைகளின் புகைப்படம்" எல்லாம் வைத்திருந்தேன்.

இதை ஒருவன் திருட நினைத்ததால் அவனை அடித்தேன் என்று கூறியுள்ளார்.



# சமைப்போம் சுவைப்போம்

## குல்ஃபி ஐஸ்கிரீம்



**தே.பொருட்கள்:**

பால் -2 லிட்டர்
பாதாம் -15 கிராம்
பிஸ்தா- 15 கிராம்
முந்திரி - 15 கிராம்
கார்ன்ப்ளேவர் - 1 டேபிள்ஸ்பூன்
ஜெலட்டின் -2 தேக்கரண்டி
ரோஸ் எசன்ஸ் - 1 தேக்கரண்டி
ஐசிங் சுகர் - 200 கிராம்

**செய்முறை**

முதலில் 2 லிட்டர் பாலை நன்கு வற்றக்கய்ச்சி 1 லிட்டர் பாலாக ஆக்கவும். பால் வற்றிவரும் போதே ஐசிங் சுகரை போட வேண்டும். பின் அடுப்பில் இருந்து இறக்கி சிறிது பாலை எடுத்து அதில் கார்ன்ப்ளேவரை கரைத்து பாலில் ஊற்றி மீண்டும் அடுப்பில் வைத்து சிறிய தீயில்வைத்து கிளறவும். நன்கு கெடியானதும் இறக்கவும். பாதாம், முந்திரி, பிஸ்தாவை தண்ணீரில் ஊற வைத்து சிறிது பாலை சேர்த்து நன்கு அரைத்துக் கொள்ளவும். ஜலட்டினை 50 மில்லி சூடான தண்ணீரில் கரைத்துக்கொண்டு கெட்டியான பாலில் முந்திரி கலவை, ஜெலட்டின், ரோஸ் எசன்ஸ் எல்லாவற்றையும் சேர்த்து நன்கு கலக்கி குல்பி மோல்டில் ஊற்றி ப்ரிஜ்ஜில் வைத்து உறையவிடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அப்பர் வாழ்க்கையில் ஆளுமை

வாகீச முனிவர் திருக்கைலை வழியாகச் சென்று கொண்டு இருந்தார். அப்போது இமயமலையில் இராவணன் அகப்பட்டு அழுது கொண்டு இருந்தான். முனிவர் இராவணனை நோக்கி சிவனைநினைத்து சாமகானம்-பாடு என்று கூறிவிட்டு சென்றார். பின் இராவணன் சாமகானம் பாடினான். வாகீசரை தமிழில் திருமுறை பாடச் செய்ய வேண்டுமென்ப தால் திருமுறை பாடி நாட்டில் மருள் நீக்கியராக அவதாரம் எடுக்க எம்பெருமான் அருளினான்.

இளம்வயதில் இருந்தே அப்பரின்வாழ்க்கைசோதனை களமாகவே இருந்தது. இளம் வயதில் பெற்றாரை இழந்து பின் சகோதரியின் கணவரை இழந்து காணப்ப ட்டார். இது விரக்தியுடன் கூடிய நிலையாமையை அறிய வைத் ததுடன் தருமசேனர் என்ற பெயருடன் சமணத்தில்வாழ்ந்தபோது அங்கு இருந்த சோதனை யும் வேதனையும் அப்பரின்ஆளுமையைமேலும் மேம்படுத்திய துடன் ஆழ்மனதில் சிவன் பற்றியபற்று பிற்காலத்தில் மேம்பட சிவநெறியில் வாழ்ந்தவர்.

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை..."

சிவபெருமான் எனக்கு வாழ்த்த வாய் தந்தான். நினைக்கநெஞ்சுதந்தான். தாழ்த்தசென்னி தந்தான். இந்த கொடையை



மறந்து சமணத்தில் புகுந்து விட் டேனே என வருந்தினார்.

எவ்வளவு தூரம் பணிந்து செல்கிறோமோ அவ்வளவு தூரம் உயர்ந்து செல்கி றோம். இதை நாவுக்கரசர் கற்றிலேன், கலை ஞானம் கற்றவரோடு தங்களோடும் உற்றிலேன், நாயிற் கடைப்பட்டேன் பாவியேன், ஏழையேன், ஞானியல்லேன் என்று கூறியதில் தாழ்வு மனப்பான்மையை அறிந்ததும் இறைவனுக்கு முன்னால் தான்சிறியேன் என்பதை எடுத்துக்காட்டுவதுடன் உலகிற்கு முன்னால் அப்பர் தீரமும் வீரமும் உறுதியும் கொண்ட துறவியாகவே இருந்தார்.

" சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாட மறந்தறியேன்"

என்று பாடியது ஒருவர் வாழ்க்கையில்நற்கருமம்செய்வதோடு பக்திபூர்வமாக பூசை செய்வதும் திருமுறை பாடித் துதிக்க வேண்டும் என்பதும் உலகிற்கு வழங் கும் செய்தி ஆகும். அத்து டன் ஊர் களில் உள்ள கோயில்கள் தலயாத்திரை பக்தி இயக் கத்தை முன்னெடுத்தல், தேவார பாடல்களை பாடுதல் போன்றன உள்ளடக்கிய சமூக மையமாக காணப்பட வேண்டும் என்பதை "நிலைபெறுமாறெண் ணுதீ யேல் நெஞ்சே நீ வா..." மேலும் அப்பர் கூத்தப் பிரானுடைய அழகை தான்கண்டு விட்டேன். ஏனையோரும் அறியவேண்டும் என்பதை அத்தா! அழகா! கச்சினழு, சிரித்தமுகம், தலையில் ஊமத்தமலர் இதை காண வேண்டியே மானுட உடம்பு கிடைத்தது. இதை

"ஒன்றியிருந்து நினைமின்கள் உத்தமக் கூனமில்லைக்....."

இறுதியாக இறை வனுடன் அப்பரது உறவு "அடிமை நெறி" தாசமார்க்க மாகும்.

கு.கோபிராஜ்
சண்டிலிப்பாய் வடக்கு

# மனோ தலைமையில் அரசியல் கூட்டணி

இந்திய வம்சாவளி தமிழர்கள் செறிந்து வாழும் 4 மாகாணங்களை பிரதிநிதித்துவப் படுத்தி அரசியல் கட்சிகளின் புதிய கூட்டமைப்பை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே செயற்பட்டு வரும் 3 அரசியல் கட்சிகளே இத்தீர்மானத்தை எடுத்துள்ளன.

வட,கிழக்கில் பெரும்பான்மை அங்கத்துவத்தை கொண்டுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பை போலவே இப்புதிய கூட்டணியும் உருவாக்கப்படவுள்ளது. மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணனின் மலையக மக்கள் முன்னணி, அமைச்சர் ப.திகாம்பரத்தின் தேசிய தொழிலாளர் சங்கம் ஆகிய கட்சிகள் இணைந்தே இப்புதிய கூட்டமைப்பை உருவாக்கவுள்ளன.

இது தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்ற நிலையில், அடுத்த வாரம் இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் என மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மேலும் மேல், ஊவா, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் இக்கட்சிகள் செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

குறித்த கட்சிகள் முன்னர் ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் கூட்டணிகளில் இருந்தன.

இம்மூன்று கட்சிகளும் தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சு பொறுப்புக்களுடன் கூடிய பங்காளிகளாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

### அப்பரின் குருபூசையும் திருமுறை முற்றோதலும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மன்மத வருட பிரதான உற்சவங் களில் இன்று 12 ஆம் திகதி செவ்வா ய்க்கிழமை திருநாவுக்கரசு நாயனார் .குருபூசையும் திருமுறை முற் றோதல் ஆரம்ப நிகழ்வும் இடம்பெறும். (இ

# திருநாவுக்கரசர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையில் முதல்வர் தி. ரவீந்திரநாதன் தலைமையில் திருநாவுக்கரசர் குருபூசை இன்று 12 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று ஐ.றமேசனின் (ஆசிரியர்) சிறப்புரை இடம்பெறவுளது. அத்துடன் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது. (இ-5)

# கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கவில்லையாம்

## பொதுபல சேனா மறுப்பு

அரசியல் நடவடிக்கைகளில் இணைந்து கொள்ளுமாறு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு எவ்வித அழைப்பும் விடுக்கவில்லை என பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

அரசியல் முன்னணியில் இணைந்து கொள்ளுமாறு உத்தியோகபூர்வமாக எவ்வித அழைப்பும் விடுக்கவில்லை, அது தொடர்பில் பேசப்படவும் இல்லை.

கோத்தபாய பொதுபல சேனாவில் போட்டியிட உள்ளதாக வெளி யான ஊடகத் தகவல்களில் எவ்வித உண்மையும் கிடையாது.

இந்தக் குற்றச்சாட்டுக்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என பொதுபல சேனா அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக சர்வதேச மற்றும் தேசிய ரீதியில் பொதுபல சேனாவிற்கு எதிராக சூழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. மனநிலை பாதிக்கப்பட்டவர்களைப போன்று ஊடகங்களில் செய்தி வெளியிட்டு சம்பாத்பதனை விடவும் பிச்சை எடுத்து பிழைக்கலாம்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்பினர்கள் தமது அமைப்புடன் இணைந்து கொண்டுள்ளதாகவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சில முக்கியஸ்தர்கள் இணைந்து கொண்டுள்ளதாகவும் ஊடகங்களில் வெளியிடப்பட்ட செய்தி முற்று முழுதும் பொய்யானது என டிலந்த விதானகே தெரிவித்துள்ளார். (இ-5)

# 27 ஆண்டுகளுக்குப் பின்னர் நாணயத்தாளில் கையொப்பம்

(கொழும்பு)

27 ஆண்டுகளின் பின்னர் நாணய தாளில் ஆங்கில மொழியில் கையொப்பமிடப்பட்டுள்ளது.

நாணயத்தாளில் நிதி அமைச்சர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநரது கையொப்பங்கள் இடப்படுவது வழமையாகும்.

அந்த வகையில் அண்மையில் அச்சிட்டு வெளியிடப்பட்ட நாணயத் தாளில் மத்திய வங்கியின் ஆளுநரது கையொப்பம் ஆங்கில மொழியில் காணப்படுகின்றது. ஐயாயிரம் ரூபா நாணயத்தாளில் இவ்வாறு கையொப்பமிடப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டில் மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றிய நெவில் கருணாரட்ன இதற்கு முன்னர் நாணயத் தாளில் ஆங்கிலத்தில் கையொப்பமிட்டிருந்தார்.

அண்மையில் அச்சிட்டு வெளியிடப்பட்ட நாணயத் தாளில் நிதி அமைச்சர் என்ற ரீதியில் ரவி கருணாநாயக்க சிங்களத்தில் கையொப்பமிட்டுள்ளார். மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் ஆங்கிலத்தில் கையொப்பமிட்டுள்ளார்.

எனினும், அண்மையில் 2014 ஆம் ஆண்டுக்காக வெளியிடப்பட்ட மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் மகேந்திரனின் கையொப்பம் சிங்களத்தில் காணப்படுகின்றது. (இ-5)

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 36.25 சூரி செவ் 9 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: HNDA/ அரச தொழில்<br>தொ.இ: B/4471 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 27.5 செவ் 12 இல்<br>உயரம்: 4'3"<br>தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்<br>தொ.இ: G/1174 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 49.5 செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/ லண்டன் PR<br>தொ.இ: B/4473 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 46 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 4'11"<br>தகைமை/தொழில்:தனியார்/கனடா PR<br>தொ.இ: G/1175 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 10 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/4477 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 11.5 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1184 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 28.5 செவ் 12 இல்<br>உயரம்: 158 Cm<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/4478 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 60 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/ தாதி<br>தொ.இ: G/1186 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக்கோரி மருதனார்மடம் வலயக்கல்வி பணிமனைமுன் போர்.

(யாழ்ப்பாணம்)

மாதகல் நுணசை வித்தியாலயத்தில் காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக்கோரி அப்பிரதேசத்தை சேர்ந்த பெற்றோர்கள் மருதனார் மடம் வலயக்கல்வி பணிமனை முனபாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவ்வார்ப்பாட்டம் நேற் றுக் காலை 9 மணியளவில் இடம் பெற்றுள்ளது. ஆர்ப்பாட்டத்தின் முடிவில் வலயக்கல்வி பணிப்பாளருக்கு பெறறோர்கள் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினை யும் கையளித்துள்ளனர்.

மருதனார் மடம் வலயக்கல்வி பணிமனை முன்பாக ஒன்றுகூடிய பாடசாலையின் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் அமைதியான முறையில் தமது எதிர்ப்




பினை காட்டியிருந்தனர். பின்னர் தமது பாடசாலையில் நீண்ட காலமாக காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முக்கியமான பாடங்களாகவுள்ள கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களுக்கான ஆசிரியர்கள் எமது பாடசாலையில் நீண்ட காலமாக பற்றாக்குறையாக இருந்து வருகின்றது. குறிப்பாக இப்பாடங்கள் அதிமுக்கிய பாடங்களாக காணப்படுவதனால் இப்பாட சித்தி இல்லாமல் மாணவர்கள் அடுத்து நிலைக்கு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. கல்வி பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் குறித்த இரு பாடங்களிலும் எமது மாணவர்கள் சித்தி எய்துவது என்பது மிக கடினமாகவே உள்ளது.

இதனால் எமது மாணவர்கள் 11 ஆம் தரத்துடன் தமது கல்வியை இடைநிறுத்தி கொள்ளும் துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது. இது தொடர்பில் பலதடவைகள் உரிய அதிகாரிகளுக்கு தெரியபடுத்தியிருந்த போதிலும் அவர்கள் எமது மாணவர்களின் பிரச்சினைகளை கண்டு கொள்ளவில்லை. இந்த நிலை தொடருமானால் எமது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என பெற்றோர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தின் முடிவில் பெற்றோர்களால் மருதனார் மடம் வலயக் கல்வி பணிப்பாளருக்கு கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, எமது கிராமத்திலுள்ள நுணசை வித்தியாலயத்தில் இபபாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்ட காலந்தொடக்கம் (2013) கணிதம், விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களுக்கும் நிரந்தர ஆசிரியர் ஒழுங்காக நியமனம் செய்யப்படவில்லை.

இதன் காரணமாக கடந்த க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் ஏனைய பாடங்களில் சித்தியெய்திய மாணவர்கள் இவ்விரு பாடங்களிலும் சித்தியெய்தாமையால் க.பொ.த உயர்தரக் கல்வியை கற்க முடியாத நிலையுள்ளதுடன் சித்திய டைந்தோர் வீதமும் பூச்சியமாகவும் உள்ளது.

கடந்த வருடம் இப்பாடசாலையில் விஞ்ஞானம் கற்பிப்பதற்கு



சுயவிருப்புடன் இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியையும் வேறு பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இதனால் மாணவர்கள் கல்வி கற்றலில் அநாதரவான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். தொடர்ந்தும் இந்நிலை பேணப்படாமல் உடனே எமக்கு கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கும் நிரந்தர ஆசிரியர்களை இடமாற்றித் தரும்படி ஒழுங்கு செய்யும்படியும் கணித பாடம் கற்பிக்கும் திருமதி சித்திரா விக்னேஸ்வரன் இடமாற்றம் செய்யப்படும் பட்சத்தில் தாம் இங்கு வந்து கடமையாற்ற எமக்கு விருப்பம் தெரிவித்துள்ளார் என்பதனையும் தங்கள் கவனத்திற்கு அறியத்தருகிறோம். எனவே இது தொடர்பாக ஏற்ற ஒழுங்குகள் செய்து தரும்படி தயவுடன் கேட்டுக் கொள்கிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அமெரிக்கா உதவ வேண்டும்

(யாழ்ப்பாணம்)

**உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து அண்மை யில் விடுவிக்கப்பட்ட வலி.வடக்கு, வலிகிழக்கு பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்குமிடத்தே முழுமையாக மக்கள் வந்து குடியேற முடியும். இவ்வாறான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அமெரிக்கா தொடர்ந்தும் உதவ வேண்டு மென யாழ். வந்த அமெரிக்க தூதரக அதிகாரிக ளிடம் வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.**

அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க தூதரக அதிகாரிகள் நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டனர்.

இதன் போது இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டதுடன் அங்கு மீளக் குடியமர்ந்து இருக்கின்ற மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுக் குழுவின் தலைவர் எஸ்.சஜீவனையும் சந்தித்து நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்ததுடன் அங்குள்ள பிரச்சினைகள் மற்றும் தேவைகள் என்பன தொடர்பில் ஆராய்ந்தனர். இச் சந்திப்புத் தொடர்பாக மீள்குடியேற்றக் குழுத் தலைவர் மேலும் தெரிவிக்கையில்.

இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமாக நீண்ட காலமாக இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து வந்த வலி.வடக்கு மற்றும் வலி.கிழக்கு பகுதிகளில் முதற்கட்டமாக ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை ஆட்சிக்கு வந்திருக்கும் புதிய அரசாங்கம் விடுவித்துள்ளது. இவ்வாறு மக்களது சொந்த நிலத்தை விடுவித்து மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட பலரும் வருகை தந்திருந்தனர்.

இதன்போதும் இதன் பின்னரும் மீள்குடியமரும் மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் அதேபோன்று ஏனைய காணிகளையும் விடுவிப்பதாகவும் மீள்குடியேற்ற அமைச்சர் உள்ளிட்ட அரச தரப்பினர்களினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் மக்கள் குடியமர அனுமதிக்கப்பட்டு ஒரு சில மாதங்கள் கடந்த போதும் அங்கு குடியமர்ந்த மக்களுக்கு எந்தவித அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படாத நிலையே இருக்கின்றது.

குறிப்பாக பற்றைகள் நிரம்பி காடுகளாகவும் வீடுகளற்ற நிலையில் தரைமட்டமாகவும் விடுவிக்கப்பட்ட பிரதேசம் முழுவதும் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையிலும் குடியமர்ந்த மக்களுக்கு தற்காலிக வீடுகளோ, மலசலகூட வசதிகளோ, ஏற்படுத்திக் கொடுக்கப்பட இல்லை. அதேபோன்று போக்குவரத்தும் பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.

ஆகவே உடனடியாக தற்காலிக வீடுகள் ஆயினும் வழங்கினால் அந்த மக்கள் மீள்குடியமர முடியும். இதற்கு வெளிநாடுகளினதும் உதவிகள அவசியம் வேண்டும். ஆகவே அமெரிக்கா போன்ற நாடுகள் இதற்கு உதவிகளை வழங்க வேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவித்தார். அமெரிக்க மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் ஆதரவுடன் ஆட்சிக்கு புதிதாக வந்திருக்கின்ற அரசாங்கம் மக்களின் ஏனையநிலங்களையும் விடுவிக்க அழுத்தம் கொடுக்க வேண்டும்

ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலத்தில் குறிப்பிட்டளவான நிலம் விடுவிக்கப்பட்டுள்ளன. ஏனைய ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் அளவுடைய மக்களின் காணிகள் இராணுவத்தின் வசமே தற்போதும் உள்ளன.

அவற்றை மீட்பதற்கு அமெரிக்கா அழுத்தம் வழங்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-4)

## ஆசிரியர்களுக்கு வருட ஆரம்பத்தில் இனி இடமாற்றம் வழங்க நடவடிக்கை

### வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வருட நடுப்பகுதியில் ஆசிரிய இடமாற்றம் நடைபெறுவதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பான மேன்முறையீட்டை மீளாய்வு செய்வதன் மூலம் இனிவரும் காலங்களில் வருட ஆரம்பத்தில் இடமாற்றம் நடைபெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப் படும் என வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வடமாகாண அதிபர்கள் சங்கமம்-2015 நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண கல்வி செயற் பாட்டில் மிக முக்கிய பங்கு வகிக்கும் அதிபர்கள் ஒன்றுசேர்ந்து கலந்துரையாடல் நிகழ்த்துவது சிறந்த முன்னேற்றத்துக்குரிய விடயம் ஆகும்.

கடந்த காலங்களில் அதிபர்கள் மதிப்புள்ளவர்களாக இருந்தார்கள். சமூகத்தின் பிரச்சினைகளை தீர்ப்பவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள். இன்று அந்த வகிபாகம் மாறியுள்ளது. சமூகத்தில் மதிக்கப்படுபவர்களாக அதிபர்கள் இருப்பதற்கு அவர்களின் உன்னதமான சேவை முக்கியமானதாக இருக்கின்றது.

முன்னைய அதிபர்கள் எம்மால் மறக்க முடியாத அதிபர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் அன்றைய காலங்களில் செய்த பணிகள் சிறப்பாக இருந்தமை தான் காரணம்.

வடமாகாண கல்வி நிலையை மேம்படுத்த அதிபர்கள் மத்தியில் ஒற்றுமை, உத்வேகம் ஏற்படுத்த இவ்வாறான ஒன்றுகூடல் நிகழ்வுகள் சிறப்பானதாக அமையும்.

ஆசிரிய இடமாற்றம் தொடர்பாக பலதரப்பட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆசிரிய இடமாற்றம் தவிர்க்க முடியாத ஒன்று. ஆசிரியர் இல்லாத பிரதேசங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய தேவை எமக்கு உள்ளது. அதன் அடிப்படையில் மாகாண கல்வி திணைக்களத்தினால் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களுக்கு குறிப்பிட்ட காலங்கள் சேவை வழங்க நியமித்துக் கொண்டு இருக்கின்றோம்.

முன்னைய காலங்களில் ஆசிரியர்கள் தூர இடங்களுக்கு சேவைக்கு சென்றால் 10-13 வருடங்கள் மனப்பூர்வமாக சேவையாற்றி உள்ளார்கள்.

ஆனால் தற்போது 4 வருடங்கள் கூட சேவை செய்யும் மனப்பாங்கில் எவரும் இல்லை. ஆசிரியர்களின் மனப்பாங்கில் மாற்றத்தை கொண்டுவர வேண்டும். அப்போதுதான் சிறப்பான கல்வி சேவையை வழங்க முடியும்.

அத்துடன் தொழிற்சங்கங்கள் தேவையற்ற குற்றச்சாட்டுக்களை தமது தனிப்பட்ட நன்மை கருதி முன் வைப்பதை நிறுத்த வேண்டும்.

இடமாற்றம் தொடர்பாக அதாவது வன்னிக்கு இடமாற்றம் வழங்கும் போது சில ஆசிரியர்களுக்கு பாதிப்பு வந்திருக்கலாம். ஆனால் நல்ல நோக்கத்துடன் தான் இடமாற்றம் வழங்கப்படுகின்றது. இதை அனைவரும் கருத்திற்கொண்டு தமது சேவைகளை வழங்குவதன் மூலம் வடமாகாண கல்வியை முன்னேற்ற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதியின் வீட்டுக்குமுன் குவிந்த திமுகவினர் சோகத்துடன் கலைந்தனர்

(சென்னை)

சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் கர்நாடக உயர் நீதிமன்ற தனி அமர்வு நீதிபதி குமாரசாமி வழங்கப் போகும் தீர்ப்புக்காக ஆவலுடன் தி.மு.க. தலைவர் கருணாநிதி வீட்டு முன்பு குவிந்த தி.மு.கவினர், தீர்ப்பைக் கேட்டதும் சோகமடைந்து அங்கருந்து கலைந்து சென்றனர். தி.மு.க.தலைவர் கருணாநிதி வீட்டு முன்பு ஏராளமான கட்சி தொண்டர்கள் குவிந்திருந்தனர்.

நாடே எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஜெயலலிதா தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு மீதான



தீர்ப்பு எப்படி இருக்கும் என்ற பதற்றம நாடு முழுவதும் காணப்பட்டது.

தீர்ப்பு ஜெயலலிதாவுக்குத்தான் நிச்சயம் பாதகமாக வரும் என்ற நம்பிக்கையில் தி.மு.கவினர் இருந்தனர். ஒருவேளை அப்படி தீர்ப்பு வந்தால் கருணாநிதி கருத்தை அறியவும், அ.தி.மு.கவினரால் தாக்குதல் ஏதும் வந்து விடக் கூடாது என்பதற்காகவும், கருணாநிதி வீட்டு முன்பு தி.மு.கவினர் பெருமளவில் குவிந்தனர்.

இதனால் கோபாலபுரத்தில் கருணாநிதி வீட்டை சுற்றிய வீதிகள் முழுவதும் தி.மு.க. தொண்டர்களால் நிரம்பி வழிந்தது. ஆனால் தீர்ப்பு அவர்களுக்கு சந்தோஷம் தராமல் போகவே சோகத்துடன் அனைவரும் கலைந்து சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


# ஜெயா சட்டப்படியே வெளியே வந்தார்

## சட்டத்தரணி விளக்கம்

(பெங்களூர்)

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மீது தொடரப்பட்ட சொத்து குவிப்பு வழக்கு ஒரு புனையப்பட்ட வழக்கு என்று அவரது சட்டத்தரணி கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

சொத்து குவிப்பு மேல் முறையீட்டு வழக்கில் ஜெயலலிதா உட்பட நான்கு பேரும் விடுதலை செய்யப்படுவதாகவும், அபராதத் தொகையையும் இரத்து செய்து குமாரசாமி தீர்ப்பளித்தார். பெங்களூர் உயர் நீதிமன்றத்துக்கு வெளியே இது குறித்து கருத்துக் கூறிய கிருஷ்ணமூர்த்தி, சொத்து குவிப்பு வழக்கு ஒரு புனை




யப்பட்ட வழக்கு.

இதில் இருந்துஅவர் எப்போதோ வெளியே வந்திருக்கலாம். ஆனால் சட்டப்படி வெளியே வருவதற்காக இவ்வளவு காலம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என அவர் தெரிவித்தார். (இ-5)



## தர்மத்துக்கும் நேர்மைக்கும்

# வெற்றி

(சென்னை)

**சொத்துக் குவிப்பு வழக்கில் கர்நாடக உயர் நீதிமன்ற தீர்ப்பால் தன்மீது சுமத்தப்பட்ட அவதூறு நீக்கப்பட்டதாக அ.தி.மு.க. பொதுச செயலாளரும் முன்னாள் தமிழக முதலமைச்சருமான ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நேற்று கர்நாடக உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பு எனக்கு மிகுந்த மன நிறைவை அளிக்கிறது.

என் மீது சுமத்தப்பட்ட அவதூறை நீக்கிய தீர்ப்பு இது. என்மீது எனது அரசியல் எதிரிகளால் சுமத்தப்பட்ட பழியினைத் துடைத்திட்ட தீர்ப்பு இது. நான் எந்தத் தவறும் செய்யாதவள் என்பதை உறுதி செய்த தீர்ப்பு இது.

புடம் போட்ட தங்கமாக நான் மீள இந்தத் தீர்ப்பு வழிவகை செய்துள்ளது. கீழமை நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புக்குப் பிறகு என்மீது மாறாப் பற்றும், அன்பும் கொண்ட தமிழக மக்கள் இறைவனிடம் வேண்டியதற்கு, இறைவன் அளித்த வரம் இது.

இந்த தீர்ப்பு எனக்கு தனிப்பட்ட முறையில் கிடைத்த வெற்றி என்று நான் கருதவில்லை. நீதி நிலை நாட்டப்பட்டு, தர்மம் வென்றது என்பது தான் இந்த தீர்ப்பு. சூழ்ச்சிகள் என்றைக்குமே தற்காலிகமாக வெற்றி பெறலாம். ஆனால், இறுதி வெற்றி என்பது தர்மத்திற்கும், நேர்மைக்கும் தான் கிடைக்கும்.

தி.மு.கவினரால் சூழ்ச்சி வலை பின்னப்பட்டு, அதன் காரணமாக என்மீது போடப்பட்ட வழக்கில், சதியும் விதியும் சதிராடியதால் இடையிலே நீதி உறங்கி விட்டது. இன்றைய தீர்ப்பு நீதியே என்றும் வெல்லும் என்பதை பறைசாற்றுகிறது.

என்னையும், அ.தி.மு.கவையும் நேரடியாக வெல்ல முடியாது என்ற காரணத்தால் அரசியல் எதிரிகள் இறுதி வரை தங்கள் சூழ்ச்சிகளால் என்னையும், எம்.ஜி. ஆரால் துவக்கப்பட்ட மாபெரும் இயக்கமாம் அனைத்திந்திய அண்ணா திராவிடர் முன்னேற்றக்கழகத்தையும் அழித்து விடலாம் என்ற காழ்ப்புணர்வை இன்றுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

நான் குற்றமற்றவள் என்பதில் எள் முனையளவும் நம்பிக்கை குலையாமல் எனக்காக பிரார்த்தனைகள் மேற்கொண்ட என்னை





அ.தி.மு.கவினர் கொண்டாட்டம்





வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களுக்கும், கழக உடன் பிறப்புகளுக்கும், அனைத்து தமிழக மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கீழமை நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பின் காரணமாக மன வேதனை அடைந்த 233 கழக உடன்பிறப்புகள் எனக்காக தங்களது இன்னுயிரை மாய்த்துக் கொணடுள்ளார்கள் என்பது என்றென்றும் எனக்கு வேதனை அளிக்கக்கூடியதாகும்.

இன்றுகூட நான்கு கழக உடன் பிறப்புகள் தங்கள் இன்னுயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்கள். இன்னும் சற்று நிதானத்தைக் கடைப்பிடித்திருந்தால் அவர்களும் தமிழக மக்களின் இந்த மகிழ்ச்சியை கொண்டாடி இருக்கலாம்.

தமிழக மக்கள் எல்லோரும் எலலாமும் பெற வேண்டும் என்பதே எப்போதும் எனது அவா ஆகும். தமிழக மக்களின் நலனே என் நலன் என்று நான் என்றென்றும் தமிழக மக்களுக்காகவே உழைத்திடுவேன் இவ்வாறு ஜெயலலிதா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# தண்டனை இரத்தாகுமென எதிர்பார்க்கவில்லை

## ஆச்சார்யா அதிர்ச்சி

(பெங்களூரு)

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாமீதான சொத்து குவிப்பு வழக்கின் தண்டனை இரத்தாகும் என்று தான் எதிர்பார்க்கவில்லை என்று அரசு தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஆச்சார்யா தெரிவித்தார்.

மூத்த சட்டத்தரணியான ஆச்சார்யா, தண்டனை குறித்து தனது கருத்தை தெரிவித்தார்.

அதில், தீர்ப்பின் முழு விபரம் கிடைக்கவில்லை. மேல்முறையீட்டு வழக்கு விசாரணையில் எழுத்து பூர்வ வாதத்துக்கு ஒரு நாள் மட்




டுமே அவகாசம் கிடைத்தது.

எனினும், தண்டனை இரத்தாகும் என்று தான் எதிர்பார்க்கவேயில்லை என்று அவர் கூறியுள்ளார்.


கர்நாடக அரசு மேல்முறையீடு செய்யுமா என்பது குறித்து. அம்மாநில அரசுடன் ஆலோசனை நடத்திய பிறகே உறுதியான தகவலை அளிக்க முடியும்.

அரசு தரப்பில் போதுமான எழுத்துபூர்வ வாதங்களை முன்வைத்துள்ளேன். ஆனால், எந்த அடிப்படையில் நீதிபதி குமாரசாமி தீர்ப்பு வழங்கினார் என்பதை தீர்ப்பின் விபரத்தை படித்து பார்த்தே கூற முடியும் என்று தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் வருடாந்த தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்ற போது...



இராஜேஸ்வரி அறக்கட்டளையினால் யாழ்.பூம்புகார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபரிடம் கணனி ஒன்று அண்மையில் கையளிக்கப்பட்ட போது....







வரணி இயற்றாலை முன்பள்ளியில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய் வல்லுநர் போட்டியில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் சிறப்பு விருந்தினரான வடமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினரான பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.







நோர்வேயில் வசிக்கும் மா.பிரகாஸ் என்பவரின் நிதி உதவியுடன் அமரர் செல்லத்துரை நினைவாக அமைக்கப்பட்ட கரவெட்டி மத்தொனி இளைஞர் விளையாட்டு அரங்கம் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட போது... (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

## நிகழ்வின் நிழல்கள்





வடக்கு மாகாண முறைசாராக் கல்விப்பிரிவின் உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு புதிய உயர் கலைக் கல்லூரி பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற போது.... (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயங்கவை கைது செய்வதற்கு இலங்.பொலிஸ்குழு உக்ரைனுக்கு

ரஷ்யாவின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவை கைது செய்வதற்காக இலங்கையும், உக்ரைனும் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ள நிலையில் கடந்த வாரம் இலங்கை பொலிஸ் குழுவொன்றுஉக்ரைன் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உதயங்க வீரதுங்கவை கைது செய்வதற்காக இலங்கை, சர்வதேச பொலிஸாரின் உதவியை பெற்றுக்கொண்ட நிலையில் கடந்த 9ஆம் திகதி அவர் தலைமறைவாகியிருந்தார். உக்ரைன் போராளிகளுக்கு ஆயுதம் வழங்கியுள்ளதாக உக்ரைன் அரசாங்கத்திடம் உதயங்க வீரதுங்கவிற்கு எதிராக தற்பொழுது வரை இரண்டு முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது.

உதயங்கவின் இச்செயற்பாடு காரணமாக இரண்டு நாடுகளின் தேசிய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை வெளியுறவு அமைச்சு தெரிவித்து ள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு மிக் 27 என்ற விமானத்தை வழங்கியதாக உதயங்க வீரதுங்கவிற்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவரை கைது செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இரு நாடுகளும் இணைந்து மேற்கொள்வதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் சென்றுள்ள இலங்கை பொலிஸ் குழு விசாரணைகளை மேற்கொண்டு வெகு விரைவில் அவரை கைது செய்யவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை ரஷ்யாவின் முன்னாள் தூதுவர் குறித்து அண்மையில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மங்கள சமரவீர கருத்து வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)




# பிரதேச செயலாளரின் இடமாற்றத்தை நிறுத்தக்கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்!

(குருமன்காடு)

**வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலாளரின் இடமாற்றத்தை நிறுத்தக் கோரி அப்பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.**

செட்டிகுளம் பிரதேச கிராம அமைப்புக்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை செட்டிகுளம் பொது விளையாட்டு மைதானத்தில் ஒன்று கூடிய மக்கள் மன்னார் - மதவாச்சி வீதி வழியாக ஊர்வலமாக வந்து செட்டிகுளம் பிரதேச செயலக வாயிலை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மாற்றாதே மாற்றாதே பிரதேச செயலாளரை மாற்றாதே, பிரதேச செயலாளர் இடமாற்றத்தை உடனடியாக இரத்துச் செய், மனித நேயத்துடன் கடமையை செய்பவரை தொடர்ந்தும் பணியாற்ற விடு, இனமத பேதமற்ற சிறந்த சேவையாளனை இடமாற்றாதே, பிரதேச செயலாளர் என்.கமலதாசனை இடமாற்றாதே போன்ற வாசங்கள் எழுதிய சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர்.




மைத்திரி அரசாங்கம் மக்களின் கோரிக்கையை ஏற்று இடமாற்றத்தை இரத்துச் செய்ய வேண்டும் எனவும் இது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சுக்கு தாம் கடிதம் அனுப்பியுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததுடன் இனமத பேதமற்ற நல்ல செயற்பாடுகள் தமது பின்தங்கிய மற்றும் மீள்குடியேறிய பகுதிக்கு தேவை எனவும் கோரிக்கை விடுத்த மக்கள் தமது பிரதேச செயலாளரை இடமாற்றம் செய்தால் கிராமங்கள் தோறும் உண்ணாவிரதப் போராட்டத்தினை செய்வோம் எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களால் ஜனாதிபதி மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோருக்கான மகஜர் ஒன்றும் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட்டது. (இ-250)

# அரச அதிபரைக்கூட மாற்றமுடியாத நிலை

## ஜி.ரி.லிங்கநாதன் தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களால் ஒரு அரசாங்க அதிபரை மாற்ற முடியாது என்றால் எப்படி எங்களது பிரச்சினைகளை தீர்க்கப் போகிறீர்கள் என கூட்டமைப்பின்வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வட மாகாணசபைக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட எம்.பி.நடராஜாவின் வரவேற்பு நிகழ்வு வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வட மாகாணசபை கடந்த காலங்களில் இயங்க முடியாமல் இருந்தமைக்கு காரணம் முன்னைய அரசு மற்றும் ஆளுநர் உட்பட பிரதம செயலாளருமாக இருந்தனர். ஆனால் தற்போது ஆளுநர் உட்பட பிரதம செயலாளர் மாற்றப்பட்டுவிட்டனர்.

இதன் காரணமாக தற்போது நான்உட்பட வடமாகாண சபை உறுப்பினர்களும், அமைச்சர்களும் இனி மேடை சரியில்லை என கூற முடியாது. ஆகவே மிகுதிக் காலங்களில் நாம் முடிந்த வரை மக்களுக்கு சேவை செய்ய வேண்டும்.

மாகாணசபை என்பது எமது இனப்பிரச்சினைக்கான ஒரேயொரு உத்தியோகபூர்வமான பதிவு.

ஆனால அதை செய்வதற்கு மத்திய அரசு விடாவிட்டாலும் கூட மக்களின் தேவை களை இனம் கண்டு செய்ய வேண்டிய சட்ட ரீதியான தார்ப்பரியங்கள் எங்களது மாகாணசபைக்கு எவ்வளவோ உள்ளது. அதை இல்லை என்று சொல்ல முடியாது. எதற்கு எடுத்தாலும் காரணம் காட்டி நிற்க முடியாது.

இந்திய அரசால் எங்களுக்கு வழங்கப்பட்ட ஐம்பதாயிரம் வீடுகளில் விகிதாசாரத்தின் படி பார்த்தால் எங்களுடைய தமிழ் மக்களை விட ஏனைய இனத்தவர்களுக்கு அதிகமாகவே சென்றுள்ளது.

வவுனியா தமிழ் பிரதேச செயலகத்திறகு உட்பட்ட பழைய கற்பகபுரம், கந்தன்குளம், பொன்னாவரசன்குளம், அரசன்குளம், மருதன்குளம் இது போன்ற பல கிராமங்கள் 2009 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட அதே தகரத்துடன் தற்போதும் மலசலகூடம் கூட இல்லாமல் இருக்கின்றார்கள்.

ஆகவே இந்த மக்களுக்கு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏதேனும் செய்ய வேண்டும். இல்லையேல் எமக்கு வாக்களித்த மக்களிடம் நாம் திரும்பவும் போக முடியாது என் பதே உண்மை.

நல்லி ணக அரசு நல்லதொரு மாற்றம் என்பது உண்மையாக இருக்கலாம். ஜனநாயக ரீதியாக துணிந்து நாம் கதைக்கக்கூடிய நிலையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மையாக இருந்தாலும் 19 ஆவது திருத்த சட்டத்தில் எங்களைப் பற்றி எதுவுமே சொல்லபடவில்லை என்பது தமிழ் மக்களை பொறுத்தவரை மிகப்பெரிய கவலையாகும்.

எழுத்து மூலமாக இல்லாவிடடாலும் வாய்மூலமாகவேனும் ஜனாதிபதியோ, பிரதமரோ அல்லது தற்போதுள்ள தேசிய அரசாங்கமாவது ஒரு வசனம் கூட எமக்கு திருப்திப்படுத்துவதற்காக கூட சொல்லவில்லை. என அவர் மேலும் தெரிவித்தார். (இ-250)

## பெண்களுக்கான புதிய சத்திரசிகிச்சை விடுதி தெல்லிப்பழை வைத்தியசாலையில் திறப்பு!

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் பெண்களுக்கான புதிய சத்திரசிகிச்சை விடுதி கடந்த 7 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி யோ.திவாகர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழவில் புதிய விடுதியினை வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் கிரிதரன் மற்றும் பொதுமருத்துவ நிபுணர் திருமதி நளாயினி ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

ஆளணிப் பற்றாக்குறை காரணமாக இதுவரை காலமும் இந்த விடுதி பொது மருத்துவ விடுதியுடன் இணைந்தே பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கி வந்தது. வடக்கின் மிக முக்கிய வைத்தியசாலையான தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இவ்விடுதி திறக்கப்பட்டமையானது நோயாளர்களுக்கும் வைத்தியசாலை ஊழியர்களுக்கும் மிகுந்த ஆறுதலையும், மகிழ்ச்சியையும் அளித்துள்ளது. வைத்தியசாலையின் அனைத்து தரப்பு ஊழியர்களினதும் கூட்டு முயற்சியின காரணமாக உருவான இவ்விடுதியின் தோற்றத்திற்கு வைத்தியசாலையின் தற்காலிக சுகாதார தொண்டர்களின் பணி மகத்தானதாகும்.

இவ்விடுதிக்குத் தேவையான பல மில்லியன் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன வைத்தியசாலை வளாகத்தில் கழித்து விடப்பட்டிருந்த பல்வேறு வகையான உலோகங்கள்மற்றும் பல கைக ளின உதவியுடன் வைத்தியசாலையின் பராமரிப்புப் பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த தற்காலிக சுகாதாரத் தொண்டர்களினாலேயே புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

மிகுதியான சில குறிப்பிட்ட வகையான மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மாத்திரமே யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச்சங்கம், தெல்லிப்பழை துர்க்கை யம்மன் தேவஸ்தானம் மற்றும் பல சமூக சேவையாளர்களின் தனிப்பட்ட உதவிகள் மூலமாகப் பெறப்பட்டுள்ளன.

பல்வேறு பிரிவுகளுடன்சிறப்பான சேவையாற்றி வரும் இவ்வைத்தியசாலையானது விரைவில் மாகாண பொது வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு, மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு நிகரான சிறப்பு வைத்தியசாலையாக மிளிர வேண்டுமென்பதே வடக்கு மாகாண மக்கள் அனைவரினதும் ஒருமித்த எதிர்பார்ப்பாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org






# அந்தப்புர ரகசியம்!

தர்மபுரி மன்னர் சிவசேனர் தன் மனைவி மணிமாலா மீது மிகவும் பிரியம வைத்திருந்தார்.

அழகில், சிறந்த மணிமாலா நற்குணங் களும் நிரம்பப் பெற்றவளாக இருந்தாள்.

ஆயினும், அவளிடம் ஒரேயொரு குறை இருந்தது.

அவளுடைய மனதில் எந்த ரகசியமும் நிற்காது.

அவளுடைய சங்கடத்தைப் புரிந்து கொண்ட மன்னர் அவளுக்கு ஒரு யோசனை கூறினார்.

"மணி! நான் உன்னிடம் கூறும் விடயங்களை உன் தோழிகளில் யாரா வது ஒருத்தியிடம் மட்டுமே கூறு!

அவளை எப்போதும் அந்தப்புரத்தில் உன் அருகிலேயே வைத்துக் கொள்.

அவளை வேறு யாரிடமும் பேசவிடாதே!

அவ்வாறு செய்தால், உன் பிரச்சினை தீர்ந்து விடும்.


உன் தோழிகளில் அத்தகைய நம்பத் தகுந்த ஒருத்தியைத் தேர்வு செய்!" என் றார்.

குழப்பத்தில் ஆழ்ந்த மணிமாலா, "என் தோழிகளை உங்களுக்கு அறிமுகப்படுத்து கிறேன்.

நீங்களே அவர்களில் ஒருத்தியைத் தேர்வு செய்யுங்கள்!" என்றாள்.

பிறகு, தன் தோழிகள் அனைவரையும் மன்னருக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

அவர்களுடைய நடவடிக்கைகளை ஒற்றர்கள் மூலம் கண்காணி ககச் செய்த பின், அவர்களுள ஒருத்தியான மஞ்சரியை மன்னர தேர்வு செய்தார்.



மஞ்சரி இயல்பாகவே அமைதியானவள்.

யாரிடமும் வீணாக அர ட்டை அடிப்பவள் இல்லை.

அவளுக்கு ஒரு மகளைத தவிர, வேறு யாருமில்லை.

மஞ்சரி தன்னுடைய கட மையை ஒழுங்காகச் செய் தாள்.

சிவசேனர் மணிமாலா விடம் எப்போதும் போல் அந் தப்புரத்தில் அமர்ந்து பல விடயங்களைப் பற்றிக் கூற, மணிமாலா அவை யாவற் றையும் மஞ்சரியிடம் பேசித் தீர்த்து விடு வாள்.

ஆனால் மஞ்சரி அவற்றை வேறு யாரிடமும் கூற மாட்டாள்.



இதனால் மணிமாலா மிகவும் மகிழ்ந்து அவளு க்கு அடிக்கடி பல பரிசு கள் அளித்து வந்தாள்.

சில ஆண்டுகள் சென றன.

ஒருநாள்மஞ்சரிகொடிய நோயினால் பீடிக கப்பட்டு இறந்து போனாள.

அவளுடைய பிரிவி னால் மிகவும் பாதிக்கப் பட்டவள் மணிமாலாதான்! தன் உயிருக்குயிரான அந்தரங்கத் தோழியை இழந்ததுடன், தன் செவி களில் படும் விடயங்களைப் பகிர்ந்து கொள்ள சரியான ஆள் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டாள்.

ஒருநாள் மணிமாலா மன்னரிடம், "மஞ்சரிக்கு ஒரு மகள் இருக்கிறாள்.

அவள் பெயர் சந்திரிகா! வயது பதினெ ட்டு! மஞ்சரியின் இடத்தில் அவளை நிய மிக்கலாம் என்று நினைக்கிறேன்!" என்று கூற, மன்னர், "யோசித்துச் சொல்கிறேன்!" என்றார்.

ஆனால் மன்னர் வேறு பல அவசர மான அலுவல்களில் மூழ்கியதால், ராணி சொன்னதை மறந்துவிட்டார்.

திடீரென ஒருநாள் மணிமாலா சந்திரி காவைத் தன் அந்தரங்கத் தோழியாக ஆக்கிவிட்டதைக் கூறியதும் மன்னர் திடுக்கிட்டார்.

(தொடரும்)

05.2015
12

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1656 - ஒல்லாந்தர் கொழும்பைக் கைப்பற்றினர்.
- 1689 - பிரான்சுடன் போரிடுவதற்காக இங்கிலாந் தின் மூன்றாம் வில்லியம் ஒக்ஸ்பேர்க் கூட்டணியில் இணைந்தான்.
- 1780 - அமெரிக்க புரட்சிப் போர்: தென் கரோலினா வின் சார்ல்ஸ்டன் நகரம் பிரித்தானியப் படைகளினால் கைப்பற்றப்பட்டது.
- 1797 - பிரான்சின் முதலாம் நெப்போலியன் இத் தாலியின் வெனிஸ் நகரைக் கைப்பற்றினான.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியா வில் ஸ்பொட்சில்வேனியா என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் ஆயிரக்கணக்கான கூட்ட மைப்பு மற்றும் கூட்டணி படையினர் இறந் தனர்.
- 1881 - வட ஆபிரிக்காவில் துனீசியா பிரான்சின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தது.
- 1922 - 20 தொன் விண்கல் வேர்ஜீனியாவில் வீழ் ந்தது.
- 1937 - ஆறாம் ஜோர்ஜ் மன்னன் பிரித்தானியாவின் மன்னனாக முடி சூடினான்.
- 1949 - சோவியத் ஒன்றியம் பெர்லின் மீதான முற்று கையை நிறுத்தியது.
- 1952 - காஜ் சிங்க் ஜோத்பூரின் மன்னனாக முடி சூடி னான்.
- 1965 - சோவியத் ஒன்றியத்தின் லூனா 5 விண் கலம் சந்திரனில் மோதியது.
- 1978 - சாயிரில், கொல்வேசி நகரைத் தீவிரவாதிகள் கைப்பற்றினர்.
- 1981 - ஐரிஷ் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த தன்னார்வலர் பிரான்சிஸ் ஹியூஸ் சிறையில் உண்ணாநோன்பிருந்து இறந்தார்.

**பிறப்புகள்**

- 1820 - புளோரன்ஸ் நைட்டிங்கேல், நவீன தாதியி யல் முறையை உருவாக்கிய இங்கிலாந்துத் தாதி (இ. 1910)
- 1843 - தோமஸ் வில்லியம் ரைஸ் டேவிட்ஸ், பிரித் தானியாவைச் சேர்ந்த பாளி அறிஞர் (இ. 1922)
- 1895 - ஜே. கிருஷ்ணமூர்த்தி, இந்தியத் தத்துவ அறிஞர (இ. 1986)
- **1912 - மாயவரம் வி. ஆர். கோவிந்தராஜபிள்ளை கர்நாடக இசை வயலின் வாத்தியக் கலைஞர் (இ: 1979)**


**இறப்புகள்**

- 2001 - அலெக்சி தூபோலெவ், ரஷ்ய விமான வடிவ மைப்பாளர் (பி. 1925)

**சிறப்பு தினம்**

- உலக செவிலியர் தினம்

**மாயவரம் வி.ஆர்.கோவிந்தராஜபிள்ளை**



மாயவரம் வி. ஆர். கோவிந்தராஜ பிள்ளை 1912 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி நாகப் பட்டினம் மாவட்டம், குத்தாலம் தாலூக்காவிலுள்ள வழுவூர் என்னும் கிராமத்தில் பிறந்தார்.

இவர் தமிழகத்தைச் சேர்ந்த ஒரு கர்நாடக இசை வயலின் வாத்தியக் கலைஞராவார்.

இவர் சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த வர், தனது தாய் மாமனாகிய பிரபல நாதஸ்வர வித்துவான் திருவிடைமருதூர் பி. எஸ். வீருசாமி பிள்ளையின் பாதுகாப்பில் வளர்ந்தார்.

இவர் ஜி. என். பாலசுப்பிரமணியம், ஆலத்தூர் சகோதரர்கள், எம். எஸ். சுப்புலட்சுமி, மதுரை மணி ஐயர் உட்பட பிரபலமான பாடகர்களுக் குப் பக்கவாத்தியமாக வயலின் வாசித்துள்ளார்.

இவருக்கு கலைமாமணி விருதும் (1969) தமிழ் நாடு அரசு இசைப்பேரறிஞர் விருதும், (1976) வழங்கப்பட்டது.

இவர் நீண்டகால உடல்நலக் குறைவின் பின் 1979 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் தினம் மாயவரத்தில் தமது இல்லத்தில் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

'...இல்லம்மா... அவர் இயல்பு ப்படி பேசினார். அது ஒரு பெரிய தாக்க ததை ஏற்படுத்தக்கூடியது என்று நான் நம்பவில்லை... தவிர, அவர் கடைசியாகப் பேசியதும், கூட்டம் முடிந்துவிட்டது.

மறுப்பு சொல்ல வாய்ப்பும் இல்லை' என்றார், ஆர்.எம்.வீ.

'அவர் என்னை அட்டாக் பண்ணித்தான் பேசியிருக்கார்.

அதை நீங்க கேட்டுக்கிட்டு இருந்தீங்க...!' என்று கூறிவிட்டு, ரிசீவரை வைத்துவிட்டார், ஜெயலலிதா.


ஆர்.எம்.வீ.க்கு நிலைமை புரிந்துவிட்டது. அடுத்து என்ன நடக்கும் என்பதையும் ஊகிக்க முடிந்தது. ஆனால் அதைப் பற்றி எல்லாம் யோசிக்காமல், திட்ட மிட்டபடியே அன்றிரவு அமெரிக்காவுக்குப் பயணமானார்.

### எரிமலை

அங்கு போய்ச் சேர்ந்ததும் தான், தமிழ்நாட்டில் பெரிய எரிமலை வெடித்திருந்த செய்தி ஆர்.எம்.வீ.க்கு கிடைத்தது. அவருக்கு எதிராகவும், விரோதமாகவும் அறிக்கைகள் வெளி யாயின.

'துரோகிகளை வெளியேற்றுங்கள்' என்று சிலர் அறிக்கை விட்டார்கள். ஆர்.எம்.வீ.யை மட்டுமல்லாமல், ரஜினியை தாக்கியும் அறிக்கைகள் வெளியாயின. இதனால் ரஜினி ரசிகர்கள் கொதிப்படைந்தார்கள்.

இதன் காரணமாக, அமெரிக்காவில் இருந்து ஆர்.எம்.வீ. அறிக்கை ஒன்றை




வெளியிட்டார். 'நான் அமைச்சராக இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பது முதல்-அமைச்சர் முடிவு செய்ய வேண்டிய விடயம. அவர் எப்போது என்னை வேண்டாம் என்றாலும், நான் போகத்தயாராக இருக்கிறேன். இதற்காக போராட்டம் செய்யத் தேவையில்லை' என்று அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இதன்பின், கிட்டத்தட்ட சுமார் ஒரு மாத காலம் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு, ஆகஸ்டு 14 ஆம் தகதி நள்ளிரவில் சென்னை திரும்பினார்.

விமான நிலையத்தில் அவருக்கு மாபெரும வரவேற்பு அளிக்கப்பட்டது. வந்திருந்தவர்களில் பெரும்பாலோர் ரஜினி ரசிகர்கள்.

மறுநாள் ஆகஸ்டு 15 ஆம் திகதி சுதந்திர தினத்தன்று, தேசிய கொடி ஏற்றும் அரசு விழாவில், வழக்கம் போலவே ஆர்.எம்.வீ.யும் முதல்-அமைச்சரை சந்தித்தார். பின்னர், உணவுத்துறை அமைச்சர் பொறுப்பை கவனிக்கலானார். இதனால் ஆறுதல் அடைந்த ரஜினி, ஆர்.எம்.வீ.யின் வீட்டிற்கே நேரில் வந்து தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்.

### நீக்கம்


இந்த சந்திப்புக்கு 15 நாட்களுக்குப் பின், ஆர்.எம்.வீரப்பனுக்கு உணவுத் துறைக்கு பதிலாக, கால்நடைத்துறை ஒதுக்கப்பட்டது.இதன்பின் திடீரென்று அமைச்சர் பொறுப்பில் இருந்தும் நீக்கப்பட்டார். சில நாட்களில், அ.தி.மு.க.வில் இருந்தும் நீக்கப்பட்டார். இதன் காரணமாக, 'எம்.ஜி.ஆர். கழகம்'என்ற பெயரில் அரசியல் கட்சியை 1995 ஆம் ஆண்டு அக்டோபர் 17 ஆம் திகதி ஆர்.எம்.வீரப்பன். தொடங்கினார்.

### ரஜினி 'சுயதரிசனம'

'நான் ஆன்மீகவாதிதான். ஆனால், ஒரு கன்னத்தில் அறைந்தால் இன்னொரு கன்னத்தைக் காட்டும் அளவுக்கு ஆன்மீகத்தில் இன்னும் உயரவில்லை. அந்த மாதிரியான ஆன்மிகவாதியாக ஆவதற்கு எனக்கு விருப்பமும் இல்லை.'

-ரஜினிகாநத்.

(தொடரும்)





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து-137

....காதுல ஒட்ட போட்டதும் சலசலசலன்னு ஒழுகுதா இல்லையா ரத்தம்... ரத்தம் ஒழுங்கு மொறையா இருந்தா செத்த வெடத்துல ஒறையணும். அப்படி ஒறையற சக்தி இருக்கா இல்லையான்னு சோதிக்கிறதுதான் காதுக்குத்தாம்; இது ஒரு வைத்தியக் கணக்கு.

ரெண்டுமில்லப்பா! அப்பன் சொத்துல பங்கு இல்லாத பொம்பள... பெத்த பிள்ளையச் சாக்கு வச்சு, தனக்கு உண்டானதுல ஒரு பங்கத் தாய்மாமன் மூலமா தண்டம் போட்டு வசூல் பண்றதுதானப்பா காதுகுத்து. இது காசு பணக்கணக்கு.

எந்தக் கணக்கா இருந்தா எங்களுக்கென்ன... எழுதற மொய்யிக்கு நெஞ்சுமுட்ட நெல்லுச்சோறு திங்கலாமில்ல; இது சொந்தபந்தம் போடுற சோத்துக்கணக்கு.

தாய்மாமன் ஊரு கெங்குவார்பட்டி; பசப்பும் பசையும் உள்ள ஊர் அது. தண்ணி செழிச்ச பூமி.

பதினோரு மரக்கா பச்ச நெல்லு, வாழப்பழத்தாரு, வகை வகையாச் சீரு. அய்யம்பாளையம் தேங்கா, பிறந்தவளுக்குச் சீல துணிமணி, மருமகளுக்குக் கொலுசுமணி எல்லாம் சொமந்து சொக்கத்தேவன்பட்டியையே ஒரு சுத்துச் சுத்தி சாதிசனமே பாத்துக்க... ஆடு மாடே பாத்துக்க.. கோழி குருமானே பாத்துக்கன்னு தாம்பாளத் தட்டத் தல மேல சொமந்து வாராக தாய்மாமன் வீட்டு ஆளுக.

மொட்டையடிச்ச தலையில சந்தனம் அப்பி, பகுமானமாப் பட்டுப் பாவாட சட்டை போட்டுத் தாய்மாமன் மடியில உக்காரவச்சு, பொன்னாசாரி கடுக்கன் எடுத்துத் திருகாணி கழத்தவும் கண்ணுல தண்ணி தவ்வ ஆரம்பிச்சிருச்சு காது குத்துற பிள்ளைக்கு.

மாற்கொழுந்துமாதிரி இருக்கிற பிஞ்சுக் காதுமடல்ல குத்தாணி எடுத்துச் சுருக்குன்னு குத்தவும் கொதக்குன்னு குதிச்சிருச்சு ஒரு சொட்டு ரத்தம்.

வீல்ன்னு சங்கூதுற மாதிரி



கத்தி அழுகுது சின்னப்புள்ள.

ரத்தத்துல தண்ணியடிச்சு, குத்துவாயில சந்தனம் தொட்டு வச்சும் அடங்கல பிள்ளைக்கு அழுக.

ஏய் கத்துன... ஒன்னியக் கடிச்சுக் கொன்டேபுடிவேன்.

அந்தப் பிள்ள அழுத கட்டைக்கு அடுத்த கட்டையில அமட்டுறான் தாய்மாமன்.

இன்னொரு காதுலயும் குத்திருங்க பொறுத்துக்கிறேன்- இந்த ஆளமட்டும் அமட்டாம இருக்கச் சொல்லுங்கன்னு அதுக்கு மேல கத்துது பிள்ள.

முடிஞ்சது.

எல்லாரும் நின்ட எடத்துலயே அங்கங்க ஒக்காந்தாக. எல தெரியாமச் சோறு வாங்கிச் சாப்பிட்டாக. இப்பத் திண்ணையோரமா ஆளுக்குப் பின்னால ஆளுகளா நிக்கிறாக மொய்யெழுத.

இங்கதானய்யா சடையத் தேவர் மொத மொதலா மூஞ்சி பாக்குறாரு பேரன. அப்பப்ப எட்டத்துல பாத்தது. கிட்டத்துல பாக்கப் போறது இன்னைக்குத்தான். மொய்யெழுத முன்னுக்க நிக்குது பெருசு; பின்னுக்க நிக்கிறான் பேரன்.

செல்லாண்டித் தேவர் மகன் சடையத்தேவன்... முழு ரூபா ஒண்ணு; எழுதப்பா.

அவன் தன் பேரத்தான் எழுதறானான்னு எழுத்துக் கூட்டிப் படிச்சுக்கிட்டே சடையத்தேவரு நெஞ்சுக் கூட்டு உள்பையில கைவிட்டு, சில்லறைக்கு மத்தியில முழு ரூபாயத் தடவித் தடுமாற... பின்னுக்கிருந்த ஒரு கொரல் கேக்குது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோய் சிக்கலிலிருந்து விடுபட முடியும்



இனிப்புக்களை உண்டு மகிழ்ந்து பண்டிகையைக் கொண்டாடும் தருணங்களில் இனிப்பு வியாதிக்காரர்கள் அதாவது நீரிழிவு நோயாளர்களின் பாடு திண்டாட்டம் தான். அவர்களால் இனிப்பை சாப்பிடவும் முடியாது. மற்றவர்கள் சாப்பிடுவதை பார்த்து, ஏக்கப்படவேண்டியது தான். அப்படியே கட்டுப்படுத்த முடியாமல் சாப்பிட்டு விட்டாலோ சிரமத்திற்கு ஆளாக வேண்டியது தான்.

ஒரு காலத்தில் பணக்காரர்களுக்கு மட்டுமே இருந்து வந்த நீரிழிவு நோய் இன்று அனைத்துத் தரப்பினரிடமும் காணப்படுகிறது. அதனால் இந்நோய் பற்றிய விழிப்புணர்வு நமக்கு அவசியம் வேண்டும்.

நீரிழிவு நோய்க்கான தீர்வு அலோபதி தொடங்கி ஆயுள்வேதம் வரை எல்லா வகை மருத்து வத்திலும் இருக்கிறது.

நீரிழிவு நோய் உண்டாவதற்கான காரணம், அது ஏற்படுத்தும் பாதிப்புகள், அதற்கான தீர்வு மற்றும் உரிய சிகிச்சை முறைகளை அலோபதி, ஆயுர்வேதம், சித்தா, ஹோமியோபதி, அக்குபிரசர் மருத்துவத்திலும் யோகா பயிற்சிகளிலும் எப்படி உள்ளது என்பது பற்றி அந்தத்துறை வல்லுநர்கள் என்ன சொல் கிறார்கள் என்பதை தெரிந்து கொள்வது நலம்.

மனிதன் காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து குளித்து உடையணிந்து உணவருந்தி சம்பாதிக்கச் செல்கிறான். வேலை, வீடு,மனைவி,மக்கள், எதிர்காலம், தொழில் என்று தொல்லையில்லா வாழ்க்கையை நடத்தவே விரும்புகிறான்.

அவன் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டு சந்தோஷத்தைக் கெடுக்க வந்த நோய்தான் நீரிழிவு நோய்.

**நீரிழிவு நோய் ஒருவருக்கு இருப்பது கண்டுபிடித்தவுடன் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் என்னென்ன?**

நீரிழிவுநோயின் நிலை, ஒருவருக்கு இருப்பதை சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டதா? அல்லது நீண்ட நாட்கள் கண்டுபிடிக்கப்படா மல் இருந்திருந்ததா?

நீரிழிவுநோய் உடலில் இருப்பது சில, பல வருடங்களா?

சில ஆண்டுகளாக இருக்கிறது என்றால் அதன் விளைவுகளை அறிய வேண்டும்.

பல ஆண்டுகளாக இருந்தால் இதனால் பலவிதமான கோளாறுகளைக் கண்டறிதல் வேண்டும்.

முதல் மூன்று வகைகளில் அவ்வளவு பாதிப்பு தெரியாது. கடைசி நான்காவது வகையில் பல உறுப்புகளின் தாக்கம், செயலிழப்புகளைப் பார்க்க முடியும்.

**இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் புதிய பரிசோதனைகள் வந்துள்ளனவா?**

புது பரிசோதனைகள் நீரிழிவு நோயைக் கண்டுபிடிக்க இன்று வரை வெறும் வயிற்றில் சீனியின் அளவு பரிசோதனையும் உடலில் குளுக்கோஸ் தாங்கும் திறனைக் கண்டுபிடிப்பது என்ற நிலையும் மாறி, இப்போது நீரிழிவு நோய் உள்ளதா, இல்லையா என்பதைத் துல்லியமாகத் தெரிந்து கொள்வதற்குப் புதிய முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பரிசோதனைகள் எந்நேரமும் செய்யலாம். 6முதல் 6.5சதவீதம் இருந்தால் நீரிழிவு நோய் வரும் வாய்ப்பு; 6சதவீதம் நீரிழிவு நோய் இல்லை; 6.5 சதவீதத்துக்கு மேல் நோய் உள்ளது. இது எப்படி கரோனரி நோய்க்கு ஆஞ்சியோகிராம் கோல்டு டெஸ்டோ, அது போல நீரிழிவுக்கு இது முக்கிய பரிசோதனை.

**நீரிழிவு நோய் பாதிக்காமலிருக்க வேறென்ன வகை தீர்வு உள்ளது?**

நீரிழிவு நோய்க்கான மருந்து அலோபதி மருத்துவத்தில் இருக்கிறது. நீரிழிவு நோய்க்கான காரணம் பல இருப்பதால் மருத்துவரிடம் முறையான சிகிச்சை பெற்று அவர் ஆலோசனைப்படி மருந்து உட்கொண்டால் நீரிழிவு நோய் முற்றிலுமாக நன்கு கட்டுப்படுத்த முடியும்.

எனினும் நீரிழிவு நோய் உள்ளவர்கள் பல விளைவுகளோடு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்வில் நோய் வந்தது என்று கவலைப்பட்டுச் சோம்பேறியாய் மூலையில் இருப்பது நல்லதல்ல. சலிப்பு, வெறுப்பு இவைகள் அதிகமாகத் தாழ்வு உணர்ச்சி மேலோங்கி தற்கொலைக்குத் தூண்டும்.

பல் தேய்த்து குளிப்பது போல் நீரிழிவு நோயை கட்டுப்பாட்டில் வைப்பதற்குத் தினமும் ஒரு தடவை நினைத்து சந்தோஷமாக வாழ கற்றுக்கொள்ளுங்கள்.

**நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் தொடர்ந்து மாத்திரை எடுத்துக் கொள்வதால் பக்க விளைவுகள் வரும் என்று சிலர் அஞ்சுகிறார்களே?**

இந்த மருந்துகள் எல்லாம் உயிர் காக்கும் மருந்துகள். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வாழ்நாள் முழுவதும் மாத்திரை உட்கொள்வதன் மூலம் தான் பாதுகாப்பாக இருக்க முடியும். பக்கவிளைவுகள் ஏற்படும் என்று மாத்திரை எடுத்துக் கொள்ளாமல் இருந்தால் நீரிழிவும் இரத்த அழுத்தமும் கட்டுப்பாடு மீறி சில விபரீத விளைவுகளை ஏற்படுத்தி விடும்.

**லோ சுகர் என்கிறார்களே, அது வந்தால் என்னவாகும்?**

இந்த நிலை சற்று ஆபத்தானது. ஆழ் மயக்கம் என்கிற விபரீத நிலைக்கு நம்மைத் தள்ளிவிடும். லோ சுகர் எனில் முதலில் பசி, படப்படப்பு, நடுக்கம், பதற்றம், தலைவலி, பார்வை மங்குதல், அதிக வியர்வை, எரிச்சல், குழப்பம், தூங்கி வழிதல், மயக்கம் ஏற்படும். அதுவே ஆழ் மயக்கத்துக்குள் கொண்டு சென்று விடும். காய்ச்சல், வாந்தி, வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் தாக்கினால் நம் உடலின் சீனியின் அளவு சட்டெனக்



குறையும். இதைத்தவிர்க்க அந்த நேரத்தில் உடனடியாக இனிப்பு அல்லது பழச்சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். வயிற்றுப் போக்கு மற்றும் வாந்தி இருந்தால் லோ சுகர் வராமல் தடுக்க ஒரு சில நாட்களுக்கு நீரிழிவு நோய் மாத்திரையின் அளவை குறைத்துக் கொண்டு மருத்துவரின் ஆலோசனையை உடனே பெறவேண்டும்.

**நீரிழிவு நோயாளிகள் எந்த மாதிரியான உடற்பயிற்சி மேற்கொள்ளலாம்?**

நடப்பது, சைக்கிளிங், ஜாக்கிங், நீந்துதல் போன்ற உடற்பயிற்சிகள் செய்யலாம். வெறுமனே ஆசைக்காக செய்துவிட்டு விடாமல் தொடர்ந்து உடற்பயிற்சி செய்வதே நல்லது. உடற்பயிற்சியினால் இரத்தத்தில் சீனியின் அளவு குறையும். கொழுப்புச்சத்தும் குறையும்.

இதயத்தை பாதுகாக்கும் எச்.டி.எல் எனப்படும் நன்மை தரும் கொலஸ்ட்ரோலின் அளவு அதிகமாகும்.

டி.ஜி.எல். என்ற கெட்ட கொலஸ்ட்ரோல் அளவு குறையும்.

நீரிழிவு நோயாளிகள் தொடர்ந்து ஸ்நாக்ஸ் அயிட்டங்கள் சாப்பிடுவதால் உடல் பருமன், இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்படுகிறார்கள். துரித உணவு எனப்படும் ஃபாஸ்ட் புட் அதிகம் சாப்பிடும் அதிக உடல் உழைப்பற்ற சொப்ட்வேர் துறையில் உள்ளவர்களே இந் நோயால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

உடற்பயிற்சியின் மூலம் அவர்களின் மன அழுத்தத்தை நன்றாகவே குறைக்க முடியும். நீரிழிவு நோய் உள்ளவர்கள் நல்ல பாத அணிகள் போட்டு நடக்க வேண்டும்.




காரணம் கால்கள் தான் சீக்கிரமே பாதிக்கப்படும். நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தாவிட்டால் அதனால் ஏற்படும் பின் விளைவுகளும் சிகிச்சை முறைகளுக்கும் அதிக செலவுகள் ஏற்படும். அப்படியே ஆனாலும் கூட பூரண நிவாரணம் கிடைக்காது. எனவே மருத்துவரின் ஆலோசனையையும் மருந்துகளையும் சரியான நேரத்திற்கு எடுத்துக் கொண்டால் நீரிழிவு நோயைக் கண்டு பயப்படவேண்டாம்.

**நீரிழிவு நோய் முற்றிய நிலைக்குப் போகாமல் எப்படி தடுப்பது?**

ஆரம்ப நிலையிலேயே மருத்துவரை அணுகி நீரிழிவு நோய்க்கான மருந்துகளை எடுத்துக் கொண்டாலே இது முற்றாது. ஆனால் இப்படி மருத்துவரின் ஆலோசனைப்படி நடக்காமல் மருந்துகளையும் சரியாக எடுக்காமல் இருந்தால் நீரி ழிவு நோய் முற்றி விடும். நீரிழிவு நோய் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்காவிட்டால் கண், சிறுநீரகம், இதயம், நரம்புகள் போன்ற உறுப்புகள் கண்டிப்பாக பாதிக்கப்படும். நோயின் பாதிப்பு அதிகமாகி சில நேரம் கோமா நிலைக்குத் தள்ளப்படுவதும் உண்டு.

**குழந்தை பிரசவிக்கும் போது ஒரு பெண்ணுக்கு நீரிழிவு நோய் இல்லை என்றாலும் பிறக்கும் குழந்தைக்கு நீரிழிவு நோய் இருக்கிறதே எப்படி? இதைக் குணப்படுத்த முடியுமா?**

வைரஸ் இன்ஃபெக்ஷன் மற்றும் நம் உடலில் இருக்கும் பீட்டா செல் இன்சுலின் சுரப்பு அதிகமாக சுரப்பது தான் இதற்குக் காரணம். இதை மாத்திரையினால் குணப்படுத்தவோ, கட்டுப்படுத்தவோ முடியாது. இன்சுலின் ஊசியால் மட்டுமே கட்டுப்படுத்த முடியும். ஆனால் குணப்படுத்த முடியாது. தாய், கர்ப்பகாலத்தில் சீனியின் அளவை சரியாக வைத்திருந்தால் குழந்தைகளுக்கு இந் நோய் வராமல் தடுத்து விடலாம். கட்டுப்பாட்டில் உள்ள நீரிழிவு நோயினால் எந்த ஒரு பின் விளைவுகளும் வருவதில்லை. நீங்கள் உங்கள் உடம்பில் சீனியின் அளவை எப்படி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதே மிக முக்கியமான ஒன்று. உங்கள் கட்டுப்பாடு உங்கள் கைகளில் தான் இருக்கிறது.

இன்றைக்கு உலகம் முழுவதும் ஸ்லோ கில்லர் நோய் என்று சொல்லக்கூடிய இனிப்பு நோய், ஒரு சவாலாகத்தான் இருக்கிறது. காரணம் என்னவென்றால் நாவடக்கம் வேண்டும், மனவலிமை வேண்டும், தின உடற்பயிற்சி வேண்டும்.

உண்மையில் சொல்லப் போனால் சாப்பிடுவதால் மட்டுமே நோய் வருவதில்லை. அளவுக்கு அதிகமாக சாப்பிடுவதால், ஒரே மாவுச்சத்து, இனிப்பு வகையான உணவுப் பொருளையே திரும்ப திரும்ப உட்கொள்வதால் நீரிழிவு நோய் வருகிறது.

எதுஎப்படியோ, சீனியின் அளவை இரத்தத்தில் கட்டுப்படுத்தக்கூடிய சர்வவல்லமை படைத்த ஓமோன் இன்சுலின். இது கணையம் என்ற உறுப்பில் பீற்றா செல்களின் உதவியுடன் சுரக்கும் நீராகும். இது குறைவுபடுவதால் வரும் நோய்தான் நீரிழிவு.

**நீரிழீவு நோய்க்கான முக்கிய அறிகுறிகள் என்னென்ன?**

ஆரம்பத்தில் தூங்கி யெழும் போதே ஒருவிதமான உடல்வலி, சோர்வு, இரவில் அதிக சிறுநீர் பிரிதல், அதிக அளவு தாகம், வியர்வை, சிறு பசி வந்தாலும் தாங்க முடியாமை, பசி என்று வந்தால் உடலில் நடுக்கம், பதற்றம் போன்றவைகள் தெரியுமாயின் இது நீரிழிவு நோய்க்கான அறிகுறி.

இதற்கு மருத்துவம் இன்சுலின் மட்டுமே என்று பலர் நினைக்கிறார்கள்.

இது இப்படியிருக்க இதிலும் கட்டுப்படாத நோயாளிக ளும் உள்ளனர். அல்லது ஏனைய மாத்திரைகளை எடுத்துக் கொண்டேயிருந்தாலும் மேற்சொன்ன உபா தைகளினால் அவதியுறுபவர்களும் உண்டு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வீதி விபத்துக்களினால்

# நான்கு மாதங்களில் 22 பேர் உயிரிழப்பு

**வீதி விபத்துக்களினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டும் கடந்த 4 மாதங்களில் 22 பேர் உயிரிழந்துள்ள தாக யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் உருத்திரபசுபதி மயூரதன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.குடாநாட்டில் வீதிவிபத்தினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. உயிரிழப்பவர்களில் அதிகமானவர்கள் இளம் குடும்பஸ்தர்களாக இருப்பது வேதனைக்குரியது. இவர்களின் இறப்புக்குப்பின் பல சமுதாய சிக்கல்களுக்கு இவர்களது குடும்பங்கள் உள்ளாகின்றன. கல்வி வாழ்வாதாரம் என் பன பாதிக்கப்படுகின்றது.

வீதி விபத்துக்களை குறைப்பதற்கு இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள் இடையே விழிப்புணர்வு மிக அவசியமாகும். வீதி விபத்துக்களில் தற் போது மோட்டார் சைக்கிள் மூலம் ஏற்படும் விபத்துக்களும் பாதசாரிகள் விபத்துக்குள்ளாவதும் அதிகமாகக்காணப்படுகிறது. இவர்கள் வீதி ஒழுங்குகளைப் பின்பற்றாமை, மதுபோதையில் வாகனம் செலுத்துகின்றமை, கவனயீனம் போன்ற காரணங்களால் விபத்துக்கள் கூடுதலாக இடம்பெறுகின்றன.

அத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் வீதி விபத்துக்களால் கடந்த ஜனவரி மாதம் 120 பேரும் பெப்ரவரி மாதம் 100 பேரும் மார்ச் மாதம் 156 பேரும் ஏப்ரல் மாதம் 151 பேரும் காயம் அடைந்து சிகிச்சை பெறுவதற்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீதி விபத்துக்களை குறைப்பதற்காக பாடசாலை மாணவர்கள், இளைஞர்களை இலக்காகக் கொண்டு குடாநாடு முழுவதும் விழிப்புணர்வு நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளோம்.

அந்த வகையில் வடமாகாணசுகாதார, சட்டவைத்தியதுறை நிபுணர்கள், எலும்பு வைத்திய நிபுணர்கள், பொது சத்திர சிகிச்சை நிபுணர்கள், பொலிஸ் மற்றும் ஊடகத்துறையுடன் இணைந்து எதிர்வரும் 3 மாதங்களுக்குள் இந்த நடவடிக்கையை செயற்படுத்தவுள்ளோம்.

இதன்மூலம் யாழ்.மாவட்டத்தில் வீதி விபத்துக்களால் ஏற்படும் மரணங்கள், இழப்புக்களை குறைக்கமுடியும் என எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 50 | 30 | 40 |
| தக்காளி | 80 | 80 | 80 | 60 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 40 | 60 | 60 | 50 | 60 |
| கரட் | 100 | 120 | 140 | 100-140 | 80 |
| பூசணி | 50 | 30 | 40 | 25 | 40 |
| புடோல் | 60 | 50 | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 80 | 120 | 60-100 | 80 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 140 | 140 | 150 |
| பாகற்காய் | 100 | 80 | 80 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 40 | 80 | 70-100 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | — | 70 |
| பயற்றங்காய் | 80 | 90 | 40 | 70 | 70 |
| லீக்ஸ் | 160 | 130 | 200 | 140-160 | 140 |
| பீற்றூட் | 80 | 50 | 80 | 50-60 | 40 |
| கறிமிளகாய் | 80 | 70 | 80 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 400 | 200-300 | 350 |
| போஞ்சி | 160 | 150 | 160 | 120 | 130 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 50 | — | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 40 | 30 | 20 |
| தேசிக்காய் | 200 | 200 | 150 | 200 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40-50 | 60 | 60 |
| இராசவள்ளி | 140 | 160 | 140 | 120 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 50 | 40 | 80 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 10 | 20 |

## தீர்த்தத் திருவிழா

ஈழத்து இராமேஸ்வரம் என அழைக்கப்படும் புங்குடுதீவு பாணா விடை சிவன் ஆலய தீர்த்தத் திருவிழாவும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும் இன்று இடம்பெறும். முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டப பூஜையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து தீர்த்தத்திருவிழா நடை பெறும். அதனைத் தொடர்ந்து திருநாவுக்கரசு நாயனார் குரு பூஜை நடைபெற்று தொடர்ந்து பக்தர்களுக்கு அன்ன தானம் வழங்கப்படும்.

பிற்பகல் ஒரு மணியளவில் ஆலய பரிபாலன சபையினரால் புங்குடுதீவு பாடசாலைகளுக்கி டையே நடைபெற்ற சமய அறிவு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். இந்நிகழ்வில் வேலணை பிரதேச செயலாளர் திருமதி ச. மஞ்சுளாதேவி கலந்து கொண்டு பரிசில்களை வழங்கவுள்ளார். (இ-5-1)

## அங்குரார்ப்பணம்

நெல்லியடி கரணவாய் கிழக்கு கலட்டியில் சுப்பையா கமலம் ஞாபகார்த்த நிதியம் கடந்த சனிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. தொண்டைமானாறு மகா வித்தியாலய முன்னாள் அதி பர் ஆர்.எல்.தேவராஜா அங் குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் மாண வர்களுக்கு புலமைப் பரிசில்களும் நினைவுச் சின்னங்களும வழங்கப்பட்டன. (இ-3-60)

## திருட்டுடன் தொடர்புடையவருக்கு ஆறுமாதங்கள் சிறைத்தண்டனை

நெல்லியடி முருகன் கோவிலுக்கு அருகாமையில் கடந்த மார்ச் மாதம் துவிச்சக்கர வண்டி ஒன்று திருட்டுப் போனமை தொடர்பாக கைதுசெய்யப் பட்ட நபருக்கு 5 வருடம் ஒத் திவைக்கப்பட்ட 6 மாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.


திருநெல்வேலியில் பகுதியைச் சேர்ந்த நபருக்கே பருத்தித்துறை நீதிபதி மேற்படி ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையை கடந்த வெள் ளிக்கிழமை வழங்கியுள்ளார். (இ-3-60)

## கணிதத்திறன் மதிப்பீடு

2014 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணித பாடத்தில் A,B,C தரங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர் களுக்கு மாகாணக் கல்வித் திணைக் களத்தினால் "கணிதத்திறன் மதிப்பீடு" ஒன்று எதிர்வரும் 16 ஆம் தகதி சனிக்கிழமை நடத்தப்படவுள்ளது. இப்பரீட்சைக்கான தயார்ப்படுத்தல் வகுப் புக்கள் நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணி தொடக்கம் நண் பகல் 12 வரை யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. எனவே கல் லூரி மாணவர்களை பாடசாலைச் சீருடையில் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் வே. ஞானகாந்தன் கேட்டுள்ளார். (இ-3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 368

செல்வா ராஜ்




பிரணவன் விவேகானந்தன்




லோஜி லோஜிதா




எட்வின் டேவிட்




வேணு வேணுசன்



சாலினி பத்மநாதன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இனப் படுகொலையை விட கொடிய குற்றம் எது?"




...நடந்தது இனப்படுகொலை என்கிற உண்மையைப் பேசுபவர்கள் மீது இரண்டு முத்திரைகளைக் குத்துகிறது இலங்கை. ஒன்று, தேசத் துரோக முத்திரை. இன்னொன்று, புலி முத்திரை. (இங்கே மட்டும் என்ன வாழ்கிறது?) அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் உண்மையைப் பேசுகிற மிகச்சிலரில் ஒருவர் பாஷண அபயவர்தன.

ஜனநாயகத்துக்கான இலங்கை பத்திரிகையாளர்கள் அமைப்பின் பொறுப்பாளரான அபயவர்தன, பிறப்பால் சிங்களவர். உண்மையை உரைத்ததால் உயிராபத்து ஏற்பட, இலங்கையிலிருந்து வெளியேறி அயல்நாடு ஒன்றில் வசிக்கிறார். (அபயவர்தன போன்றவர்கள் புத்தருக்குப் பிறகுதான் இலங்கையிலிருந்து வெளியேறினார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது!)

**நோ பயர் சோன்** - ஆவணப் படம் சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட நிகழ்ச்சியில் அபயவர்தன நிகழ்த்திய உரை, ஒரு வரலாற்று ஆவணம். சுருக்கமான உரைதான் என்றாலும் பெருஞ் செய்திகள் அடங்கியிருந்தன அந்த உரையில்!

"சொந்த மக்கள் மீதே கொடிய வன்முறைகளை ஏவிவிட்டது எங்கள் அரசு. அது, மிக மிகக் கொடுமையான அரச பயங்கரவாதம். அதை நேரில் பார்த்த தலைமுறையைச் சேர்ந்தவன் நான்..

1983 இல், என்னுடைய இளம் பிராயத்தில், அரசின் நேரடி ஆதரவுடன் சிங்கள இன வெறிக் கும்பல்கள் தமிழர்களைக் கொன்றதையும், அவர்கள் உடைமைகளைச் சூறையாடியதையும் கொள்ளையடித்ததையும் பார்த்திருக்கிறேன்..

2009 இல், ஒரு மிகச்சிறிய நிலப்பரப்புக்குள் தமிழர்களை வலுக்கட்டாயமாக விரட்டி, பட்டினி, பீரங்கித் தாக்குதல் மற்றும் விமானக் குண்டுவீச்சால் கொன்று குவித்தது எங்கள் அரசு. தப்பிப் பிழைத்தவர்கள், மிகக்கொடிய சித்ரவதைகளுக்கும் பாலியல் வன்முறைக்கும் உள்ளாக்கப்பட்டனர். எங்கள் மக்கள் எவ்வளவு ஈவிரக்கமற்றவர்கள் என்பதையும், எங்கள் அரசு எவ்வளவு கொடுமையான அரசு என்பதையும் கண்ணெதிரில் பார்த்தோம்.

சிங்கள இனத்தைச் சேர்ந்த நான், எம் அரசு செய்த குற்றம் எதையும் மறுப்பதற்காக இங்கே வரவில்லை. கற்பனை செய்து பார்க்கக்கூட முடியாத கொடும் குற்றங்கள், எங்களால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டிருப்பதைச் சொல்வதற்காகவே வந்தேன். சிங்கள இனத்தைச் சேர்ந்தவன் என்கிற முறையில் அந்தக் குற்றங்களுக்கு நானும் பொறுப்பேற்றாக வேண்டும்..

நடந்த குற்றங்களை மூடி மறைத்தால்தான் தேச ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற முடியும் என்று எங்களில் சிலர் நம்புகின்றனர். செய்த குற்றத்தை மறுப்பதுதான் எங்களைப் பலப்படுத்தும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

செய்த கொடூரங்களையெல்லாம் மூடிமறைத்தால்தான் காப்பாற்ற முடியும் என்கிற நிலையில் இருக்கிற ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் என்ன அர்த்தம் இருக்க முடியும்?.

என்னைப் போன்ற சிங்களவர்கள், ஆபத்தைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் வேறு மாதிரி சிந்திக்கிறோம். கொல்லப்பட்டவர்களை மறந்துவிட்டு, கொலைகாரர்களுடன் சேர்ந்து வாழவேண்டிய நிலையில் பல தலைமுறைகளாக நாங்கள் இருக்கிறோம். இதனால், எங்கள் தார்மீக பலத்தை அறவே இழந்துவிட்டோம்..

செய்த குற்றங்களையும் கொடூரங்களையும் மூடி மறைப்பதற்கு துணிவோ தைரியமோ தேவையில்லை. கொடிய செயல்களை எதிர்த்துப் பேசத்தான் அந்த இரண்டும் தேவைப்படுகிறது.

நாங்கள், நடந்த கொடுமைகளைத் தடுக்கத் தவறியவர்கள். அதற்கான கூட்டுப் பொறுப்புணர்வு எங்களுக்கும் இருக்கிறது. இதை ஏற்றுக்கொள்கிற மனத்துணிவு தான் மற்றெல்லாவற்றையும் காட்டிலும் முக்கியம் என்று நான் நினைக்கிறேன்."

அபயவர்தனவின் இந்த உரை, சிங்கள இனத்தின் மனசாட்சியை மட்டுமல்ல, மோடியின் மனச்சாட்சியையும் தட்டி எழுப்புகிற உரை.

இலங்கையின் அச்சு அசலான பயங்கரவாதிகள், சிங்கள ஆட்சியாளர்கள்தான். தமிழரின் பிணங்களின் மீது நடந்து சென்றாவது பதவி நாற்காலியில் அமர அவர்கள் தயங்குவதில்லை. தமிழரை எவன் அதிகமாகக் கொடுமைப்படுத்துகிறானோ, அவன்தான் ஹீரோ என்கிற தோற்றம் காலப்போக்கில் உருவாகி விட்டது. அதன் விளைவுகளில் ஒன்றுதான், ராஜபக்ச.

நவீன சிங்கப்பூரின் தந்தை லீ குவான் யூ சொன்னதைப்போல், ராஜபக்ச போன்றவர்கள்தான் மிகக் கொடிய பயங்கரவாதிகள். அந்த பயங்கரவாதிகளிடமிருந்து தங்கள் இனத்தைக் காப்பாற்றப் போராடிய பிரபாகரனும் அவனது தோழர்களும் விடுதலைப் போர் வீரர்கள். அன்று, லீ முன்மொழிந்ததைத் தான், அபயவர்தனவின் உரை வழி மொழிகிறது இன்று! 26 மைலில் இருக்கும் இந்தியா இன்னுமா இந்த நிதர்சனத்தை உணரவில்லை!

இனப்படுகொலை செய்த இலங்கையுடன் நட்பு பாராட்டாதே என்று தமிழகம் அழுத்தந்திருத்தமாக அறிவுறுத்தியும் பயங்கரவாத இலங்கையின் நட்பைத் துண்டிக்காத இந்தியா, விடுதலைப் புலிகள் என்கிற விடுதலைப் போராட்ட அமைப்பின் மீதான தடையை மட்டும் நீட்டித்துக் கொண்டே போகிறதென்றால் என்ன அர்த்தம்?

யாரை பயங்கரவாதி என்கிறார்கள் இவர்கள்! அடித்தவனையா, திருப்பி அடித்தவனையா? இந்த அடிப்படை அறிவுகூட இல்லாமலா ஆட்சி நடத்துகிறார்கள்!

உலகில் நடந்த வேறெந்த இனப்படுகொலைக்கும், ஈழத்தில் நடந்த இனப்படுகொலையை அம்பலப்படுத்தக் கிடைத்திருக்கும் ஆதாரங்கள் அளவுக்கு வலுவான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. தமிழினப் படுகொகொலைக்கு மட்டும் இவ்வளவு ஆதாரங்கள் கிடைத்திருக்கிறதென்றால், அதற்கு கெலும் மக்ரே ஒருவன்தான் காரணம். மக்ரே மூலம் கிடைத்த அந்த ஆதாரங்களை மூடிமறைப்பதற்காகவா பதவியிலிருக்கிறார் மோடி?

1944 ஆம் ஆண்டுக்கு முன் இனப்படுகொலையைக் குறிப்பிடுகிற **"ஜெனோ-சைடு"** என்கிற வாரத்தையே சர்வதேச அகராதியில் இல்லை. போலந்து நாட்டைச் சேர்ந்த யூத சட்ட வல்லுநர் ராபேல் லெமகின்தான், நாஜிக்களின் கொடுமையை உணர்த்த அந்த வார்த்தையை அறிமுகப்படுத்தினார்.

பன்னாட்டுக் கூட்டமைப்பில் அவர் படித்த **"காட்டுமிராண்டித் தனமான குற்றம்"** என்கிற கட்டுரையில் இந்த வார்த்தை இடம் பெற்றது. ஜெனோ என்பது கிரேக்க வார்த்தை. ஒரு சமூகம் அல்லது இனத்தைக் குறிப்பது. சைடு என்பது படுகொலையைக் குறிக்கிற லத்தீன் சொல்.

லெம்கினின் தொடர் முயற்சியால், 1948 இல், இனப்படுகொலையை ஆகப்பெரிய குற்றமாக அறிவித்தது ஐ.நா. 2002இல், அது சர்வதேச நீதிமன்றத்தின் சட்டமாகியது.

உலகின் ஆகப்பெரிய குற்றமாக அதுதான் கருதப்படுகிறது இன்று வரை. என்னைப் பொறுத்தவரை இனப்படுகொலையைக் காட்டிலும, அதை மூடிமறைக்க முயற்சிப்பதுதான் கடுமையான குற்றம் என்று கருதுகிறேன்.

சோனியாகாந்தி செய்த அந்தக் கொடிதினும் கொடிய குற்றத்தை மோடியும் செய்கிறார்- என்பது எனது பகிரங்கமான குற்றஞ்சாட்டு. சோனியா செய்ததை மோடியும் செய்வது ஏன் - என்பதுதான் எனது கேள்வி.

இனப்படுகொலையை மூடி மறைப்பதன் மூலம்தான் இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற முடியும் என்று சோனியாவைப் போலவே நினைக்கிறாரா மோடியும்!

அபயவர்தனவின் உரையை மோடி படித்துப் பார்க்கட்டும். திட்டமிட்டு ஓர் இனம் அழிக்கப்படுவதை மூடிமறைக்க முயல்வது, இனப்படுகொலையைக் காட்டிலும் கடுமையான குற்றம் என்பதைப் புரிந்துகொள்ளட்டும்!

சோனியாவின் பாதையிலேயே போய்க் கொண்டிருந்தால், 3015 இல் கூட தமிழிசையால் முதல்வராக முடியாது என்பதை உணர்ந்து, இனிமேலாவது திருந்தட்டும்!

(முற்றும்)

**புகழேந்தி தங்கராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள்

## மகிந்த புலம்பல்


ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

(கொழும்பு)

**எதிர்வரும் காலங்களில் அரசாங்கத்திற்கு எதிராக செயற்படும் அனைவரையும் கைது செய்வதற்கு தற்போதைய அரசாங்கம் ஆயத்தமாகி வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.**

ஹிக்கடுவ பிரதேச விகாரையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்து அவர் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் நாட்களில் கடந்த அரசாங்கத்தில் செயற்பட்ட அதிகாரிகளை கைது செய்வதற்கு தற்போதைய அரசாங்கம் தயாராக உள்ளதென முன்னாள் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

யாரேனும் அரசாங்கத்திற்கு எதிர்ப்பு வெளியிட்டால், அவர்களை உடனடியாக கைது செய்து விடுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இதுதான் விதியின் விளையாட்டு ஜே.வி.பியின் தலைவர் பரிகாசம்

அன்று பிரதமர் பதவி கேட்டு மைத்திரி மகிந்தவை சுற்றி வந்தார். இன்று மகிந்த பிரதமர் பதவி கேட்டு மைத்திரியை சுற்றி வருகிறார். இதுதான் விதியின் விளையாட்டு என ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஏளனம் செய்துள்ளார். ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மகிந்த அணியின் மக்களை ஏமாற்றும் பித்தலாட்டம் என்றும் அவர் தெரிவித்தார்.

பெல்வத்தையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே ஜே.வி.பி. தலைவரும் எம்.பியுமான அநுர திஸாநாயக்க இவ்வாறு தெரிவிததார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அன்று தனக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய பிரதமர் பதவியை கேட்டு அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சுற்றி வந்தார்.

ஆனால் அப்பதவி மைத்திரிக்கு வழங்கப்படவில்லை.

இன்று பொதுத்தேர்தலில் பிரதமர் வேட்பாளராக போட்டியிட சந்தர்ப்பம் கேட்டு மகிந்த ராஜபக்ஷ மைத்திரிபால சிறிசேனவை சுற்றி வருகிறார்.

இதனைத்தான் விதியின் விளையாட்டு என்பது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இன்று முரண்பாடுகள் தலைதூக்கியுள்ளதோடு மகிந்த அணி மைத்திரி அணி என இரண்டாக பிளவுபட்டுள்ளது.

குருநாகலில் இடம்பெற்ற மகிந்த அணி கூட்டத்தில் 30 பேருக்கும் குறைவான எம்.பி.மாரே கலந்து கொண்டனர்.

கடந்த ஜனவரி 8 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகார தோல்வி கண்டாலும் மகிந்தவின் அணி தோல்வி காணவில்லை. அந்த அணிதான் இன்று ஆட்டம் போடுகிறது.

எனவே பாராளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலை நடத்தினால் இந்த அணியின் ஆட்டம் அடங்கி விடும்.


ரணிலுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப் போவதாக கூறும் மகிந்த அணியின் கருத்துக்கள் மக்களை ஏமாற்றும் பித்தலாட்டம் ஆகும்.

ஏற்கனவே ஜோன் அமரதுங்க ரவிகருணாநாயகவுக்கு எதிராக நம்பிகையில்லாப்பிரேரணை கொண்டு வருவதாக தெரிவித்திருந்தார்.

அதெல்லாம் எங்கே போனது என்றும் அநுர திஸாநாயக்க எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார். (இ-5)

# அரசியலில் மீண்டும் களமிறங்குவேன்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியலில் மீளவும் விரைவில் களமிறங்க உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சில வாரங்களில் மீளவும் தாம் அரசியலில் ஈடுபடுவது குறித்து தீர்மானம் எடுக்கப்படும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சட்ட ரீதியாக நீக்கப்படவில்லை. நான் மீண்டும் அரசியலுக்கு வருவேன் எனவும் தெரிவித்தார்.

நாட்டில் இடம்பெற்று வரும் அரசியல் பிரச்சினைகள் குறித்து அவதானித்து வருகின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நான் வெளியேறவில்லை. எனது பொதுச் செயலாளர் பதவியிலிருந்து மட்டுமே விலகினேன்.

ரணிலையும் சஜித்தையும் ஒன்று சேர்க்க முயற்சித்ததனால் கட்சியை விட்டு வெளியேற நேரிட்டது.

ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்யப்பட்ட விதத்தில் எனக்கு உடன்பாடு இருக்கவில்லை என திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

அரசியல் எதிர்காலம் தொடர்பில் ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## வெற்றிக்கு வேண்டும் படிப்பதும் நினைவில் பதிப்பதும்

எல்லாருக்குமே ஒரு ஆசை உண்டு. குறைந்த நேரத்தில் நிறைய விடயங்களைப் படிக்க வேண்டும். அவற்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நிறைய தகவல்களை நாம் படித்துத்தான் தெரிந்துகொள்கிறோம். அதனால் அதை துரிதமாகப் படித்து தெரிந்து கொள்ள ஆசைப்படுவதில் தவறில்லை.

திபெத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு லாமா குருமார்கள் நேரத்தையும் முயற்சியையும் மிச்சப்படுத்த ஒரு உபாயத்தைக் கையாண்டு வந்தனர். நம்மைப் போலவே அவர்களுக்கும் வாசிப்பதற்கு நேரம் கிடைப்பதில் பிரச்சினை. அவர்கள் அந்தப் பிரச்சினைக்கு எப்படி தீர்வு கண்டார்கள் தெரியுமா? பிரார்த்தனைகளை நீளக்காகிதத் துண்டுகளில் எழுதி சுழலும் உருளையில் சுற்றி வைத்து விடுவார்கள்.

எப்போது பக்தியை வெளிப்படுத்த வேண்டுமோ அப்போது அதற்காக பிரார்த்தனையை வாசிப்பதற்கு பதில் காகித உருளையை சுற்றி விடுவார்கள். இன்றைய பிஸியான உலகமும் இப்படித்தான் போய்க்கொண்டு இருக்கிறது.

**படிக்கும் நேரம்**

ஹ படிப்பதை மேம்படுத்திக்கொள்ள விரும்பினால் படிப்பதற்குத் தேவையான நேரத்தை நாமே உருவாக்கிக்கொள்ள வேண்டும். உண்மையில் உங்களுக்கு ஆர்வமில்லாத விடயத்தைப் படிப்பதை விட முக்கியத்துவம் குறைவான விடயங்களை படிப்பதைவிட அந்த நேரத்தை தகுதியானவற்றைப் படிப்பதற்குப் பயன்படுத்தலாம்.

ஹ உங்களுக்குத் தேவையான நேரம் எப்போதும் கிடைக்கவே செய்கிறது. பயணம் செய்கிறபோது புத்தகம் படிப்பது ஒரு நல்ல உத்தி.

தமிழகத்தின் அதிசய மனிதரான ஜி.டி.நாயுடு கோவையில் இருந்து சென்னை போய் திரும்ப புகையிரதத்தில் டிக்கெட் ரிசர்வ் செய்து கொண்டு விடுவார். கோவையில் இருந்து வண்டி புறப்படத் தொடங்கியதும் படிக்க ஆரம்பிக்கிறவர் சென்னை வந்து சேரும் வரை படித்துக் கொண்டே இருப்பார். மீண்டும் சென்னையில் இருந்து கோவைக்குப் போகும்போதும் படித்தபடியே இருப்பார். அவருக்கு புகையிரத பயணம் பிடிக்கும். அதேமாதிரி படிப்பதும்.

ஹ உங்களுடைய காலை நேரம் முழுவதையும் செய்தித்தாளைப் படிப்பதற்கே அர்ப்பணித்து விடாதீர்கள். அதைவிட முக்கியமான நீங்கள் அவசியம் படித்தே ஆக வேண்டிய புத்தகங்களும் உண்டு.

காலை நேரம் வர்த்தக, தொழில்நுட்ப அறிக்கைகளைப் படிக்க உகந்தது. செய்தித்தாளை தலைப்புச் செய்திகளோடு மூடி வைத்து விடலாம். மீண்டும் மதிய உணவு இடைவேளையின் போது பிரித்துக்கொள்ளலாம்.

அமெரிக்காவில் சவுண்ட் வியூ என்றொரு நிறுவனம் நிர்வாகத்துறை புத்தகச் சுருக்கங்களை வெளியிட்டு வருகிறது. வர்த்தகம் பற்றிய சிறந்த புத்தகங்களை (சிறந்தவற்றை மட்டும்) மாதந்தோறும் தேர்ந்தெடுத்து சுருக்கி இவர்கள் வெளியிடுகிறார்கள். வாசகருக்கு எது முக்கியமாக போய்ச் சேர வேண்டுமோ அதைக் கொடுக்கிறார்கள். இதனால் படிப்பவரின் நேரம் வெகுவாக மிச்சப்படுகிறது.

ஹ முக்கியமான வார்த்தைகளைப் புரிந்து வைத்திராதவர் முழு வாக்கியத்தின் அர்த்தத்தையே கோட்டை விடும்படி ஆகும்.

ஹ உங்களுக்குத் தெரியுமா, நம்முடைய வாசிப்புத் திறனில் பாதி அளவை அல்லது மூன்றில் ஒரு பங்கைத்தான் நாம் படிப்பதற்குப் பயன்படுத்துகிறோம்.

ஹ வாசிப்பதற்கும் திறமை வேண்டும். அந்தத் திறமையை பயிற்சியின் மூலம் நம்மால் வளர்த்துக்கொள்ள முடியும்.

**மேலோட்ட நோக்கமும் கவனமும்**

ஹ படிக்கும்பொழுது ஆரம்பத்தில் இருந்து முடிவு வரை வார்த்தை வார்த்தையாய், பக்கம் பக்கமாய் சிரமத்துடன் படிக்க வேண்டுமென்பதில்லை.

ஹ மேலோட்டமாக படிக்கும்போது கண்கள் வரிகளின் மீது ஓடிக்கொண்டே இருக்கும். அதேநேரத்தில் முக்கியமான விடயங்களை (தலைப்பு, வரைபடம், கண்ணைக் கவரும் செய்திகள்) விட்டு விடாது.

ஹ எப்போதுமே ஒரு 'பாரா'வின் முதல் வாக்கியத்திலும் கடைசி வாக்கியத்திலும் நல்ல 'க்ளு' இருக்கும்.

ஹ கவனமாக வாசிப்பதென்பது முழுமையாகப் படிக்காமலே நுட்பமுடன் பரீட்சித்து அறிவது.

ஹ மேலோட்ட நோக்குடன் கவனமாகப் படிக்கும்போது குறைந்த நேரத்தில் நிறையப் படிக்கலாம்.

ஹ உங்கள் உதவியாளர்களிடம் நீண்ட அறிக்கைக்குப் பதிலாக பத்து வரியில் ஒரு சுருக்கம் தயார் செய்து அனுப்பும்படி தெரிவியுங்கள். நீங்களும் மற்றவர்களுக்கு அவ்விதமே அனுப்பி வைக்கலாம்.

உங்களது கோடரியை எப்போது கடைசியாகக் கூர்மைப்படுத்தினீர்கள்? என்று ஓர் அறிஞர் கேட்கிறார். இதற்கு என்ன பொருள்? இந்தக் காரியத்தைச் செய்து முடிக்க நீங்கள் படித்த புத்தகம் எது? என்பதுதான். கூர் தீட்டுதல் என்பது ஒரு நேரத்தோடு முடிந்து விடாது. அவ்வப் போது நடைபெற வேண்டும்.

அறியாமை வெட்கப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால் அறிந்து கொள்ள விருப்பமில்லாமை அதைவிடப் பெரிய வெட்கக்கேடு என்பார் பெஞ்சமின் பிராங்க்ளின்.

கற்பது என்பது உணவு உண்பது போன்றது. எவ்வளவு உண்டீர்கள் என்பது முக்கியமல்ல. எவ்வளவு ஜீரணித்தீர்கள் என்பதே முக்கியம்.

இதற்குப் பயிற்சியும் நினைவாற்றலும் தேவை.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையுடன் நெருங்கும் அமெரிக்கா



அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு மேலும் விரிவாக்கப்படவுள்ளது என்பதை கடந்த 4 ஆம் திகதி வோஷிங்டனில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட, அமெரிகக இராஜாங்கத் திணைக்களப் பதில் பிரதிப் பேச்சாளர் ஜெப் ரத்கே உறுதிப்படுத்தியிருக்கிறார்.

ஏற்கனவே, இதுபற்றி இலங்கைக்கான பயணத்தின்போது, கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, மேலோட்டமாகத் தெரிவித்திருந்தார்.

அது குறித்து விபரம் கோரியபோதே, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பதில் பிரதிப் பேச்சாளர், இலங்கைக்கு கடல்சார் ஒத்துழைப்பு உதவிகளை அமெரிக்கா அளிக்கவுள்ளது என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

ஆனால், அவை எத்தகைய உதவிகள் என்பது தொடர்பான விரிவான தகவல்கள் எதையும் வழங்கவில்லை. அவை எதுவும் தன்னிடம் கைவசம் இல்லை என்று கூறிவிட்டார். எனினும் இலங்கையுடன் கடல்சார் ஒத்துழைப்புக்களை வலுப்படுத்திக் கொள்வதற்கு அமெரிக்கா தீவிர ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளது என்பது உறுதியாகியிருக்கிறது.

கடந்த வாரம் இதே பத்தியில் கூறப்பட்ட சம்பவத்தை இங்கு மீள நினைவுப்படுத்துவதும் அவசியம். அமெரிக்க கடற்படையின், யு.எஸ்.எஸ்.கார்ல் வின்சன் என்ற விமானந்தாங்கி கப்பலுக்கு, வெளிவிவகார அமைச்சர், மங்கள சமரவீர தலைமையிலான குழுவினர் அழைத்துச் செல்லப்பட்டிருந்த விடயமே அது.

ஜோன் கெரியின் வருகைக்கு இரண்டு வாரங்கள் முன்னதாக, ஏப்ரல் 19 ஆம் திகதி இந்தக் குழுவினர், அமெரிக்க விமானந்தாங்கி கப்பலுக்கு விருந்தினர்களாக அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். இந்தக் குழுவில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தனவும் இடம்பெற்றிருந்தார் என்று கடந்த வாரப் பத்தியில் கூறப்பட்டிருந்தது அதில் ஒரு திருத்தம்.

அந்தக் குழுவில் மங்கள சமரவீரவுடன் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, பாதுகாப்புச் செயலர் பி.எம்.யு.டி.பஸ்நாயக்க,கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா மற்றும் கடற்படை அதிகாரிகளே இடம்பெற்றிருந்தனர்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன அழைத்துச் செல்லப்பட்டிருக்கவில்லை. இவர்களை இலங்கைக்கான அமெரிக்க பதில் தூதுவர் அன்ரூ மான், அமெரிக்க போர்க்கப்பலுக்கு அழைத்துச் சென்றிருந்தார்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், அமெரிக்க கடற்படைக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை வலுப்படுத்தும் மிக முக்கியமான நிகழ்வாக இது கருதப்பட்டது. இந்த நிலையிலேயே, கடந்த வார இதே பத்தி, "அடுத்து வரும் வாரங்களிலோ, மாதங்களிலோ, இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளில் மேலும் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கான முன்நகர்வுகள் மேற்கொள்ளப்படலாம்.

ஏனென்றால், இந்தியப் பெருங்கடலில் சீனாவின் அசைவியக்கத்தை முடக்குகின்ற முக்கியமான மூலோபாயப் பங்காளியாக இலங்கையை அமெரிக்கா கருதுகிறது" என்று முடிக்கப்பட்டிருந்தது. அதன்படியே தான், இலங்கைக்காக கடல்சார் உதவிகளை வழங்கப் போவதான அமெரிக்காவின் அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

இலங்கையை ஒரு பங்காளராகவே பார்ப்பதாகவும், அதன் கடல்சார் பாதுகாப்புத் திறனைக் கட்டியெழுப்புவதற்கு உதவவுள்ளதாகவும் கூறியிருக்கிறார் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பதில் பிரதிப் பேச்சாளர் ஜெப் ரத்கே.

கடற்கொள்ளை முறியடிப்பு, ஆட்கடத்தல் முறியடிப்பு நடவடிக்கை, மனிதாபிமான உதவிகள் மற்றும் அனர்த்த மீட்பு நடவடிக்கைகள் போன்றவை அதில் அடங்கும். இவை ஏற்கனவே பல்வேறு நாடுகளுடன் அமெரிக்கா கொண்டுள்ள உறவுகள்தான். ஆனால், இலங்கையுடன் இதற்கு அப்பாலும் சென்று உறவுகளைப் பலப்படுத்த அமெரிக்கா விரும்புகிறது.

இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் முன்னணி கடல்சார் நாடாக இலங்கையை விளித்துள்ள ஜெப் ரத்கே, கடல்சார் பாதுகாப்புக்கு இலங்கை அளிக்க விரும்பும் பங்களிப்பை நிறைவேற்ற அமெரிக்கா உதவவுள்ளதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

இது நிச்சயம் சீனாவை முடக்குகின்ற மூலோபாயத்தின் ஒரு பகுதியாகவே பார்க்கப்படுகிறது. வெளிப்படையாகவே பார்க்கப்படுகிறது. வெளிப்படையாக அதனை அமெரிக்கா கூறவில்லை. ஆனால்,அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பதில் பிரதிப் பேச்சாளர் ஜெப் ரத்கேயின் கருத்தில் ஒரு விடயம் உட் பொதிந்துள்ளது.

அமெரிக்காவும் இலங்கையும் அச்சுறுதலுக்கு எதிராகவும், பிராந்திய அல்லது கடல்சார் பகுதிகளை பலாத்காரமாக பயன்படுத்துவதற்கு எதிராகவும், இணைந்து பணியாற்றுகின்றது.

பெரிய நாடுகள், சிறிய நாடுகள் என்றில்லாமல் எல்லா நாடுகளுக்குமே, தமது எல்லைக்குட்பட்ட கடல் மற்றும் வானத்தைப் பயன்படுத்தும் சட்ட ரீதியான உரிமையைக் கொண்டுள்ளன என்ற அடிப்படையில் நாம் இணைந்து பணியாற்றுகிறோம்" என்று குறிப்பிட்டிருந்தார் அவர்.

அது தென்சீனக் கடலுக்கு உரிமை கோரும் சீனாவுக்கு எதிரான பொது நிலைப்பாட்டில், இரு நாடுகளும் இணைந்திருக்கின்றனவா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது. முன்னொரு தடவை மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில், தென்சீனக் கடல் உரிமை தொடர்பாக வியட்னாமுக்கு சார்பாக அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கருத்து வெளியிட்டிருந்தார்.

அது சீனாவுக்கு கோபமூட்டிய நிலையில், உடனடியாகவே மஹிந்த ராஜபக்ச அவரை அழைத்துக் கடித்து கொண்டதுடன், வெளிவிவகார அமைச்சு சார்பில் ஓர் அறிக்கையும் வெளியிடப்பட்டது. இந்தப் பிரச்சினையை இரு நாடுகளும் பேசித் தீர்த்ததுக் கொள்ள வேண்டும் என்று பூசி மெழுகியிருந்தது வெளிவிவகார அமைச்சு.

இப்போது சீனாவுக்கு எதிராக நிலைப்பாட்டில் உள்ள அமெரிக்காவுடன், இந்த விவகாரத்தில் இலங்கை ஒத்துப்போகிறதா என்பது குறித்து வெளிவிவகார அமைச்சு எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. ஆனால், அமெரிக்காவின் கருத்துப் படி பார்த்தால், தென் சீனக்கடல் விவகாரம் உள்ளிட்ட சர்ச்சைக்குரிய கடல்சார் விவகாரங்களில், சீனாவுக்கு எதிரான நிலையையே இலங்கை எடுத்திருக்க வேண்டும்.

அதேவேளை, இலங்கையை இந்தோ-பசுபிக் பிராந்தியத்திலுள்ள முன்னணி கடல்சார் நாடாகக் குறிப்பிட்டுள்ள அமெரிக்கா, இலங்கையுடன் கடல்சார் ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதன் மூலம் தனது கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புத் திறனை மேலும் விரிவாக்கிக் கொள்ள எத்தனிக்கிறது.

கடற்கொள்கை எதிர்ப்பு, ஆட்கடத்தல் முறியடிப்பு தீவிரவாத எதிர்ப்பு இவை மூன்றும்தான், தற்பொது பொதுவாக கடல்சார் பலத்தை விரிவாக்கிக் கொள்வதற்கு வல்லரசு நாடுகளால் கூறப்படுகின்ற காரணங்களாகும். இப்போது சீனக் கடற்படை, ஏடன் வளைகுடா வரைக்கும் தனது நீர்மூழ்கிகளை அனுப்பி கண்காணிப்பை மேற்கொள்கிறது.

கடற்கொள்ளையர்களிடம் இருந்து தமது நாட்டுக் கப்பல்களைப் பாதுகாக்கவே அவற்றை அங்கு அனுப்பியதாக நியாயம் கூறுகிறது சீனா. சிறிய படகுகளில் வரும், கடற்கொள்ளையர்களுக்கு எதிராகப் போராடுவதற்கு, எதற்காக நீர்மூழ்சிகள் என்ற கேள்விக்கு சீனாவினால் பதிலளிக்க முடியவில்லை.

கடற்கொள்ளை, தீவிரவாதம், ஆட்கடத்தல் இந்த மூன்றும் தற்போது கடல்சார் பாதுகாப்புக்கு சவாலான விடயங்களாக உள்ள நிலையில், வல்லரசு நாடுகள் இவற்றை வைத்து, பெருங்கடல் பகுதிகளின் ஆதிக்கத்தை விரிவாக்க முனைகின்றன.

இலங்கையுடன் இணைந்து அமெரிக்காவும், இத்தகையதொரு வலைப்பின்னலைத் தோற்றுவிக்கவே முனைகிறது.

முன்னர் சீனா இதற்கான முயற்சியில் ஈடு பட்டது. கடந்த ஜனவரி மாதம் நிகழ்ந்த ஆட்சி மாற்றம், சீனாவின் அந்த திட்டங்களைக் குழப்பிவிட்டது.

இலங்கை ஆட்சி மாற்றத்துக்குப் பிந்திய சூழலை இந்தியாவும் அமெரிக்காவும் கவனமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கியிருக்கின்றன. இலங்கையுடன் இணைந்து இந்தியப் பெருங்கடலில் கடல்சார் கண்காணிப்பை தீவிரப்படுத்தவும், பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இந்த நாடுகள் திட்டமிட்டுள்ளன.

குறிப்பாக, இந்தோனேசிய பசுபிக் கடற்பிராந்தியத்தில், அடுத்த ஏழு ஆண்டுகளுக்குள் 6 விமானந் தாங்கிக் கப்பல்கள், 200 போர்க்கப்பல்களை நிறுத்தும் பாரிய கடலாதிக்க விரிவாக்க கொள்கையை அமெரிக்கா நடைமுறைப்படுத்தவுள்ளது.

அதன் ஒரு பங்காளியாக, இலங்கையையும் இணைத்துக் கொள்ள அமெரிக்கா விரும்புகிறது. இதன் ஒரு கட்டமாக, இலங்கையின் கடல்சார் கண்காணிப்புத் திறனை வலுப்படுத்தும், உதவிகள் அமெரிக்காவிடம் இருந்து கிடைப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன.

கடந்த சில ஆண்டுகளாக, அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் சீர்குலைந்து போயிருந்தன. இராஜதந்திர ரீதியான உறவுகளில் ஏற்பட்டளவுக்கு, பாதுகாப்பு உறவுகளில் மோசமான பாதிப்பு ஏற்படாது போனாலும், அவை வெறும் மனிதாபிமான உதவிகள் ஒத்துழைப்புகளாகவே மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

அமெரிக்காவிடமிருந்து இலங்கைக்கு கடைசியாகக் கிடைத்த மிக முக்கியமான பாதுகாப்பு உதவி என்றால், அது, 2010ஆம் ஆண்டு விமானப்படையின் கடல்சார் கண்காணிப்புத் திறனை அதிகரிப்பதற்காக வழங்கப்பட்ட, Real Time Data Link system தான். இதற்குப் பின்னர், குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பாதுகாப்பு உதவிகள் எதுவும் அமெரிக்காவிடம் இருந்து கிடைத்திருக்கவில்லை.

போர்க்குற்ற விவகார இழுபறிகள் அதற்குத் தடையாக இருந்தது. இப்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், அமெரிக்காவுக்கு சாதகமான நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனைப் பயன்படுத்திக் கொண்டு அமெரிக்கா இலங்கையுடன் இணைந்து இந்தியப் பெருங்கடலில் கடல்சார் ஒத்துழைப்பைக் கட்டியெழுப்ப முனைகிறது.


இது மறைமுகமாக சீனாவை முடக்குகின்ற முயற்சியாக இருந்தாலும், அதனை வெளிப்படையாக கூற அமெரிக்காவோ, இலங்கையோ முன்வரப் போவதில்லை. ஏனெனில, சீனாவுடன் வெளிப்படையான பனிப்போரைத் துவக்க இந்த இரண்டு நாடுகளும் விரும்பவில்லை.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க- இலங்கை உறவுகளுக்கு உயிரூட்டமளிக்கும் அமெரிக்க இராஜாங்க செயலர் கெரியின் இலங்கை விஜயம்





கடந்த வருட மேமாதத்தில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள மூத்த அதிகாரிகளுடனான சந்திப்புடன் ஆரம்பிக்கப்பட்டு இந்த வருடம் ஜனவரியில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் விஜயத்துடன் உறுதி செய்து முத்திரையிடப்பட்ட அமெரிக்காவுடனான புதியகொள்கை அடிப்படையில் மீளமைக்கப்பட்ட நல்லுறவுக்கான பெருமை இதனை மேற்படி ஆரம்பித்து வைத்தவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையே சாரும். எப்படியும் இந்த உறவுகளின் மத்தியிலும் உறுத்துவதாக முனைப்பான முறையில் வெளித்தெரியும் மனித உரிமை மீறல் விடயமான யுத்தக்குற்றங்கள்மட்டில் தொடர்ந்துமிருந்துவரும் பொறுப்புக்கூறும் கடப்பாடே எரிச்சலூட்டுவதாயுள்ளது. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு ஐ.நா. மனிதவுரிமைச் சபையினால் இலங்கை பொறுப்புக்கூறவேண்டிய அவசியம் பற்றி சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மட்டில் அமெரிக்கா நேரடி ஆர்வம் கொண்டுள்ளது. இலங்கையால் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வந்த தொடர் இராணுவ நடவடிக்கையின் இறுதிக்கால கட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட இப்போர்க்குற்றங்களுக்கு பொறுப்புத் தேடும் அமெரிக்காவே இந்தப் புலிகள் அமைப்பினை உலகத்திலேயே ஆகக்கூடுதல் ஆபத்தான பயங்கரவாத இயக்கமாக ஒரேயடியாக தடை செய்ததுடன் அதில் மாற்றமின்றி இன்றும் அது தொடர்ந்து கொண்டிருப்பது தெரிந்த விடயமே.

எமது நாட்டின் ஆயுதப் படைகளே பொதுவாக நாட்டில் நிலவிய பயங்கரவாதத்தையும் குறிப்பாக அந்துப் பாசிசவாத அமைப்பின் செயற்பாடுகளையும் முறியடித்து வெற்றியீட்டினர் என்று கூறிக் கொள்வதில் பெரும் சந்தோசமடையும் இலங்கை மக்களது பொதுவான இவ்விருப்பிற்கு அமெரிக்காவின் நகர்வுகள் தடையாயிருப்பதை அவர்கள் ஒருபோதுமே விரும்புகிறவர்கள் அல்லர்.

2 ஆவது உலக மகாயுத்தம் முடிவுற்றதிலிருந்தே (ஜப்பானிய நகரங்கள்மீது அணுக்குண்டுவீசி பயங்கர அச்சமூட்டும் விதமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.) உலகம் முழுவதும் பல்வேறு போர்களிலும் ஈடுபட்டுவரும் ஒரு நாடான அமெரிக்கா முறைகேடான அதிதீவிர இராணுவ நடவடிக்கைகளை தனது எதிரிகள் மீது திணித்து வருவது சகலரும் அறிந்ததே. நீதி முறைச் சட்டங்களுக்குப் புறம்பான வழிமுறைகளைக் கையாண்டு எதிரிகளைக் குறி வைப்பதுடன் ஆளில்லாத தொலைக்கட்டுப்பாட்டு வானூர்திகள் மூலம் தாக்குதல்களை மேற்கொண்டு அப்பாவிப் பொதுமக்களையும் சேர்த்தே கொல்லும் அமெரிக்காவுக்குச் சுத்தமானதும் நீதியானதுமான சட்டபூர்வ போர்களை எப்படி நடத்துவது என்று மற்றவர்களுக்குப் போதிக்கும் அருகதை இல்லையென்றே கூறவேண்டும். அமெரிக்க சர்வதேச உறவுக் கொள்கைகளில் நீண்டகாலகுருவாக இருந்தவர்களுள் மற்றுமொருவரான அனுபவசாலியொருவர் இது பற்றிக் குறிப்பிடுகையில் பின்வருமாறு கூறுகிறார்.

“.... அமெரிக்க வெளியுறவுக் கொள்கை என்பது இறுதியில் வெற்றியே சாத்தியமான கதைபோன்ற ஒன்றா? ஒரு உலக ஒழுங்கிற்கான தனது பங்கினை அமெரிக்கா தார்மீக அடிப்படையில் நிறைவான ஒன்றுதானா எனப் பரிசோதித்துப் பார்க்குமானால் அது தன்னைத்தானே தண்டித்துக் கொள்ளவேண்டியிருக்கும். சிலவேளைகளில் சட்டத்தினடிப்படையில் அமைதி-சமாதானம் நிறைந்தவிதமான ஓர் ஜனநாயக உலகத்திற்கேற்ப அமெரிக்காவே சர்வதேச ரீதியில் பொதுவான கோட்பாடுகளில் வேரூன்றிய விதமாக இருப்பதாகவும் அதேநேரம் ஏனைய நாடுகள் வெறுமனே தமது சொந்தத் தேசிய நலன்களின் அடிப்படையிலே செயற்பட்டுவருவதாகவுமே அமெரிக்க ஜனாதிபதிகள் ஒவ்வொருவரும் பிடிவாதமான முறையில் தொடர்ந்தும் உறுதிப்படுத்திக்கொள்ளும் விதத்தில் அதிதீவிர முயற்சிகளில் அதீதமாகவே ஈடுபடுவதுடன் முடியாதென்ற இறுதி நிலையில் அதுபற்றிய மாயையிலிருந்து விடுபடும் போது தமது முயற்சிகளிலிருந்து பின்வாங்கிச் செல்லும் நிலையே பொதுவில் ஏற்படுவதாயுள்ளது. (டாக்டர் ஹென்ரி கிஸ்சிங்கர்; உலக ஒழுங்கு-பக்.278-279)

அமெரிக்காவும் தவறிழைக்காமல் இல்லையென இராஜாங்கச் செயலர் கெரி இலங்கை வருகையின் போது தோல்வியை ஏற்றுக் கொண்டு கூறியது போதிய பெருந்தன்மையையே வெளிக் காட்டியதாயிருந்தது. உலகம் முழுவதும் அமெரிக்கா போர் நடத்திவரும் முறைபற்றி குறிப்பாக எடுத்துக்கூறாது தவிர்த்திருந்தபோதிலும் அமெரிக்காவின் நீதிமுறை ஒழுங்குகளிலிருக்கும் குறைபாடுகளையும் மனிதவுரிமை மீறல்கள் பற்றிய அறிக்கைப் பதிவுகளையும் அவர் ஏற்றுக் கொண்டவராகவேயிருக்கிறார்.

உங்களது நீதிமுறைச் சட்டங்களை சுதந்திரமாக உயர் தராதரம் நியாயமானதும் பொருத்தமானதுமான நடைமுறைகள் போன்றவற்றிற்கேற்ப மாற்றியமைப்பதற்கு நீண்ட காலம் தேவைப்படும். இந்த விதமான சீர்திருத்தங்களை உலகில் எங்கு நடைமுறைப் படுத்துவதென்றாலும் அது கடினமானதேயாகும். அமெரிக்காவிலும் இந்தவிதமான சீர்திருத்தங்களை எமது நடைமுறை ஒழுங்குகளில் கொண்டு வருவதற்கான முயற்சிகளிலும் நாம் ஈடுபட்டே வருகின்றோம். தொலைக்காட்சிகளிலும் இந்தவிதமான சீர்திருத்தங்கள், மாறுதல்களை நீங்கள் கண்டிருப்பீர்கள். அது எளிதான ஒன்றுமல்ல. ஆனாலும் அவ்விதமான எமது முயற்சிகளில் முற்றிலும் அத்தியாவசியமான முறையில் வெளிப்படைத் தன்மையும் பேணப்பட வேண்டும் என அவர் கூறினார். இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் மனிதவுரிமைச் செயற்பாடுகள் மட்டில் மேற்கொண்டும் அபிவிருத்தி காணுவதற்கான உதவிகளை அமெரிக்கா அளிப்பது குறித்துப் பேசிய போது அமெரிக்கா உட்பட வேறு எந்த நாடுமே முழுநிறைவான மனிதவுரிமைச் செயற்பா டுகளுக்கான நியாயமான பதிவுகளை நடைமுறையில் கொண்டதாயில்லை. சிறந்த நடைமுறை அபிவிருத்திகளைக் காண்பதற்காக நாம் அனைவருமே கடினமாக முயற்சித்தேயாகவேண்டும்...” எனவும் கூறினார்.



இலங்கை மட்டிலான அமெரிக்க வெளியுறவுக்கொள்கை என்பது இலங்கை தனது பிரச்சினைகள் மட்டில் கொண்டுள்ள தார்மீக கரிசனம், அவற்றுக்கான தேடல்கள் மற்றும் மகிந்த ராஜபக்ஷ அரசின் பகைமைப்போக்குக் காரணமாக அமெரிக்காவிலிருக்கும் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களது பிரச்சினையை அது தனது மனிதவுரிமை மீறல்களுக்கான ஒரு மறைப்பாக எவ்வளவு தூரம் பயன்படுத்தி வந்தது என்றதன் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டதாயிருந்தது. ஆனாலும் அமெரிக்கச் செயலர் கெரியினது விஜயம் உறவுகள் மட்டில் மேற்கொண்டும் தவறுகளற்ற சுத்தமான புதிய பதிவுகளை ஆரம்பிக்கும் புதியதோர் தொடக்கத்தினையே குறிப்பதாயுள்ளது. எனினும் களனிப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் கெலனி ரஜமகாவிகாரைக்கான கெரியின் விஜயமானது இலங்கை மட்டில் பேரன்பு கொண்டிருக்கும் பெரும்பான்மை சமூகமொன்று இலங்கையில் இருக்கிறது என்பதை அமெரிக்கா குறிப்பிடத்தக்கவிதமாக அங்கீகரிப்பதுடன் அவர்களுடன் கூடவே வாழ்ந்துவரும் சிறுபான்மை மக்கள்மீது தனக்கிருக்கும் ஆர்வத்துடனும் சுத்தமான தார்மீகக் கடப்பாடுகள் காரணமாக தனது உண்மையான வெளியுறவுக்கொள்கையின் ஒருபகுதியாக அதுபற்றிய பிரச்சினையும் உள்ளடக்குவதாகவும் அவர் எடுத்துக் கூறியிருந்தார்.

அத்துடன் 19 ஆம் நூற்றாண்டின் ஏகாதிபத்திய எதிர்ப்பு வாத கால புத்தமத எழுச்சி அமைப்பினை ஆரம்பித்தவரான கேணல் எச். எஸ். ஒல்கொட் கூட ஓர் அமெரிக்கர் என்பதை அமெரிக்காவோ இலங்கையோ ஒருபோதுமே புறந்தள்ளி விடமுடியாது.

அமெரிக்க- இலங்கை உறவுகள் மீளவும் சீரமைக்கப்படும் இக்கால கட்டத்தில் இருநாடுகளுக்குமிடையிலான சந்தேகங்கள் பரஸ்பரம் நிவர்த்தி செய்யப்படுவதுடன் நம்பிக்கைகளும் வலுப்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக இலங்கை மக்கள் விடயத்தில் மீளவும் சுடர்விட ஆரம்பித்திருக்கும் இவ்வித நல்லுறவுகள் பொதுவான ஜனநாயக விழுமியங்கள், நல்லாட்சி, மனித உரிமைகள் போன்றவற்றுடன் இருநாடுகளினதும் வர்த்தகம், பாதுகாப்பு ரீதியிலான நன்மைகளுங்கூட இருதரப்புக்களிடமிருந்து இயல்பாகவே எழும் உண்மையான பரஸ்பர விருப்பு, எதிர்பார்ப்பு போன்றவற்றிலிருந்து உருவாகி எழுச்சி பெறுவதாயிருக்க வேண்டும்.



(முற்றும்)

**அமெரிக்க- இலங்கை உறவுகளுக்கு உயிரூட்டமளிக்கும் அமெரிக்க இராஜாங்கச் செயலர் கெரியின் இலங்கை விஜயம் எனும் தலைப்பில் சண்டே ரைம்ஸ் ஆசிரியர் தலையங்கத்தில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.**

**தமிழில்: யோகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடும் மழையுடனான காலநிலை காரணமாக நாடளாவிய ரீதியில் 192 குடும்பங்கள் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் தொடர்ச்சியான சீரற்ற கடும் மழையுடனான காலநிலை காரணமாக கடந்த 48 மணி நேர காலப்பகுதியில் 192 குடும்பங்களைச் சேர்ந்த 541 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி குறிப்பிடுகையில்,

தொடர்ச்சியான கடும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக கடந்த 48 மணி நேர காலப்பகுதியில் நேற்று முன்தினம் காலை வெளியிடப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் நாடளாவிய ரீதியாக 192 குடும்ப ங்களைச் சேர்ந்த 541 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே நாட்டில்நிலவும் சீரற்ற காலநிலை மற்றும் கடும் மழையின் காரணமாக கொழும்பு மாவட்டத்தில் 22 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்த குறிப்பாக கொழும்பு - ராஜகிரிய பகுதியில் உள்ள சில குடும்பங்கள் தற்காலிக முகாம்களில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சீரற்ற காலநிலையினூடான மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் மின்னல் தாக்கம் ஏற்படுவதற்கான அபாயம் உள்ளதால் மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

மின்னல் தாக்கம் காரணமாக இவ் வருடம் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக அதிகரித்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## ஊழல் குற்றச்சாட்டுக்குள் சிக்கிய 169பேர் விரைவில் கைதாவார்கள்

(கொழும்பு)

மகிந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த முக்கிய அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் 169 பேருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவிடம் இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் 31 பேருக்கு எதிராக நீதிமன்றிற்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கு அமைய பொலிஸ் நிதிக் குற்றவியல் பிரிவிற்கு மேலதிகமாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர்.

இந்த நிலையில் எதிர்காலத்தில் மேலும் பலர் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

## இலங்கை வர முயன்ற யாழ். இளைஞன் கைது

(கொழும்பு)

தமிழகத்தில் இருந்து சட்டவிரோதமாக படகு மூலம் இலங்கைக்கு வர முயற்சித்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த 26 வயதான வினோத்குமார் என்ற இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழகத்தின் வேதாரண்யம் பகுதியில் இருந்து மீனவருக்கு சொந்தமான படகில் இலங்கைக்கு வர முயன்றுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த இளைஞன் கடந்த 26 ஆம் திகதி படகு மூலம் தமிழகத்திற்கு சென்றிருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (இ-5)

## முன்னாள் அமைச்சருக்கு மீண்டும் விளக்கமறியல்!



முன்னாள் நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிற்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் நேற்று குருநாகல் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.

இதன்போது முன்னாள் அமைச்சரை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ச.தொ.ச கூட்டுறவு நிலையங்களில் நிதி கொடுப்பனவுகளை மேற்கொள்ளாது பொருட்களை பெற்றுக் கொண்டதன் மூலம், 52 இலட்சம் ரூபாவை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நிதி மோசடி பொலிஸ் விசாரணைப் பிரிவுக்கு வாக்குமூலமளிக்கச் சென்றிருந்த போதே அவர், கடந்த 5ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் கடந்த 6ஆம் திகதி குருநாகல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட முன்னாள் நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே அவர் நேற்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போர்து நீதிமன்றம் அவரை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (இ-5)

# துறைமுக அதிகார சபையினை சுத்தப்படுத்த கடல்நீர் போதாது

## அமைச்சர் அர்ஜுன தெரிவிப்பு



(கொழும்பு)

**ஊழல் மோசடிகள் நிறைந்த திருட்டுக் குகையாக துறைமுகங்கள் அதிகார சபை இலங்கையிலேயே உள்ளதாக குற்றம் சாட்டும் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க,இதனை தூய்மைப்படுத்துவதற்கு கடல் நீர் போதாது என்றும் தெரிவித்துள்ளார்.**

அத்தனகலையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பொது நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் ஊழல் மோசடி மிக்க நிறுவனம் கிரிக்கெட் நிறுவனம் என்றுதான் இவ்வளவு காலமும் நான் நினைத்திருந்தேன். ஆனால் கிரிக்கெட் நிறுவனத்தை விட மும்மடங்கு இலங்கையிலேயே ஊழல் மோசடிகள் நிறைந்த திருட்டுக்குகையாக துறைமுகங்கள் அதிகார சபையே உள்ளது என்பதை அதற்கு பொறுப்பான அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்ட பின்னர் தெரிந்து கொண்டேன்.

ஜனாதிபதி எனக்கு முக்கியமான அமைச்சுப்பதவியையே வழங்கியுள்ளார். இந்த அமைச்சுப் பதவியை நான் பொறுப்பேற்ற போது துறைமுக அதிகார சபையில் குப்பைகளை வெளியேற்றி கழுவி சுத்தமாக்குவதற்கு கடல் நீர் போதாது என மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

அந்தளவிற்கு அதுவொரு திருட்டு குகையாக உள்ளது. எனது விதியோ தெரியாது. எனக்கு அமைச்சு பதவிகள் கிடைக்கும் போது ஊழல் மோசடிகள் நிறைந்த இடங்களுக்குதான் கிடைக்கின்றது.

அந்த வரிசையில் இன்று துறைமுகங்கள் அதிகாரசபை கிடைத்துள்ளது. இதனை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டதோடு இன்று ஊழல் மோசடிகள் இல்லாத நிறுவனமாக இதனை மாற்றியுள்ளேன் என்றும் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார். (இ-5)

## இடைக்காலத்தடை உத்தரவு

மத்திய மாகாண முதலமைச்சர சரத் ஏக்கநாயக்கவை பதவியில் இருந்து அகற்றும் நடவடிக்கைக்கு மேன முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தாக்கல் செய்த மனுவொன்றை பரிசீலித்த போதே நீதிமன்றம் இத்தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

மாகாண சபை சட்டத்தின் கீழ் தன்னை பதவி விலக்க மத்திய மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுத்து வருவதாக குறித்த மனுவில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அது சட்டத்திற்கு புறம்பானது என நீதிமன்றம் அறிவிக்க வேண்டும் என சரத் ஏக்கநாயக்க தனது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி விஜித் மல்லகொட மற்றும் எச்.சி.ஜே.மடவல உள்ளிட்ட நீதிபதிகள குழு மனுவை பரிசீலித்து இந்த இடைக்காலத் தடையை விதித்துள்ளது.

அத்துடன் வழக்கு எதிர்வரும் 16ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்புக்கள் காணப்படுமாயின் குறித்த வழக்கு விசாரணைக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது. (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி மகாதேவன் மங்களயோகேஸ்வரி

பருத்தித்துறையை பிறப்பிட மாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாதேவன் மங்களயோகேஸ்வரி கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.



### நாகலிங்கம் ஞானசம்பந்தன்

(முன்னாள் பிறப்பு, இறப்பு விவாக பதிவாளர், சமாதான நீதவான்)

யாழ்ப்பாணம் சுதுமலை தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆசிரநாகலிங்கம் ஞானசம்பந்தன் நேற்று முன்தினம் காலமானார்


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு சுதுமலை தெற்குபதிவாளர்தெருவில் அமைந்த அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செல்லப்படும்.



### திருமதி செல்லையா பூரணம்

சரவணை கிழக்கைச் சேர்ந்த செல்லையா பூரணம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சரவணை பன்னம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சிவசுப்பிரமணியம் யோகராணி

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் யோகராணி கடந்த 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி ஐயாத்துரை சகுந்தலா

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சகுந்தலா கடந்த 9ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப.11.30மணி தொடக்கம் பி.ப.2.30 மணி வரை Chapel Ridge Funeral Home,8911 Woodbine Ave, Markham,ON L3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவுதி அரேபிய நாட்டில் 30லட்சம் இந்தியர்கள்

## கடந்த 16 மாதங்களில் 5இலட்சம் பேருக்கு வேலை

சவுதி அரேபியாவில் இந்தியர்களின் எண்ணிக்கை 30 இலட்சத்தை தாண்டும் என்றும் கடந்த 16 மாதங்களில் 5 இலட்சம் இந்தியர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவுதியில் வீட்டு வேலைகள் செய்வதற்காக இந்தியாவில் இருக்கும் மனிதவளத்தைப் பயன்படுத்திக கொள்ள கடந்த ஆண்டு ஜன வரி மாதத்தில் இரு நாடுகளுக் கிடையே ஒப்பந்தம் ஒன்று கையெ முத்தானது. அதன் மூலம் கடந்த 16 மாதங்களில் 5 இலட்சம் இந்தியர்களுக்கு சவுதியில வேலை கிடைத்திருக்கிறது.

இதன் மூலம் அங்கு வசிக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை 30 இலட்சத்தைத் தொட்டுள்ளது. அந்த நாட்டில் தற்போது அதிகளவு வெளிநாட்டினராக இந்தியர்கள்தான் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், அந்த ஒப்பந்தம் வெளிநாட்டில் வேலை செய்யும் இந்தியர்களுக்கான உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதை மட்டுமே பேசுகிறது. குறைந்தபட்ச ஊதியம் குறித்து அதில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை

இந்தியாவில் இருந்து சவுதிக்கு வேலைக்கு அமர்த்த ஒரு பணியாளருக்கு 18 ஆயிரம் முதல் 21 ஆயிரம் சவுதி றியால்கள் (சுமார் ரூ. 3 லட்சம் முதல் ரூ.4 லட்சம் வரை) செலவாகிறது. தவிர ஒருவரை பணிக்கு அமர்த்தும் நடைமுறைகள் முடிவதற்கு 5 முதல் 8 மாதங்கள் வரை ஆகின்றன. (இ-5)


# இந்தியாவில் முதலீடு செய்யுமாறு மொஸ்கோவில் பிரணாப் அழைப்பு

(மொஸ்கோ)

ரஷ்யா வாழ் இந்தியர்கள் மத்தியில் பேசிய ஜனாதிபதி பிரணாப் முகரஜி, இந்தியாவில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுத்தார். ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி 5 நாட்கள் பயணமாக ரஷ்யா சென்றுள்ளார்.

தலைநகர் மொஸ்கோவில் நேற்று முன்தினம் ரஷ்யாவாழ் இந்தியர்கள் பங்கேற்ற கூட்டத்தில் பிரணாப் கலந்து கொண்டு பேசியதாவது,

இந்தியா, ரஷ்யா இடையேயான உறவு புதிய உச்சத்தை அடைந்துள்ளது. அரசியல், பாதுகாப்பு, இராணுவம், வர்த்தகம், அறிவியல், தொழில்நுட்பம், கல்வி மற்றும் கலாசாரம் என பல துறைகளிலும் இரு நாடுகளும்



இணைந்து செயலாற்றுகி ன்றன.

இந்தியாவின் பொருளாதார நிலைப்பாட்டை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்லவேண்டிய நேரம் இது. அதற்கு வர்த்தகமும், முதலீடுகளும் அவசியம். எனவே, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ரஷ்ய வாழ் இந்தியர்கள் துணை நிற்க வேண்டும்.

மேக் இன் இந்தியா, டிஜிட்டல் இந்தியா, ஸ்மார்ட் சிட்டி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயற்படுத்தி வருகிறது.

இவற்றில் முதலீடு செய்யுங்கள். உங்கள் திறமையின் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கு துணை நிற்பதுடன், இந்தியா-ரஷ்யா இடையேயான நல்லுறவு மேம்பாட்டுக்கும் பாலமாக செயற்படுங்கள். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பேருந்து விபத்தில் 15 பேர் உயிரிழப்பு

(உதம்பூர்)

**ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் உதம்பூர் மாவட்டத்தில் பேருந்து ஒன்று நேற்றுக் காலை ஆழமான பள்ளத்தில் கவிழ்ந்ததில் 15 பேர் பலியான அதேவேளை மேலும் 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.**

அம்மாவட்டத்தின் லட்டி பகுதியில் இருந்து உதம்பூர் நோக்கி சென்ற அப்பேருந்து மரோத்தி பகுதி அருகே வந்தபோது திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் கவிழ்ந்தது.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற பொலிஸார்15 பேரை சடலமாக மீட்டனர்.

படுகாயமடைந்த 20 பேரை மீட்டு சிகிச்சைக்காக வைத்திய சாலைக்கு அனுப்பிவைத்தனர்.

அதில் 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக உதம்பூர்நகர துணை காவல் ஆணையர் யாஷா முட்கல் கூறியுள்ளார். எனவே அவரகளை ஹெலிகொப்டர் மூலம் ஜம்மு வைத்தியசாலைக்கு கொண்டு




செல்ல உதவி கோர ப்பட்டுள்ளதாகவும் முட்கல் தெரிவி த்துள்ளார்.

மேலும் தொடர்ந்து மீட்பு பணி நடைபெற்று வருவதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (இ-5)

## எதிர்பார்ப்புக்கு மாறான தீர்ப்பு

### தமிழிசை தெரிவிப்பு

சொத்துக் குவிப்பு வழக்கில், அரசியல் கட்சிகளின் எதிர்பார்ப்புக்கு மாறாக தீர்ப்பு வந்துள்ளது என தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கருத்துத் தெரிவித்துள்ளார்.


நேற்றுக் காலை, சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து ஜெயலலிதா உட்பட 4 பேரையும் விடுவித்து கர்நாடக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதனையொட்டி, தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தமிழிசை கூறும்போது, சொத்துக் குவிப்பு வழக்கில், அரசியல் கட்சிகள் எதிர்பார்ப்புக்கு மாறாக தீர்ப்பு வந்துள்ளது.

அடுத்த ஆண்டு தமிழகம் சட்டப் பேரவைத் தேர்தலை எதிர்கொள்ள இருக்கிறது. இந்நிலையில், சொத்துக் குவிப்பு வழக்கில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுக்கு சாதகமாக தீர்ப்பு வந்துள்ளது.

எனவே, வரவிருக்கும் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாக பா.ஜ.கவின் செயற்பாடு புதிதாக திட்டமிடப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஜெயலலிதா விடுதலை சுவாமி கடும் அதிர்ச்சி!



வருமானத்திற்கு அதிகமாகச் சொத்துக்குவித்ததாக தொடரப்பட்ட வழக்கில், ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேரும் விடுதலை செய்யப்பட்டதை அறிந்த சுப்ரமணியன் சுவாமி கடும் அதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த ஆண்டு சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்ட ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கின் முதல் மனுதாரர் சுப்ரமணியன சுவாமி என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது கர்நாடக உயர்நீதிமன்றம் ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேரை விடுதலை செய்துள்ளது மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது என்று சுப்ரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

அதே சமயம் இவ்வழக்கில் கர்நாடக அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும். ஆனால் கர்நாடகா அரசு என்ன முடிவு எடுக்கப் போகிறது என்பது தெரியவில்லை.

எனவே கர்நாடக அரசு என்ன முடிவு எடுக்கப் போகிறது என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

ஒருவேளை கர்நாடக அரசு மேல்முறையீடு செய்யாவிட்டால், நான் மேல்முறையீடு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

குஜராத் கலவர வழக்கில் உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து பாதிக்கப்பட்டவர் தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டதை போன்று, அந்த அடிப்படையில் நான் மேல் முறையீடு செய்வேன் என டில்லியில் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் சுப்ரமணியன் சுவாமி மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## தீர்ப்பை தீர்ப்பாக மட்டுமே பார்க்க வேண்டும்-வாசன்



அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்ட 4 பேரும் விடுதலை செய்து நேற்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பு குறித்து தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் தங்களது கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், தமிழ் மாநில காங்கிரஸ் தலை வர் ஜி.கே. வாசன் தீர்ப்பு குறித்து கூறு கையில், பெங்களூர் உயர் நீதிமன றத்தின் தீர்ப்பை மதிக்கிறோம். தீர்ப்பை தீர்ப்பாக மட்டுமே பார்க்க வேண டுமே தவிர, இதனை அரசியலாக்க கூடாது என்று தெரிவித்துள்ளார். (இ-5)

## பாரதச் செய்தி

# இந்தியாவைவிட மூன்று மடங்கு ராணுவத்துக்கு செலவிடும் சீனா

(வோஷிங்டன்)

கடந்த ஆண்டு, இந்தியாவை விட 3 மடங்கு அதிகமாக சீனா தனது ராணுவத்துக்கு செலவிட்டு இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க பாராளுமன்றத்தில் அமெரிக்க இராணுவ தலைமையகமான 'பென்டகன்' தாக்கல் செய்த ஆண்டறிக்கையில் இத்தகவல் கூறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இந்தியாவின் இராணுவ பட்ஜெட் 2 இலட்சத்து 36 ஆயிரத்து 840 கோடி ரூபாவாக இருந்தது. ஆனால, சீனாவின் இராணுவ பட்ஜெட் 8 இலட்சத்து 45 ஆயிரத்து 60 கோடி ரூபாவாக இருந்தது.

இது, இந்தியாவை விட 3 மடங்கு அதிகமாகும். கடந்த பல ஆண்டுகளாகவே, சீனா தனது இராணுவத்துக்கு ஒதுக்கும் தொகையை அதிகரித்து வருவதாகவும், தற்போது அமெரிக்காவின் நலன்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் இத்தொகை உயர்ந்து விட்டதாகவும் அந்த அறிக்கையில் 'பென்டகன்' கூறியுள்ளது.

மேலும், அதிநவீன ஆயுத தளபாட தொழிற்சாலையை சீனா உருவாக்கி இருப்பதாகவும், சீனாவிடம் இருந்து அதிக அளவில் ஆயுதம் வாங்கும நாடாக பாகிஸ்தான் திகழ்வதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் தத்தளிக்கும் ரோஹிஞ்ச அகதிகள்

**வங்கதேசம் மற்றும் மியன்மாரைச் சேர்ந்த அகதிகள் ஆயிரக்கணக்கானோர், தாய்லாந்து அருகிலான கடல் பரப்பில் கரைசேர முடியாமல் கடந்த சில நாட்களாக தத்தளிக்கிறார்கள் என குடியேறிகள் நலனுக்கான சர்வதேச அமைப்பான ஐ. ஓ. எம். அமைப்பு அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.**



ரோஹிஞ்ச இன குடியேறிகள் சட்ட விரோதமாக வந்திறங்குவதைத் தாய்லாந்து அதிகாரிகள் அண்மைக் காலமாக தடுத்துவருவதால், ஆட்கடத்தும் ஏஜெண்டுகளால் அவர்களைக் கரைசேர்க்க முடியாமல் உள்ளது.இதன் காரணமாக தற்போது எட்டாயிரத்துக்கும் அதிகமான அகதிகள் படகுகளிலேயே தத்தளிக்கின்றனர்.

வட மேற்கு மலேசியாவிலுள்ள லங்காவி என்ற சுற்றுலாத் தீவில் ஆயிரத்துக்கும் அதிகமான குடியேறிகள் திங்களன்று தரையிறங்கியுள்ளதாக அந்நாட்டின் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தோனேசியாவின் அச்சே தீவிலும் கடந்த இரண்டு நாட்களில் ரோஹிஞ்சக்கள் என நம்பப்படும் ஆயிரத்துக்கும் மேலான குடியேறிகள் கரைசேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் வங்கதேசத்திலிருந்தும் மியன்மாரிலிருந்தும் படகில் வெளியேறிய ரோஹிஞ்சக்களின் எண்ணிக்கை, கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில், இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதென அகதிகள் நலனுக்கான ஐநா ஆணையம் தெரிவித்துள்ளது. (இ)

# பிலிப்பைன்ஸ் நாட்டில் புயல் தாக்கி 2 பேர் பலி

## 3 ஆயிரம் பேர் வெளியேற்றம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் நோயுல் என்ற புயல் அச்சுறுத்தி வந்தது. அந்த புயல் நேற்று முன்தினம் கரையை கடந்தது. அப்போது மணிக்கு 220 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசியது.

இதனால் மரங்கள், மின்கம்பங்கள் வேருடன் சாய்ந்தன. வீட்டின் கூரைகள் காற்றில் பறந்தன. பலத்த மழையும் கொட்டியதால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. வெள்ளத்தில் பயிர்கள் மூழ்கி சேதம் அடைந்தன.

அபார்ரி நகரில் ஒரு வீட்டில் மின்சாரம் தாக்கி 70 வயது முதியவரும், அவரது 45 வயது மகனும் பலியாகினர். இசபெல்லா, கஹாயன் பகுதிகளில் கடற்கரையோரம் வசித்த 3 ஆயிரம் பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 4 கடும் புயல்கள் தாக்கியுள்ளன. இதனால் அங்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (இ-5)

# கத்தோலிக்க மதத்திற்கு மீண்டும் கியூபா தலைவர்



வத்திக்கானில் பாப்பரசரை சந்தித்த கியூபாத் தலைவர் ரவுல் காஸ்ட்ரோ தான் கத்தோலிக்க மதத்திற்கு திரும்பக் கூடும் என்று தெரிவித்துள்ளார்.

ரவுல் காஸ்ட்ரோவும் அவரது சகோதரர் பிடல் காஸ்ட்ரோவும் ஞானஸ்தானம் பெற்றுக் கொண்ட கத்தோலிக்கர்கள் என்றாலும் கியூபாவில் அவர்களது கம்மியூனிசிய புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து கத்தோலிக்க திருச்சபைகளின் செயற்பாடுகளை நிறுத்தியிருந்தார்கள்.

சுமார் ஐம்பது நிமிடம் போப் ஆண்டகையை சந்தித்து பேசியிருந்த ரவுல் காஸ்ட்ரோ, கத்தோலிக்க மதத் தலைவரின் ஞானமும் பணிவும் தம்மை வெகுவாக ஈர்த்து விட்டதென்றும் செப்டெம்பரில் அவர் கியூபா வரும்போது நடைபெறவுள்ள ஆராதனையில் தான் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

50 ஆண்டுகளுக்கு மேலாக கசிந்திருந்த அமெரிக்க-கியூப உறவை சீராக்க பாப்பரசர் ஆற்றிய பெரும் பங்கிற்கு ரவுல் காஸ்ட்ரோ நன்றி தெரிவித்தார். (இ-5)

# ஹெலியை சுட்டு வீழ்த்தியது தெஹ்ரிக் -இ- தலிபான்களே

பாகிஸ்தான் ஹெலிகொப்டரை நாங்கள் தான் சுட்டுவீழ்த்தினோம் என தெஹ்ரீக்-இ-தலிபான் (டி.டி.பி.) தெரிவித்துள்ளது.இத்தாக்குதலுக்கு பயன்படுத்திய ஏவுகணையுடன், பயங்கரவாதிகள் நிற்கும் காணொலியும் வெளியிடப்பட்டுள்ளது.

அக்காட்சியின் தொடக்கத்தில், மூன்று கி.மீ. தூரத்தில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணை, ஹெலிகொப்டரின் வால் பகுதியை தாக்கியதால், அது தீப்பிடித்து கீழே விழுந்து நொறுங்கியது.

இறைவன் விரும்பினால், இது போல் மேலும் பல தாக்குதல்களை நிகழ்த்துவோம் என்ற உருது மொழி அறிக்கை காட்டப்படுகிறது.

கடந்த 8 ஆம் திகதி பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில், நல்டார் பள்ளத்தாக்கு வழியே பறந்த,எம்.ஐ-17 ரக, ஹெலிகொப்டர் நடுவானில் தீப்பிடித்து எரிந்து கீழே விழுந்து நொறுங்கியது.

இதில், ஹெலிகொப்டரில் பயணம் செய்த, நோர்வே தூதர் லீப்லார்சன், பிலிப்பைன்ஸ் தூதர் டொமிங்கே மற்றும் மலேசிய, இந்தோனேஷிய தூதர்களின் மனைவியர் உட்பட ஏழு பேர் பலியாகினர்.

பிரதமர் நவாஸ் செரிப்பிற்கு குறிவைத்ததாகவும், அவர் வேறு ஹெலிகொப்டரில் சென்றதால் உயிர் தப்பி விட்டதாகவும், டி.டி.பி., செய்தி தொடர்பாளர் முகமது கோராசனி தெரிவித்துள்ளார்.

ஆனால், இந்த விபத்திற்கு, ஏவுகணை தாக்குதல் காரணமல்ல என்றும், இன்ஜின் கோளாறால், ஹெலிகொப்டர் தீ பிடித்து விழுந்ததாகவும் பாகிஸ்தான் தெரிவித்தது.

இதை மறுத்து, ஹெலிகொப்டரை வீழ்த்திய ஏவுகணை படத்தை, டி.டி.பி., வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)




# கடலில் தத்தளித்த 600 அகதிகள் மீட்பு

பர்மாவில் இருந்து இந்தோனேஷியாவை நோக்கி அகதிகளாகச் சென்ற 600 இற்கும் மேற்பட்ட ரோகிங்க்யா சமூகத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் அசாஹ் கடல் பகுதியில் மீட்கப்பட்டனர்.

இந்தோனேஷியாவின் வடக்கு அசாஹ் மாகாணத்தின் கடற்பகுதியில் இரண்டு படகில் ஏராளமானோர் தத்தளிப்பதாக ஆசெஹ் மீட்புக்கு குழுவினருக்கு தகவல் கிடைத்தது.

அவர்கள் உடனே சம்பவ இடத்திற்குச் சென்று மீனவர்கள் உதவியுடன் கடலில் தத்தளித்தவர்களை மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர்.

அவர்கள் அனைவரும் ரோகிங்க்யா சமூகத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் என்றும், படகில் எரிபொருள் தீர்ந்து விட்டதால் நடுக்கடலில் தவித்துக்கொண்டிருந்ததாகவும் மீட்புக்குழு செய்தி தொடர்பாளர் மொகமது ஆரிப் முத்தாகின் தெரிவித்தார்.

மீட்கப்பட்டவர்கள் 50 பேர் மிகவும் சோர்வாக காணப்பட்டதால் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களில் சிலர் கடந்த 7 நாட்களுக்கு முன் தாய்லாந்தை கடக்கும்போது இறந்து விட்டதாக கூறப்படுகிறது.

இந்த வருட முதல் மூன்று மாதங்களில் 25 ஆயிரம் ரோகிங்க்யா மற்றும் வங்காள தேசத்தினர் கள்ளப்படகு மூலம் இவ்வாறு வந்துள்ளனர். இவ்வாறு வரும்போது 300 இற்கும் மேற்பட்டோர் இதே கால நிலையில் பலியாகியுள்ளனர் என்று ஐ.நா. மீட்புக்குழு தெரிவித்துள்ளது. (இ-5)

# ஆப்கானில் திடீர் மழைவெள்ளத்தால் 500 வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன



(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் பக்லான் என்ற வடக்கு மாகாணத்தில் திடீர் மழை வெள்ளத்துக்கு 500 இற்கும் மேற்பட்ட வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன.

இதில் ஒருவர் பலியாகி, 10 பேர் காயமடைந்ததாக மாவட்ட ஆளுநர் கோஹர் கான் பாப்ரி தெரிவித்தார்.

பக்லான் பகுதியில் நேற்று முன்தினம் மாலை முதல் கனமழை கொட்டியது. இதனால் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர். இதனையடுத்து காலை திடீர் வெள்ளம் ஏற்பட 500 இற்கும் மேற்பட்ட வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன.

மேலும், இலட்சக்கணக்கான வேளாண் நிலங்கள் பாதிக்கப்பட்டதாகவும், நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகள் அடித்துச் செல்லப்பட்டதாகவும் சீனாவின் சினுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுங்கோல் ஆட்சி நெடுங்காலம் நில்லாது.

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாட்டின் துக்க நாளாக மே 18 அறிவிக்கப்பட வேண்டும்

2009ஆம் ஆண்டு மே 18 வன்னிப் பெருநிலப் பரப்பில் போர் முடிந்த நாள். பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்றொழித்த பேரினவாதப் பேய், மனித உடலங்களை உண்டு ஏப்பம் விட்ட நாள். இந்த நாள் தமிழ் மக்களால் என்றுமே மறக்கமுடியாதது.

கொடுவினையின் உச்சமான அனுபவிப்பாக தமிழ் மக்களுக்கு இருந்த இந்த நாள், மகிந்த அரசுக்கு வெற்றி நாளாகியது.

பயங்கரவாதத்தை ஒழித்து இலங்கையில் ஒற்றுமையை நிலைநாட்டுவேன் எனச் சூளுரைத்த மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் இழப்பில், அவர்களின் அவலத்தில் வெற்றிவிழாக் கொண்டாடினார்.

பெற்றோரை இழந்து அம்மா! அம்மா! என்று அழுகின்ற பிள்ளைகளுக்கு ஆறுதல் சொல்ல எவரும் இல்லாதபோது; குடும்பத் தலைவனைப் பறிகொடுத்து விட்டு ஏதும் செய்ய முடியாது தலையில் அடித்துக் கதறும் அந்த அபலைப் பெண்ணுக்கு உதவுவார் யாரும் இல்லை என்ற நிலையில்;

பெற்ற பிள்ளையைப் பறிகொடுத்துவிட்டு நிலத்தில் வீழ்ந்து அழும் பெற்றோர்களின் அவலத்தை பார்ப்பார் இல்லாதபோது, தலைநகரில் விழாக் கோலம் பூண்டு வெற்றி விழாக் கொண்டாடிய மகிந்த ராஜபக்ஷ தனது மன்நிலை என்ன? என்பதை உலகிற்கு வெளிப்படையாகக் காட்டி விட்டார்.

அது மட்டுமல்ல, வன்னி பெருநிலப்பரப்பில் உயிர் இழந்தவர்களுக்கு சமய முறைப்படி சடங்குகளைச் செய்வதற்குக் கூட அனுமதி மறுத்த அநியாயம் எந்த நாட்டில் நடக்கும்?

போரில் இருந்து தப்பியவர்களை முட்கம்பி வேலிக்குள் வருடக் கணக்கில் அடைத்துவிட, என் பிள்ளை எங்கே? எம் தந்தை எங்கே? தாய் எங்கே? என்று ஏங்கி ஏங்கி சித்தம் செயலிழந்த சோகங்கள் ஒருபுறம்.

காணாமல் போனவர்களை முகாம் முகாமாகத் தேடிய அவலங்கள் மறுபுறமாக, எத்துணை துன்பம். இவற்றை எல்லாம் மறந்து தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை தோற்கடித்து விட்டோம் என்ற இறுமாப்பில் வெற்றி விழா நடத்திய ஜனநாயக ஆட்சியின் அழகு எப்படி இருக்கிறது?

வன்னிப்போரில் பலியாகிப் போன அத்தனை பேரும் விடுதலைப் புலிகளா என்ன?

2009 மே 18ஐ இறுதி நாளாகக் கருதி உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூருவதற்குக் கூட மகிந்த அரசு முற்றாகத் தடை செய்திருந்தது. இது மட்டுமன்றி மே 18இல்; உயிரிழந்த தமிழ் உறவுகளை நினைவுகூரும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நினைவுச்சுடர் ஏற்றும் நிகழ்வு நடைபெற்றபோது, அதனைத் தடுப்பதற்குப் படைத்தரப்பு மேற்கொண்ட முயற்சிகள் யாவரும் அறிந்ததே. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் முழுவதிலும் படையினர் குவிக்கப்பட்டு ஒரு போர்க்காலச் சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டது.

போரின் போது உயிரிழந்த உறவுகளை நினைவு கூருவதற்குக் கூட அனுமதி மறுத்த அநியாயங்களை, தமிழ் மக்கள் ஒருபோதும் மறந்து விட மாட்டார்கள்.

இதேவேளை மைத்திரிபால சிறிசேனவின் அரசு மே 18ஐ வெற்றி விழாவாகக் கொண்டாடாமல் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து அனுஷ்டிப்பது என அறிவித்துள்ளமை ஆறுதல் தருவதாகும்.

எதுவாயினும் மே 18 இந்த நாட்டின் துக்க நாள். இந்த நாளில் பொது விடுமுறை வழங்கி நாட்டின் அனைத்து மக்களும் வன்னிப் போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இது ஒரு ஜனநாயக அரசின் மனிதாபிமான செயற்பாடாகும்.

## குருபூசையும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தினால் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும் திருமுறை மனனப் போட்டி -2015 பரிசளிப்பு விழாவும் இன்று 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.15 மணியளவில் ஆலய மண்டபத்தில் சைவ சமய அபிவிருத்திக் கழகத் தலைவர் இரா. செல்வவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.சித்த ஆயுர்வேத ஓய்வுநிலை டாக்டர் திருமதி நித்தியானந்தா தேவி கலந்து கொள்ளவுள்ளார். (இ-7)

## அப்பரின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்.அளவெட்டி தெற்கு றோமன் கத்தோலிக் தமிழ்க் கலவன் பாடசாலையில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இன்று 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணியளவில் இந்து மன்றத்தின் தலைவர் ஆசிரியர் திருமதி த.கற்பகராணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய ஆசிரியர் தி.சாந்த குமார் வளவாளராகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளார். (இ-7)

++++++++++++++++

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருநாவுக்கரசு சுவாமிகளின் குருபூசை விழா-2015 இன்று 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கைதடி அரச முதியோர் இல்லத்தில் இந்து சமய அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் சமூகவியல்துறை தலைவரும் துணைவேந்தருமான என். சண்முகலிங்கன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3-7)

++++++++++++++++

(யாழ்ப்பாணம்)

பிரசித்தி பெற்ற நல்லூர் ஸ்ரீசட்டநாதர் தேவஸ்தானத்தில் இன்று 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் ஆலயப் பூசையைத் தொடர்ந்து திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் இக் குருபூசை நடைபெறவுள்ளது என மன்ற அமைப்பாளர் ச.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (இ-7)

## 60ஆயிரம் அபராதம்

(கரணவாய்)

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய குற்றச்சாட்டில் தொடரப்பட்ட வழக்கில் 9 பேருக்கும் 60 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே பருத்தித்துறை நீதிபதி மேற்படி தீர்ப்பை வழங்கியுள்ளார்.

இதேவேளை உரிய அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிய நபர் ஒருவருக்கு 30ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (இ-3-60)

## தெய்வீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை காக்கையம்பதி ஸ்ரீகாளிகாதேவி ஆலய அலங்கார உற்சவம் இன்று முதல் தொடர்ந்து பத்து தினங்கள் தேவி பாகவதம் எனும் விடயம் பற்றி சொல்லின்செல்வன் இரா. செல்வவடிவேல் இரவு 7 மணிக்கு தெய்வீகப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (இ-...)

### பெண்பிள்ளைகளுக்கு

## பாலியல் தொல்லை கொடுக்கும் இளைஞர்களை கைதுசெய்யவும்

### நீதிபதி கணேசராஜா உத்தரவு

நெல்லியடிப் பகுதியில்பெண்பிள்ளைகளுக்குப் பாலியல் ரீதியாகத் தொல்லை கொடுத்துவரும் இளைஞர்களை கைது செய்யுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி எம்.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

துன்னாலை மற்றும் கரவெட்டிப் பகுதிகளில் இருந்து செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைவாகவே நீதிபதி மேற்படி உத்தரவை நேற்றுப் பிறப்பித்துள்ளார்.

நெல்லியடி தாமரைக்குளம் கலிகைச் சந்திப்பகுதியில் ஒன்றுகூடும் வெளியிடத்தைச் சேர்ந்த இளைஞர்களால் பெண்பிள்ளைகள் பாலியல் ரீதியாக கடும் தொல்லைகளுக்கு உள்ளாகின்றனர்.

இதனால் 14-22 வயதுக்குட்பட்ட இளைஞர்களை கைது செய்யுமாறும் பெண்பிள்ளைகளைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறும் நெல்லியடிப் பொலிஸாருக்கும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கும் நீதிபதி மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை பாடசாலைகளுக்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கும் சென்றுவரும் பெண் பிள்ளைகள் மீது இளைஞர்கள் பாலியல் ரீதியாக தொல்லைகள் கொடுத்து வருவதாகவும் அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஏற்கெனவே கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடமாகாணத்தில் உள்ள சில பிரதேசங்களில் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதன்படி இன்று யாழ்.பிரதேசத்தில் காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், காங்கேசன்துறை இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம், சங்கானை, சங்கானை வைத்தியசாலை, தொட்டியாலடி, பண்டத்தரிப்பு ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்,

கிளிநொச்சி பிரதேசத்தில் தேராவில், புதுக்குடியிருப்பு, உடையார் கட்டு, கைவேலி, தேவிபுரம், இரணைப் பாலை, கோம்பாவில், சுதந்திரபுரம், வள்ளிபுனம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மாமடுவிலிருந்து மகா கொச்சக்கொடியவரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும்,

மன்னார் பிரதேசத்தில் தம்பாட்ட முசலி, கொக்குப்படையான், கொண்டச்சி நீர்ப்பாசனத் திணைக்களம், மறிச்சுக்கட்டி, கரடிக்குளி, பாலைக்குளி, முள்ளிக்குளம், கடற்படை முகாம், சிலாவத்துறை, அரிப்பு, அரிப்பு நீர்ப்பாசனத் திணைக்களம், தோமஸ்புரி, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய இடங்களிலும் நாளை புதன் கிழமை யாழ். பிரதேசத்தில் மாதகல், மாதகல் ஜெற்றி, ஜம்பு கோளப்பட்டினம், கட்டுப்புலம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் திருக்கேதீஸ்வரம், எள்ளுப்பிட்டி ஆகிய இடங்களிலும்

நாளை மறுதினம் வியாழக்கிழமை யாழ். பிரதேசத்தில் நகுலேஸ்வரம், மாவை கலட்டி, கொல்லன்கலட்டி, மாவிட்டபுரம், கீரிமலை, கீரிமலை துணைக் கடற்படை முகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், காங்கேசன்துறை இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை, வயாவிளான், டொலர் கூட்டுத்தாபனம், கரிசன் 5 ஆவது பொறியியல் படை முகாம் பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படை முகாம், பலாலி இலங்கை விமானப் படை முகாம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படை முகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வுகால விடுதி ஆகிய இடங்களிலும்,

வவுனியா பிரதேசத்தில் பட்டானிச்சூர் பிரதேசம், பட்டக்காடு பிரதேசம், வேப்பங்குளம் பிரதேசம், மாமடுவில் இருந்து மகாகச்சக்கொடியவரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, நெளுக்குளம், பம்பைமடு, CEC கல்லுடைக்கும் ஆலை, ஒமேகா லைன், தொழில்நுட்பக்கல்லூரி, வவுனியா பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழக விடுதி ஆகிய இடங்களிலும்,

எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.பிரதேசத்தில் அல்லாரை, வெள்ளாம்போக்கட்டி, கச்சாய், கெற்பேலி ஒரு பகுதி, கச்சாய் கடற்கரை, பாலாவி, உசன், விடத்தற்பளை, கெற்பேலி, கிளாலி, மாதகல், மாதகல் ஜெற்றி, ஜம்புகோளப்பட்டினம், கட்டுப்புலம் ஆகிய இடங்களிலும்,

வவுனியா பிரதேசத்தில் மாமடுவிலிருந்து மகா கொச்சக்கொடியவரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் தம்பட்டாமுசலி, கொக்குப்படையான், கொண்டச்சி நீர்ப்பாசனத் திணைக்களம், மறிச்சுக்கட்டி, கரடிக்குளி, பாலைக்குளி, முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை, அரிப்பு, அரிப்பு நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



தற்போதைய கல்வியில் சில நன்மைகள் உள்ளன. ஆனால் மிக அதிகமான தீமைகள் இருக்கின்றன. மிக அதிகமான அந்தத் தீமைகள் கொஞ்சமான நன்மையைக் கீழேஅமுக்குகின்றன. முதலாவதாக அது மனிதனை உருவாக்குகின்ற கல்வி அல்ல.

நாட்டில் ஒவ்வொரு முன்னேற்றமும் மத எழுச்சியைத் தொடர்ந்தே வரமுடியும். சமுதாயக் கருத்துக்களாலோ, அரசியல் கருத்துக்களாலோ மூழ்கடிக்குமுன் நாட்டைஆன்மீகக் கருத்துக்களால் நிரப்புங்கள்.

தியாகம்!அதுவே கொடி, நாட்டின் அடையாளக்கொடி, உலகின்மீது பறக்கும் கொடி, மடிந்து கொண்டிருக்கும் மனித குலத்திற்கு ஓர் எச்சரிக்கையாக எல்லாக் கொடுங்கோன்மைக்கும் ஓர் எச்சரிக்கையாக, உலகின் தீமைகளுக்குஓர் எச்சரிக்கையாக மீண்டும் மீண்டும் அனுப்பிவருகின்ற அழியாத கருத்து இது. ஓ இந்துக்களே, அந்தக் கொடியின்மீது உங்களுக்குள்ள பிடியை விடாதீர்கள், அதை உயர்த்திப் பிடியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களிமண் தரை ஜாம்பவான் நடாலை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார் ஆண்டி முர்ரே

மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டி ஸ்பெய்னில் உள்ள மாட்ரிட் நகரில் நடைபெற்று வருகிறது. நேற்று முன் தினம் இரவு ஆண்கள் ஒற்றையருக்கு இறுதிப்போட்டி நடைபெற்றது. இதில் களிமண் தரையில் ஜாம்பவானாக திகழும் நடால், பிரிட்டனின் ஆண்டி முர்ரேவுடன் மோதினார்.

இதில் யாரும் எதிர்பார்க்காத வகையில் முர்ரே 6-3, 6-2 என எளிதில் நடாலை வீழத்தி சம்பியன் பட்டம் வென்றார். 7 முறை களிமண் தரையில் நடாலுடன் மோதியுள்ள முர்ரேவுக்கு முதல் வெற்றி இதுவாகும். மேலும், 27 வயதாகும் முர்ரே களிமண் தரையில் சம்பியன் பட்டத்தை வெல்வதும் இதுவே முதல் முறையாகும்.

4 முறை மாட்ரிட் ஓபன் பட்டத்தை வென்ற நடால், ஐந்தாவது முறையாக கைப்பற்றி சாதனைப் படைக்க துடித்த அவரது எண்ணம் வீணானது. கடந்த சில மாதங்களாக நடாலின் ஆட்டத்தில் வேகம் குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது. (க)



## பறந்து பிடித்து பிராவோ: வியப்பில் உறைந்த ரசிகர்கள்




ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் அணிக்கு எதிரான நேற்று முன்தின ஆட்டத்தில் சென்னையின் சகல துறை வீரர் பிராவோ களத்தடுப்பில் அசத்தினார்.

நேற்று முன்தினம் நடந்த ஐ.பி.எல். ஆட்டத்தில் சென்னை- ராஜஸ்தான் அணிகள் மோதின. இந்த ஆட்டம் சென்னை சேப்பாக்கத்தில் நடந்தது.

இந்தப் போட்டியில் ஒரு பக்கம் ஜடேஜா சுழலில் அசத்த, மறுபக்கம் பிராவோ சீறி வந்த பந்துகளை பறந்து பறந்து பிடித்து ரசிகர்களை குஷியில் ஆழ்த்தினார்.

10 ஆவது ஓவரில் ஜடேஜா வீசிய பந்தை ராஜஸ்தான் வீரர் வாட்சன் தூக்கி அடிக்க அது எல்லைக் கோடு அருகே சென்றது.

இதை அந்தரத்தில் பறந்து ஒரே கையால் கட்ச் செய்த பிராவோ, வழக்கமான 'ஸ்டைலில்' ஆடினார். பின் பால்க்னர் அடித்த பந்தையும் அருமையாக பறந்து பிடித்தார்.

பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் அணித்தலைவர் விராட் கோஹ்லியை ஒட்ட முறையில் வீழ்த்தி சென்னையின் வெற்றிக்கு உதவிய பிராவோ, ஆட்டத்திலும் அசத்தினார்.

இந்தப் போட்டியில் சென்னை அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தானை வீழ்த்தி புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்தது. (க)

## இலங்கை அணிக்கு களத்தடுப்பு பயிற்சி அளிக்கும் ஜொன்டி ரோட்ஸ்

தெனனாப்பிரிக்க அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் ஜொனடி ரோட்சிடம் பயிற்சி பெற இலங்கை அணி எதிர்பார்த்துள்ளது.

இவர் தற்போது மும்பை இந்தியன்ஸ் அணிக்கு களத்தடுப்பு பயிற்சியாளராக இருக்கிறார்.

இந்நிலையில் எதிர்வரும் யூனில் இலங்கை வரும் பாகிஸ்தானுக்கு எதிரான தொடருக்கு முன்னர் 10 தினங்களுக்கு ரோட்சின் சேவையை பெற இலங்கை கிரிக்கெட் திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் கோரிக்கையை ஜொன்டி ரோட்ஸ் ஏற்றுள்ளதாக தெரிய வருகிறது.

இது குறித்து நாம் பேச்சுவார்த்தை நடத்தி இறுதி முடிவை எடுக்க எதிர்பார்த்திருக்கிறோம் என்று இலங்கை கிரிக்கெட் இடைக்கால சபை வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இது குறித்த திட்டம் மற்றும் எவ்வாறு பயிற்சி வழங்குவது என்பது பற்றி நாம் அவரிடம் கோரிக்கை விடுத்தோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் களத்தடுப்பின் புதிய தொழில்நுட்பங்கள் பற்றி ரோடஸ், இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)



## தந்தையானார் ஸ்ரீசாந்த்



32 வயதான ஸ்ரீசாந்த் கடந்த 2013 ஆம் ஆண்டு ராஜஸ்தான் அரச குடும்பத்தைச் சேர்ந்த புவனேஸ்வரி என்பவரை திருமணம் செய்தார். அவருக்கு தற்போது பெண் குழந்தை பிறந்துள்ளது.

ஐ.பி.எல். சூதாட்ட சர்ச்சையில் சிக்கி ஆயுள் தடை விதிக்கப்பட்ட வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் அழகான பெண் குழந்தைக்கு தந்தையாகியுள்ளார்.

இந்த தகவலை டுவிட்டர் வலைத்தளத்தில் கூறியுள்ள ஸ்ரீசாந்த் தற்போது தாயும் சேயும் நலமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (க)

## ஜே.பி.எல். இருபது-20 டிறிபேக் தாரகை வெற்றி

JPL இருபது- 20 போட்டிகளுக்கான தெரிவுப் போட்டி நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் சாவகச்சேரி டிறிபேக் தாரகை மற்றும் சுழிபுரம் விர்றோரியன்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டியில் டிறிபேக் தாரகை 38 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய டிறிபேக் தாரகை 22 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய வேளை தர்ஷன் , லச்ஷன் நிதானமான துடுப்பாட்டமும் புஷாந்தன், கோபி ஆகியோரின் அதிரடி ஆட்டமும் கைகொடுக்க 20 ஓவர் முடிவில் 150 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் புஷாந்தன் 43 ஓட்டங்களையும் கோபி 27 ஓட்டங்களையும் லச்ஷன் 23, தர்ஷன் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தார்கள். பந்து வீச்சில் பிரதீஷன், பிரணவன் ஆகியோர் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலளித்து ஆடிய சுழிபுரம் விர்றோரியன்ஸ் அணி மார்க்சிங்கின் சுழல் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 112 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்து வீச்சில் மார்க்சிங் 5 விக்கெட்டுக்களையும் பிரவீன், நிலன் ஆகியோர் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (க-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டேவிட் வோர்னர், மில்லர் அதிரடி பஞ்சாப்பை வென்றது ஐதராபாத்

பரபரப்பான இறுதி ஓவரில் பஞ்சாப்புக்கு எதிரான போட்டியில் ஐதராபாத் அணி 5 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் நேற்றைய லீக் போட்டியில் ஐதராபாத்-பஞ்சாப் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சி வென்ற ஐதராபாத் அணி கப்டன் வோர்னர் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

அதன்படி வோர்னர், தவான் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். தொடக்கம் முதல் இருவரும் அதிரடியாக விளையாடினார்கள். அணியின் ஓட்ட எண்ணிக்கை 6.1 ஓவரில் 56 ஓட்டங்களாக இருக்கும்போது தவான் அவுட் ஆனார். அவர் 18 பந்தில் 4 பவுண்டரியுடன் 24 ஓட்டங்கள் எடுத்தார்.




அடுத்து 2-வது விக்கெட்டுக்கு வோர்னர் உடன் ஹென்றிக்ஸ் ஜோடி சேர்ந்தார். இவர் 28 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். 3-வது விக்கெட்டுக்கு மோர்கன் களம் இறங்கினார். மறுமுனையில் விளையாடிய வோர்னர் அரை சதம் அடித்தார். மோர்கன் அதிரடியாக விளையாடி 7 பந்தில் 17 ஓட்ட ங்கள் எடுத்த நிலையில் அவுட் ஆனார். வோர்னர் 81 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். அப்போது ஐதராபாத் அணி 17.1 ஓவரில் 157 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

அதன்பின் வந்த லோகேஷ் ராகுல், கர்ண் சர்மா விரைவாக ரன் எடுக்க ஐதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் 185 ஓட்டங்கள் எடுத்தது

பின்னர் 186 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களை எடுத்து தோல்வியுற்றது.




துடுப்பாட்டத்தலில் அதிரடியாக மிரட்டிய மில்லர் 89 ஓட்டங்கள் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காது இருந்தார்,

போட்டியின்ஆட்டநாயகனாக ஐதராபாத் அணியின் தலைவர் வோர்னர் தெரிவானார். (க)




## சர்வதேச தரவரிசையில் ரொப் 5 இழந்த நடால்

டென்னிஸ் விளையாட்டின் முன்னணி வீரரான ரபேல் நடால் கடந்த 10 ஆண்டுகளில் முதல் முறையாக சர்வதேச தரவரிசையில் ரொப்-5 நிலையை இழந்துள்ளார்.



ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 28-வயதான-ரபேல் நடால் இதுவரை ஒற்றையர் பிரிவில் 14 கிராண்ட்சிலாம் பதக்கத்தை வென்றுள்ளார். சிறப்பாக விளையாடி வந்த நடால் கடந்த சில மாதங்களாக திணறி வருகிறார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மாட்ரிட் ஓபன் இறுதிப் போட்டியில் அண்டி முர்ரேயிடம் நடால் தோல்வியடைந்தார். முர்ரே இதற்கு முன் களிமண் ஆடுகளத்தில் நடாலை வென்றது கிடையாது. இந்த வருடத்தில் மட்டும் களிமண் ஆடுகளத்தில் நடால் 4 முறை தோல்வியடைந்துள்ளார். பிரெஞ்ச் கிராண்ட்சிலாம் போட்டி தொடங்க சில நாட்களே இருக்கும் நிலையில் இந்த சறுக்கல் அவரை கவலையடையச் செய்துள்ளது.

டென்னிஸ் தரவரிசையில் கடந்த 10 வருடங்களாக ரொப்-5 இடத்திற்குள் வந்து கொடிகட்டி பறந்த அவர் தற்போது 7-வது இடத்திற்கு பின்தங்கியுள்ளார். (க)

## மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டி

## போபண்ணா ஜோடி சாம்பியன்

ஸ்பெயினில் உள்ள மாட்ரிட் நகரில் மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டி நடைபெற்றது. இதன் ஆண்கள் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்திய வீரர் போபண்ணா, ரோமானியாவைச் சேர்ந்த மெர்கியா என்பவருடன் இணைந்து சொர்பியா- போலந்து நாட்டின் ஜோடியான நெனாட் சிமோன்ஜிக்- மார்ட்டின் மட்கோவ்ஸ்கி ஜோடி எதிர்கொண்டது.



இதில் முதல் செட்டை 6-2 என்ற கணக்கில் போபண்ணா ஜோடி எளிதில் கைப்பற்றியது. ஆனால், 2-வது செட்டை 6-7 என இழந்தது. எனவே, சம்பியன் பட்டத்தை வெல்வதற்கான கடைசி செட்டை கைப்பற்ற இரண்டு ஜோடிகளும் கடுமையான போராடின. இதனால் 3-வது செட் ரைபிரேக்கர் வரை சென்றது.

இறுதியில் போபண்ணா-மெர்கியா ஜோடி 11-9 என கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றது. இந்த ஆண்டில் போபண்ணா வெல்லும் மூன்றாவது பட்டம் இதுவாகும். (க)

## 16 கோடியில்...

16 கோடியே இருபது லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

ராடா என்னும் நிறுவனத்தின் ஊடாகவே இத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. எனினும் இந்த திட்டத்தின் கீழ் ஒரு வீடு கூட அமைக்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ராடா நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணம் இரண்டு ஆடைக் கைத்தொழிற்சாலைகளின் கணக்குகளில் வைப்பில் இடப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன்தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஏற்கெனவே 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நிறுவனம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸிடம் மீள் விசாரணை நடத்தப்பட உள்ளது.

இந்த நிதி மோசடி குறித்து முன்னாள்ஜனாதிபதியின்செயலாளர் லலித் வீரதுங்கவிடம் எதிர்வரும் 13-ம் திகதி பொலிஸார் விசாரணை நடத்த உள்ளனர்.

ஏற்கெனவே திவிநெகும திட்டத்தின் கீழ் பல கோடி ரூபாய் காணாமல் போயுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## சஷீக்கு வைத்...

வைத்தியர் ஆனந்த சமரகோன் அறிவுரை வழங்கியுள்ளதாக தெரியவருகின்றது.

அவ்வாறு அறிவுரை வழங்கிய வைத்தியர் ஆனந்த சமரகோன் இல்லாத ஒரு நோயினை இருப்பது போல் போலியான வைத்திய சான்றிதழ் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றத்தை ஏமாற்றுதல் மற்றும்சட்டகொள்கைக்கு இடையூறு விளைவித்தல் உள்ளிட்ட காரணங்களின் அடிப்படையில் வைத்தியர் ஆனந்த சமரகோனுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ள குற்றப்புலனாய்வுத் துறையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## நம்பிக்கையில்லா...

நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டு வந்தாலும் அதை நாம் தோற்கடிப்போம். மகிந்த ஆதரவு கூட்டணியின் இந்த செயற்பாடுகள் தேசிய அரசாங்கத்திற்கு எதிரானது மட்டுமல்ல, ஜனநாயகத்திற்கும் எதிரான ஒன்றாகும். அதேபோல் இந்த செயற்பாடுகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகிறது.

எனவே இதை நாம் கவனத்தில் கொள்ள மாட்டோம். மேலும் அரசாங்கத்திற்கு எதிராக இவர்கள் செயற்பட்டாலும் எமது அரசாங்கத்தை நாம் பலப்படுத்தி விட்டோம்.

அடுத்த அரசாங்கமும் எமது அரசாங்கமாக அமைவதற்கான வேலைத்திட்டங்களையும் நாம் முன்னெடுத்துள்ளோம். மக்கள் மத்தியில் நாம் பலமடைந்துள்ளோம். எனவே அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் எமது வெற்றி சாத்தியம் எனவும் அவர் தெரிவித்தார். (எ-11)

## ஞானசார...

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் நீதிமன்றுக்கு சமுகமளிக்காமையாலேயே அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது வெளிநாடு சென்றுள்ள ஞானசார தேரர் நாடு திரும்பியதும் அவரை விமான நிலையத்தில் வைத்து கைது செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு முன்பாக நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஞானசார தேரர் உள்ளிட்ட 27 பேருக்கு கடந்த 8-ம் திகதி நதிமன்றத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

அதன்படி ஞானசாரரைத் தவிர மற்றவர்கள் நீதிமன்றில் ஆஜராகி பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நீதிமன்றில் ஆஜராகாத ஞானசார தேரரை கைது செய்யுமாறு நீதிபதியினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## 17ஆம் திகதி...

இதேவேளை ஜெயலலிதாவை போயஸ் தோட்டத்தில் நேற்று முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சந்தித்து பேசியுள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - கொழும்பு முன்னணி நிறுவனங்கள்
மற்றும் வர்த்தக மையங்களில்
உடனடி வேலைவாய்ப்புக்கள்
1000 ற்கும்
மேற்பட்ட வெற்றிடங்கள்
சுயவிபரக்கோவையுடன் மே 15 க்கு
முன் நேரில் வரவும்
சிகரம் தொழில் வங்கி
SIKARAM
Get Set for Careers & Take off Your Dreams
Sikaram (Pvt) Ltd.
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 077 36 16 798
(C-951)

## ஜெயா விடுதலை...

இதே வழக்கில் வழங்கப்பட்டிருந்த தண்டனை ரத்து செய்யப்பட்டுள்ளது போல, அவருக்கு விதிக்கப்பட்டிருந்த அபராத தொகையும் ரத்து செய்யப்பட்டுள்ளது. இருந்த போதும் இதே வழக்கில் மேல்முறையீடு செய்யவும் அனுமதி வழங்கி நேற்றைய உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அ.இ.அ.தி.மு.கவின் தொண்டர்கள் இந்த தீர்ப்பை வரவேற்று பல்வேறு பகுதிகளிலும் உற்சாகமாக கொண்டாடிவருகிறார்கள்.

சொத்துக்குவிப்பு வழக்கில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உட்பட 4 பேரையும் விடுதலை செய்து கர்நாடக உயர் நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பளித்துள்ளது.

தமிழக முதலமைச்சராக இருந்த போது ஜெயலலிதா, வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக, கடந்த 1996ஆம் ஆண்டில், சுப்ரமணியன் சுவாமி கொடுத்த புகாரின் பேரில், தமிழக லஞ்ச ஒழிபபுத்துறை பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இந்த வழக்கில் கடந்த ஆண்டு செப்டெம்பர் 27ஆம் திகதி, ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு பேருக்கு, நான்கு ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கி பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் ஒக்டோபர் 17ஆம் திகதி ஜெயலலிதா உட்பட நால்வருக்கும் பிணை வழங்கியது.

பின்னர் உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் அடிப்படையில், கடந்த ஜனவரி 5ஆம் திகதி ஜெயலலிதா மேல்முறையீட்டு மனு மீது கர நாடக உயர் நீதிமன்றத்தின் சிறப்பு அமர்வு முன்பாக விசாரணை தொடங்கியது.

கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி குற்றஞ்சாட்டப்பட்ட நால்வர் தரப்பு வாதமும் நிறைவடைந்தது. 45 நாட்களில் விசாரணையை முடித்த நீதிபதி சி.ஆர்.குமாரசாமி, கடந்த மார்ச் திகதி குறிப்பிடாமல் தீர்ப்பை ஒத்தி வைத்தார்.

உச்ச நீதிமன்ற உத்தரவின்படி 3 மாதங்களுக்குள் மேல் முறையீட்டு விசாரணையை முடித்த நீதிபதி, மார்ச் 12ஆம் திகதி முதல் தீர்ப்பு எழுதும் பணியை தொடங்கினார்.

இந்நிலையில் தி.மு.க தரப்பின் மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம்,பவானி சிங்கின் நியமனம் சட்டப்படி செல்லாது.

எனவே மேல்முறையீட்டு வழக்கில் தீர்ப்பு எழுதும்போது பவானி சிங் முன்வைத்த வாதத்தை கருத்தில் கொள்ளக்கூடாது. மாறாக திமுக தரப்பும், கர்நாடக அரசு தரப்பும் தாக்கல் செய்யும் எழுத்துப்பூர்வ வாதத்தை கருத்தில் கொள்ள வேண்டும் என ஏப்ரல் 27ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தது.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவைத் தொடர்ந்து நீதிபதி குமாரசாமி ஏப்ரல் 29ஆம் திகதி முதல் மேல் முறையீட்டில் மீண்டும் தீர்ப்பை திருத்தி எழுதும் பணியைத் தொடங்கினார்.

இந்த நிலையில், தீர்ப்பு எழுதும் பணிகள் முடிவடைந்த நிலையில் மே 11ஆம் திகதி காலை 11.00 மணிக்கு தீர்ப்பு அளிக்கப்படும் என்று கர்நாடக உயர் நீதிமன்ற பதிவாளர் பாட்டீல் அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து கர்நாடக உயர் நீதிமன்ற வளாகத்தை சுற்றி ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அ.தி.மு.கவினர் தொடர்ந்து குவிந்ததால் நீதிமன்ற வளாகத்தை சுற்றி ஏராளமான காவலர்கள் குவிக கப்பட்டனர்.

இதனிடையே, தீர்ப்பு வழங்குவதற்காக நீதிபதி குமாரசாமி நேற்றுக் காலை 10.00 மணிக்கு கர்நாடக உயர் நீதிமன்றம் வந்தடைந்தார். அ.தி.மு.க தரப்பில் வழக்கறிஞர்கள் குமார், செந்தில், திமுக பொதுச் செயலாளர் அன்பழகன் தரப்பில் வழக்கறிஞர்கள் சரவணன், தாமரைச் செல்வன் மற்றும் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் தரப்பு வழக்கறிஞர்களும் வந்தனர்.

இதனிடையே, தமிழக லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி சம்பந்தனும் கர்நாடக உயர் நீதிமன்றத்துக்கு வந்தார். (எ-11)

## வாகன சில்லு ஏறி...

சடுதியாக நிறுத்த முயன்றுள்ளார்.

அந் நேரம் பிரஸ்தாபஇளைஞர் நிலை தடுமாறி வாகனத்திலிருந்து கீழே விழுந்த பொழுது வாகனச்சில்லு தலையின் மீது ஏறியுள்ளது.

சிறிது நேரத்திலேயே இளைஞனின் உயிர் பிரிந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக வாகன சாரதி கைது செய்யப்பட்டதுடன் வாகனமும் பொலிஸாரினால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

சம்பவத்தில் உயிரிழந்த இளைஞனின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-3,273)

## இளம் குடும்பப் பெண்...

நிலை காணப்படுகிறது.

கொலையுண்ட குறித்த பெண் வட்டுக்கோட்டை தெற்கு இன்பச்சோலையை சேர்ந்த இளம் குடும்பஸ்தரான பாலசுப்ரமணியம் யோகேஸ்வரி (வயது 34) என இனங்காணப்பட்டுள்ளார். இவர் கொலை செய்யப்பட்டமைக்கான காரணம் மர்மமான முறையில் உள்ளதாக வட்டுக்கோட்டை பொலிசார் தெரிவித்தனர்.

கொலையுண்ட பிரஸ்தாப பெண் வட்டுக்கோட்டை இன்பச்சோலையில் அமைந்துள்ள தனது வீட்டில் நேற்று முன்தினம் இரவு எட்டு மணிவரை இருந்துள்ளார். இந்த நேரத்தில் வீட்டில் சண்டை இடம் பெற்றது போன்று கேட்டதாகவும் பின்னர் சத்தம் குறைந்து அமைதியாகி விட்டதாகவும் அயலவர்கள் தெரிவிக்கின்றனர். குறித்த சண்டையின் போது வெளியாட்கள் சிலரும் அங்கு நின்றதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனினும் அயலவர்கள் எவரும் சண்டை நடந்த வீட்டிற்கு செல்லாத காரணத்தினால் வீட்டில் எதற்காக சண்டை நடந்தது என்பது குறித்து அயலவர்கள் எவருக்கும் தெரியவும் இல்லை. கொலையுண்ட பிரஸ்தாப பெண் தனது வீட்டில் தனது சகோதரியுடன் வசித்து வந்துள்ளார். பெண்ணின் கணவன் கடந்த 2012 ஆம் ஆண்டில் விபத்து சம்பவம் ஒன்றில் இறந்துள்ளார். இதனையடுத்து வேறொரு இளைஞனை காதலித்து வந்த நிலையிலேயே குறித்த பெண் கொலை செயயப்பட்டுள்ளார்.

மணம் முடிக்கவிருந்த இளைஞன் அதையிடத்தைச் சேர்ந்த குறித்த பெண்ணை விட பத்து வயதுக்கும் குறைந்தவரான நிலையில் கடந்த சில நாட்களின் முன் இருவரும் காணாமற்போயிருந்ததாகவும் உறவினர்களால் நேற்று முன்தினம் தேடிப்பிடிக்கப்பட்டு இருவரையும் பிரித்து எச்சரிக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது.

இந்நிலையிலேயே இக்கொலைச் சம்பவம் நடைபெற்றுள்ளது. கொலை நடந்த இடம் மேற்படி பெண்ணின் வீட்டிலிருந்து ஒரு கிலோ மீட்டருக்கும் உட்பட்ட ஆள் நடமாட்டம் குறைந்த காட்டுப் பிரதேசமாகும். அவரது கைப்பையில் நீண்ட தூரப பயணத்திற்கான உடைகள்மணக்கூடு, அழகு சாதனப் பொருட்கள், கைக் கொழுவிப்பை, கையடக கப்பை, தேசிய அடையாள அட்டை என்பனவும் சடலத்தின் அருகில் சிதறுண்டு காணப் பட்டிருந்தன.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப்பொலிஸாரும் தடயவியல் பரிசோதனைகளையாழ்ப்பாணம் குற்றவியல் பொலிஸாரும்மேற்கொண்டிருந்தனர்.

குறித்தபெண கொலை செய்யப்பட்டமைக்கான உறுதியான காரணம், கொலையாளியார் என்பது குறித்து நேற்று இரவு வரை கைது செய்யப் படவில்லை. (எ-4)

British College of Higher Studies
வழங்கும் மாபெரும் கட்டணக் கழிவு
50 % Discount
Spoken English with Grammar
6500/= Duration : 80 Hrs 3250/=
Diploma in English
9000/= Duration : 110 Hrs 4500/=
வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழவாகவரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
English For Higher Education
10'000/= Duration : 90 Hrs 5000/=
பல்கலைக்கழக மாணவர்கள், A/L, O/L பரீட்சை எழுதிய மாணவர்கள், மற்றும் உயர் கற்கைநெறிகளைக் கற்கும் மாணவர்கள் போன்றவர்களின் நலன் கருதி இக் கற்கை நெறியானது ஆரம்பமாகவுள்ளது.
Batches Start on
Batch I : 15/05/2015 08.30am to 12.30pm Batch III : 20/05/2015
Batch II : 16/05/2015 01.00pm to 05.00pm Batch IV: 23/05/2015
BCHS
British College of Higher Studies
No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422,0714299935
(C-950)

## 20 தொடர்பில்...

படுகிறது.

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

20-வது திருத்தச் சட்டம் தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் பொருட்டே இந்த பேச்சு வார்த்தை இடம்பெற்றது.

இதனிடையே, நேற்றைய தினம ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறு கட்சிகள் மற்றும் சிறுபான்மை கட்சிகளின் தலைவர்களை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார்.

கடந்த சனிக்கிழமை ஜே.வி.பியுடனும் ஜனாதிபதி தேர்தல் முறை சீர்திருத்தம் தொடர்பில் பேச்சு வார்த்தை நடத்தியிருந்தார்.

இதன்போது, எதிர்வரும் பொதுத தேர்தல் பழைய முறையிலேயே இடம்பெறும் என்று ஜனாதிபதி தமக்கு உறுதியளித்ததாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## விடுதலைப் புலிகளின் ஆதர...

தெரிவித்துள்ளனர்.

பிரித்தானிய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் இலங்கைக்கு நல்ல செய்தியாக அமைந்துள்ளது என்று இலங்கைக்கான கொன்சர்வேட்டிவ் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த அமால் அபேகுணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இத்தேர்தலில் இலங்கையின் நண்பர்களான ஜேம்ஸ் வார்ட்டன், அன்ட்ரூ ரொசின்டெல், மத்யூ ஒபோட் மற்றும் பொப் பிளாக்மன் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

இத்தேர்தலில் வெற்றிபெற்றுள்ள லியாம் பொக்ஸ்சும் கூட இலங்கையின் பலமான நண்பர். இதைவிட எமது சொந்த உறுப்பினராக ரணில் ஜெயவர்த்தனவும் இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பிரித்தானிய நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கை வம்சாவளியினர் ஐந்து பேர் போட்டியிட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இவர்களில் உமா குமரன், சொக்கலிங்கம் யோகலிங்கம், ரணில் ஜெயவர்த்தன மற்றும் சாம்லி பெர்னான்டோ ஆகியோர் பற்றிய தகவல்கள் ஏற்கெனவே வெளியாகியிருந்தன.

எனினும், இலங்கை வம்சாவளியினரான ரதி அழகரத்தினம் என்ற வேட்பாளரும் இந்தத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்துள்ளார். (எ-11)

## பொதுத் தேர்தலை...

வெளிவிவகார அமைச்சர் ஜீஎல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்பொழுது பாரிய குழப்பகரமான அரசியல் சூழ்நிலை உருவாகியுள்ளது, எனவே நாட்டில் நிலவிவரும் குழப்பகரமான அரசியல் சூழ்நிலைகளுக்கு தீர்வுகாண உடனடியாக பொதுத் தேர்தல் நடத்தவேண்டுமென முன்னாள் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய தேர்தல் முறைமை மாற்றப்பட்டாலும் மாற்றப்படா விட்டாலும் பொதுத் தேர்தலை நடத்த வேண்டியது கட்டாயமான ஒரு விடயமாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சிறுபான்மை அரசாங்கமொன்றினால் நாடு நிர்வாகம் செயயப்படுவதனை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருத்தச்சட்டங்களுக்கமைய எவ்வாறான தேர்தல் முறைமை அமுல்படுத்தப்பட்டாலும், எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிக்கும் பலம் எங்களிடம் காணப்படுகின்றது.

எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்திற்கு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வழங்கி வரும் ஆதரவை உடனடியாக நிறுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரம் பாரிய பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை தற்போதைய அரசாங்கத்தின் 100 நாள் திட்டம் தோல்வியடைந்துள்ளமை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை மூலம் நிரூபணமாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.